# கர்மயோகம்

(விளக்கவுரை)



வே. குமாரவேல்

மணிமேகலைப் பிரசுரம்

# கர்ம யோகம்

(விளக்கவுரை)

வே. குமாரவேல்


[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

# கர்ம யோகம்

(விளக்கவுரை)

வே.குமாரவேல்

**மணிமேகலைப் பிரசுரம்**

த.பெ. எண் : 1447,
7 (ப.எண் : 4), தணிகாசலம் சாலை,
தியாகராய நகர், சென்னை - 600 017
தொலைபேசி : 24342926
தொலைநகல் : 24346082
இ - மெயில் : manimekalai@eth.net

## நூல் விவரம்

| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | : | கர்ம யோகம் - விளக்கவுரை |
| ஆசிரியர் | : | வே.குமாரவேல் |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு ஆண்டு | : | 2003 |
| பதிப்பு விவரம் | : | முதல் பதிப்பு |
| உரிமை | : | ஆசிரியருக்கு |
| தாளின் தன்மை | : | 11.6 கி.கி. |
| நூலின் அளவு | : | கிரௌன் சைஸ் (12.5 x 18.5 செ.மீ.) |
| அச்சு எழுத்து அளவு | : | 10 புள்ளி |
| மொத்த பக்கங்கள் | : | 128 |

**நூலின் விலை : ரூ. 32-00**

| | | |
|---|---|---|
| அட்டைப்பட ஓவியம் | : | ராமு |
| லேசர் வடிவமைப்பு | : | சித்ரா லேசர் பிரிண்டர்ஸ்<br>சென்னை - 600 015<br>தொலைபேசி : 24332272 |
| அச்சிட்டோர் | : | B.V.R. ஆஃப்செட்<br>சென்னை - 600 014 |
| நூல் கட்டுமானம் | : | தையல் |

# முன்னுரை

இவ்வுலகில் மனவேதனையின்றி மனிதனால் வாழ முடியுமா? முடியும் என்பதுதான் கர்மயோகம். இதைவிட வேறு என்ன வேண்டும்?

மனிதன் வேதனைப்படாமல் வாழ்வதற்கான வழி முறைகள் தெளிவாக கர்மயோகத்தில் கூறப்பட்டுள்ளன. உலக வாழ்க்கையைக் கண்டு பயந்து ஒதுங்கிவிடுவதோ, துறவியாகி விடுவதோ அல்ல கர்மயோகம்.

இதை தெளிவாக நான்காவது சுலோகத்தில் பகவான் கூறுவதை நான் பின்வருமாறு கவிதையாக வடித்தேன்.

''அகிலத்தில் கர்மத்தை
அலட்சியம் செய்துவிட்டால்
ஆத்ம சொரூபத்தை
அடைந்திட மாட்டாய்!
வெற்று சந்யாசத்தால் மட்டுமே
வென்றிட மாட்டாய் நிறைநிலையையே!''

மனிதன் இவ்வுலகில் வாழ்ந்து அனுபவப்பட்டு தெளிவடைவதே கர்மயோகம். ஆனால் வாழும்போது எப்படி வாழ வேண்டும்; பிரச்சினைகள் நம்மை சந்திக்கும்போது அவற்றிற்கு எப்படி நாம் முகம் கொடுக்க வேண்டும்; அவற்றால் ஏற்படும் நன்மை - தீமைகளை எந்தக் கண் கொண்டு நாம் பார்க்க வேண்டும் - என்பதற்கான தெளிவை கர்மயோகம் நமக்குக் கொடுக்கின்றது.

வயிற்றில் குழந்தையைச் சுமக்கும் தாய் வேதனைகளை எல்லாம் மகிழ்ச்சியாக ஏற்றுக் கொள்கின்றாள். ஏனென்றால் அவளுக்குத் தெரியும் பத்து மாதங்களில் குழந்தை பிறந்து

விடும். அதன்பிறகு இந்த வேதனை ஏற்படப் போவதில்லை என்பது. இது அவளிடம் உள்ள தெளிவு. குழந்தை பிறந்தவுடன் பெருமகிழ்ச்சியை அவள் முகத்தில் காணமுடிகின்றது.

வாழ்க்கையில் வேதனையென்று கூறுவதையும் மகிழ்ச்சியாக மாற்றிக் கொள்ள முடியும். இவ்வுலக வாழ்க்கை முள்படுக்கையல்ல; மலர் இதழ்களால் ஆன மென்மையான படுக்கையென்பதைப் புரிந்து கொள்ள முடியும். இதற்கு ஒவ்வொரு பிரச்சினை ஏற்படும்போதும் அதைப்பற்றிய தெளிவை நாம் பெற்றுக் கொள்ள வேண்டும். எங்கே? எப்படி பிரச்சினைகள் தோன்றின என்பதை சிந்திக்க வேண்டும்.

வாழ்க்கையில் மன வேதனை என்பதை ஆராய்ந்தால் அது எப்படி ஏற்படுகின்றது? அதன் வேர் எது? அல்லது அதன் விதை எது? மனிதனை மிகவும் மோசமான நிலைக்குக் கொண்டு செல்லும் வேதனையின் பிறப்பிடம்தான் எது?

அதுதான் ஆசை! விதைபோல் வந்து விருட்சம்போல் வளர்ந்து மனிதனின் முழுசக்திக்கும் எதிர்த்து சவால் விடும் ஒன்று! என்னோடு மோதி வெற்றி பெற முடியுமா என்று மனிதனைப் பார்த்து சவால் விடும் சக்தி!

'ஸ்வதர்மம்' என்ற ஒன்றை கர்மயோகம் நமக்கு கூறுகின்றது. ஸ்வதர்மத்தின் வழியில் வாழ்ந்தால் எப்போதுமே துன்பம் இல்லாத வாழ்க்கை வாழ முடியும். ஸ்வதர்மம் என்பது பயப்படக்கூடிய காரியம் அல்ல! தற்காலத்தில்கூட அதிகமானோர் இதன் வழித்தான் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். ஆனால் சுயநலமும், ஆசையும்தாம் இவ்வழியில் முன்னோக்கிச் செல்ல முடியாமல் இழுத்துப் பிடிக்கின்றன.

நம் மூதாதையர்கள் தொட்டு நாம் வாழ்ந்து வரும் வாழ்க்கை முறை ஸ்வதர்மத்தைச் சார்ந்ததாகவே

இருக்கின்றது. ஆனால் பயிர் வளரும்போது கூடவே களையும் வளர்வதுபோல் நமக்கு தேவையில்லாதவையும் நம் வாழ்வோடு சேர்ந்தே வளர்கின்றது. நாம் செய்ய வேண்டியதெல்லாம் களையைக் களைந்து விடுவதுதான். புதிதாக விதைக்க ஒன்றுமே இல்லை. ஏற்கனவே விதைக்கப்பட்டு பயிர் வளர்ந்து கொண்டுதான் இருக்கின்றது. ஆகவே எது நம்மோடு உள்ளது? இடையில் எது நம்மோடு வந்து சேர்ந்துள்ளது என்பதை அறிந்து அவற்றை அகற்றி விட்டால் நாம் யார் என்பதை நம்மால் புரிந்து கொள்ள முடியும். இதற்கும் நாம் சிரமப்பட வேண்டியதில்லை. கர்மயோகத்தில் ஸ்வதர்மத்துக்கிடையே புகுந்து நம்மைக் குழப்புபவை எவை என்றும் அவை எத்தனை விதமாக செயல்படுகின்றன என்றும் அவற்றைக் களைந்து விடுவது எப்படி என்றும் தெளிவாகக் கூறப்படுகின்றது.

ஸ்வதர்மத்தின்படி வாழ்ந்து வரும் முறையைப் பின்பற்றும் நம் வாழ்க்கையில் ஆசையெனும் விதையால் ஏற்படும் கோபம், வெறுப்பு, பழிவாங்கல், போட்டி, பொறாமை என்று பலப்பல தீய சிந்தனைகளும் செயல்களும் வளர்ந்து நமது ஸ்வதர்மத்தை மூடி மறைத்து விடுகின்றன. நாம் ஆசையை மட்டும் நம்மிடம் இருந்து அகற்றி ஸ்வதர்மத்தின்படி வாழத் தொடங்கினால் வாழ்க்கையில் வெறுப்பில்லாமல் துறவு இல்லாமல் முழுமையாக வாழ்க்கையை அனுபவித்து இறைவனை அடைய முடியும்.

ஸ்வதர்மம் என்றால் என்ன? நாம் எப்படி வாழ வேண்டும் என்று வழிமுறைகளைக் கூறுவதுதான் ஸ்வதர்மம். நமது அறிவுக்கும் தகுதிக்கும் ஏற்றாற்போல் இவ்வுலகில் நமக்காக உள்ள கடமைகளைச் செய்வதுதான் ஸ்வதர்மம்.

நாம் கர்மயோகத்தின் வழிமுறைகளைப் பின்பற்றி வாழ்க்கையை அமைத்துக் கொண்டால் வாழ்க்கை நூறு சதவீதம் வெற்றி பெறும் என்பது உறுதியானது. தெளிந்த

நீரோடைபோல் நம்மை நாமே புரிந்து கொள்ள கர்மயோகம் உதவுகின்றது.

நம்மைப் படைத்த இறைவன் நமக்கு வேண்டிய எல்லாவற்றையும் படைத்து - நாம் எப்படி வாழ வேண்டும் என்ற வழிமுறைகளையும் வகுத்து - நம்முடனேயே அவன் இருக்கும்போது துன்பம் எப்படி நம்மைப் பாதிக்கின்றது என்பதற்கான விடையையும், அந்த துன்பத்தில் இருந்து விடுதலை பெறுவதற்கான வழிமுறைகளையும் கர்மயோகத்தில் பகவானே கூறுகின்றார். ஆகவே ஆர்வத்துடன் இதை ஏற்று உண்மை வாழ்க்கையை உணர்ந்து தெளிவடைந்து வாழ்வோமாக!

- வே.குமாரவேல்

# என்னுரை

நான் இந்துமத தத்துவங்களின் அறிவைப் பெற்றுக் கொள்வதற்காக சுவாமி விவேகானந்தரின் நூல்களைப் படித்தபோது அதில் ''இந்துமதம் என்ற பழத்தின் சாரம்தான் பகவத்கீதை'' என்ற வாசகத்தைப் படித்தேன். அதன் பிறகு பகவத்கீதையைப் படிக்க வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது. அதைப் படிக்கும்போது அதில் கர்மயோகம் என்ற பகுதி தற்கால வாழ்க்கைக்கு மிகமிக அவசியமானது என்பதை அறிந்ததால் அதன் கருத்துக்கள் பாமரமக்களையும் சென்றடைய வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது. ஆகவேதான் இந்நூலை எழுதும் முயற்சியில் ஈடுபட்டேன். கர்மயோக சுலோகங்களை கவிதையாக மட்டுமே எழுதிய பிறகு அதற்கு விளக்கமும் எழுதினால்தான் சாதாரண மக்களையும் சென்றடையும் என்று முடிவு செய்து விளக்கவுரையாக மாற்றினேன்.

''மனிதன் தற்கொலை செய்துகொள்வது ஏன்?''

''மனைவியை வெட்டிக் கொன்றுவிட்டு தானும் தற்கொலை!''

''குழந்தைகள் உள்பட குடும்பத்தோடு விஷம் குடித்து தற்கொலை!''

''தந்தையைக் கொன்ற மகன்!''

இப்படிப்பட்ட செய்திகள் பத்திரிகைச் செய்திகளாக நமக்குக் கிடைக்கின்றன. படித்த பட்டதாரிகளும், உயர்ந்த பதவிகளில் இருப்பவர்களும் பணக்காரர்களும் என்று எவரையுமே இந்தத் தற்கொலை விட்டு வைக்கவில்லை! இதற்கு என்ன காரணம்? விரக்தி!

விரக்தி எப்படி ஏற்படுகின்றது? தான் எதிர்பார்த்தது நடக்காததால். தனது எதிர்பார்ப்பு என்பது தன்னுடைய ஆசையால் ஏற்படுவது. இந்த ஆசையை வெற்றி கொண்டால்

அமைதியான வாழ்க்கை ஏற்படுகின்றது. ஆசையை நமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து அதை அழிப்பது எப்படி என்பதை கர்மயோகம் நமக்குக் கூறுகின்றது. ஆகவே கர்மயோகம் மக்களைச் சென்றடைய வேண்டும்.

இந்து மக்களிடம் தற்போதும் உள்ள ஜாதிக் கலவரம், ஜாதிகளைக் காரணம் காட்டி கொலை, களவு, கற்பழிப்பு என்று பஞ்சமாபாதகங்களை குறிப்பிட்ட பிரிவினர் மீது பிரயோகிப்பது; அதற்கு நியாயங்கள் கற்பிப்பது போன்றவை கொடுமையிலும் கொடுமையாகும். இப்படிப்பட்ட ஒரு நிலை மேலைநாடுகளில் குறைவாகவே உள்ளது. அப்படியானால் பல வருடங்கள் பழமை வாய்ந்த நமது வாழ்க்கை முறையில் மனிதநேயம் இல்லையா? என்ற கேள்வி எழுகின்றது. மிகமிக நுணுக்கமான அறிவைப் பெற்றிருந்த ஞானிகளும் ரிஷிகளும் பாதுகாத்து வந்த வாழ்க்கை முறையில் மற்றவர்களை அடிமைப் படுத்தும் முறை எப்படி வந்தது? இதற்கான விடையை கர்ம யோகத்தில் இருந்தே நாம் பெற்றுக்கொள்ள முடியும்.

நாட்டின் நிர்வாகத்தை திறமையாக நடைமுறைப் படுத்த தகுதியின் அடிப்படையில் தொழில்களைப் பகிர்ந்தளித்து அது பரம்பரையாக நடைமுறைப்படுத்தப் பட்டது. இதைத்தான் சுயநலம் கொண்ட அதிகாரவர்க்கம் உயர்ந்த ஜாதி, தாழ்ந்த ஜாதி என்று பிரித்து சுயலாபம் பெற்று வருகின்றது. இதற்கான விளக்கத்தை கர்மயோகத்தில் தெளிவாக அறிந்துகொள்ள முடியும்.

மனிதன் தற்காலத்தில் மிகவும் வேகமாகச் செயல்பட வேண்டுமென்ற கட்டாயத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளான். ஆகவே அவன் அமைதியை இழந்து தடுமாற்றத்துடன் வேகமாக இயங்கிக் கொண்டிருக்கின்றான். அமைதி வேண்டும் என்று இயங்காமல் இருந்து விட்டால் அவன் இவ்வுலகில் வாழ்வதற்குத் தகுதியற்றவன் என்று சமுதாயம் ஒதுக்கி வைத்துவிடும். நாம் அமைதியான மனதையும் வேகமான செயற்பாட்டையும் கொண்டவர்களாக இருக்க வேண்டும். இதற்கான வழிமுறைகளை கர்மயோகம் நமக்குக் கொடுக்கின்றது.

மனிதன் இவ்வுலகில் உள்ள எவ்விதமான செயற் பாட்டுடன் இணைந்து செயற்பட்டாலும் அவற்றால் ஏற்படும் பாதிப்புகளால் வேதனைப்படாமல் மனதை அமைதியாக அவனால் வைத்துக் கொள்ள முடியும். இதற்கான வழிமுறைகளை தற்கால இயந்திர வாழ்க்கை வாழும் மக்கள் அறிந்துகொள்ள வேண்டும். அதற்கான தெளிவான வழி கர்மயோகத்தை அறிந்து கொள்வதேயாம்.

பகவத்கீதை அல்லது கர்மயோகம் என்றதும் அதிகமான இளைஞர்கள் இது வயதானவர்களுக்குரியது என்று முடிவு செய்து விடுகின்றனர். இது தவறான கருத்து. கர்மயோகம் இளைஞர்களின் தெளிந்த அறிவையும் உலக இயக்கத்தில் துணிந்து செயற்பட மனதைரியத்தையும், தோல்விகள் ஏற்பட்டால் துவண்டு விடாத சக்தியையும் கொடுக்கின்றது. ஆகவே இளைஞர்கள் கர்மயோகத்தைப் படித்து மகிழ்ச்சியான வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டுமென்பதே எனது விருப்பம்.

பெருங்கடலில் ஒரு துளி நீரை எடுத்து அதை பல ஆயிரமாகப் பிரித்து அந்தப் பகுதி நீரைக் கொடுப்பது போன்றதுதான் நான் பகவத்கீதையில் இருந்து கர்ம யோகத்தை எடுத்து அதற்கு விளக்கம் எழுதிய இந்நூல். ஆயினும் கடல் நீரைத் துளியாகப் பிரித்தாலும் அதில் அந்த நீரின் தன்மை மாறாமல் இருப்பதுபோல், இந்நூலிலும் வாழ்க்கையை அறிந்து, வேதனையில்லாத, சிக்கல்கள் இல்லாத வாழ்க்கையை அமைத்துக் கொள்ள தேவையான கருத்துக்கள் இருக்கின்றன என்பதை என்னால் உறுதியாகக் கூற முடியும். காரணம் இக்கருத்துக்கள் பகவானால் நமக்கு அருளப்பட்டவை. ஆகவே கர்மயோகத்தைப் படித்துத் தெளிவடைந்து பூரணமான வாழ்வை வாழ்ந்து இறைவனை அடைவோமாக!

- வே.குமாரவேல்

# நன்றியுரை

ஸ்வதர்மத்தின் வழியே வாழ்ந்து எனக்கு வாழ வழிகாட்டிய மறைந்த என் தந்தை வேதமுத்து அவர்களுக்கு எனது முதல் நன்றி. இவ்வுலகில் என்னை சிந்திக்கத் தூண்டிய, செயல்களைச் செய்த உற்றார், சுற்றார், உலகோர் அனைவருக்கும் நன்றிகள் உரித்தாகட்டும்.

இறைவனைத் தேடிய நான் பகவத்கீதையை நாடினேன். அப்போது என்னோடு வேலை செய்த தமிழ் நாட்டின் எஸ்.பாலு என்ற நண்பர் தமிழ்நாட்டிலிருந்து ‘கத்தார்’ நாட்டிற்கு பெறுமதி மிக்க பகவத்கீதையை சுமந்து வந்து கொடுத்தார். பாலுக்கு அழும் குழந்தையை மார்போடு அணைத்துப் பாலூட்டும் தாயைப்போல் இருந்தது, நண்பர் பாலு எனக்குச் செய்த உதவி. அந்த பகவத்கீதையின் துணையைக் கொண்டுதான் இந்த கர்மயோக விளக்கவுரையை எழுதினேன். ஆகவே அவருக்கு நன்றிகூற எப்போதும் கடமைப்பட்டவனாக இருக்கின்றேன்.

மனநிறைவு! இதைவிட மனிதனுக்கு இவ்வுலகில் என்ன வேண்டும். இதை இந்த கர்மயோக விளக்கவுரை வெளியிடுவதன் மூலம் மணிமேகலைப் பிரசுரம் எனக்குத் தந்துள்ளது. இதற்காக ரவி தமிழ்வாணன் அவர்களுக்கும் மணிமேகலைப் பிரசுரத்தில் தொழில் புரியும் அனைவருக்கும் எனது இதயப்பூர்வமான நன்றிகள். நான் எழுதிய இரண்டு நூல்களையும் வெளியிட்ட மணிமேகலைப் பிரசுரம் மூன்றாவது நூலையும் வெளியிட்டு எழுத்துலகில் என்னை உயர்ந்த நிலைக்கு அழைத்துச் செல்கிறதே! இதற்காக ரவி தமிழ்வாணன் அவர்களுக்கு மீண்டும், மீண்டும் நன்றிகள்.

- அன்புடன்

வே.குமாரவேல்

# கர்மயோகம்

## ஓம் - 1

*ஜ்யாயஸீ சேத்கர் மணஸ்தே மதா புத்திர் ஜநார்த்ந*
*தக்கிம் கர்மணி கோரே மாம் நியோஜயஸி கேஸவ*

*அர்ஜுனன் சொன்னார்: ''ஜனார்த்தன! கர்மத்தைக் காட்டிலும் ஞானம் சிறந்தது என்று உங்களால் கருதப்பட்டால் கேசவ! பின்னர் என்னை பயங்கரமான கர்மத்தில் ஏன் ஈடுபடுத்துகிறீர்கள்?''*

''கர்மத்திலும் உயர்ந்தது ஞானமென்ற
கருத்தே உனதாயின் ஜனார்த்தனா!
கர்மமென்ற கொடுவினையில்
கலந்திட பார்ப்பது மேன் என்னைக் கேசவனே!''

வாழ்க்கையில் பல பிரச்சினைகளை சந்தித்து அனுபவப்பட்ட முதியவர்கள் உலக வாழ்க்கையை புரிந்து கொள்கின்றனர். இவர்களே தத்துவ ஆராய்ச்சியும் செய்தால் ஞானியாகி விடுகின்றனர். இப்படிப்பட்டவர்களில் ஒருவர்தான் ஞானசேகரன். கோவில்களில் செய்யும் கதாபிரசங்கங்களும், தினப் பத்திரிகைகளில் எழுதும் தத்துவ ஆராய்ச்சிக் கட்டுரைகளும் அவரை அடையாளம் காட்டுகின்றன.

இளம் வயதிலேயே இரண்டு பெண் குழந்தைகளையும், ஒரு மகனையும் கொடுத்து விட்டு மனைவி விண்ணுலகம் சென்று விட்டாள். பல பிரச்சினைகளுக்கு மத்தியில் குழந்தைகளை வளர்த்தார். சொந்தபந்தங்கள் இவர்களை உதறிவிட்டு ஒதுங்கிக் கொண்டன. பந்த பாசங்கள் பறந்து விட்டன.

இறைவனை உறுதியாக நம்பி கோவில்களில் கதாபிரசங்கங்கள் நடத்தி அந்த வருவாயில் குழந்தைகளை வளர்த்தார். தேவதைபோல் இரண்டு பெண்களும் ஒரு வாலிபனும் வீடு நிறைந்த செல்வங்களாக வலம் வந்தனர்.

புலிக்குப் பிறந்தது பூனையாகி விடாது என்பார்கள். மகனும் தகப்பனைப் போலவே இளம் வயதிலேயே தத்துவக் கட்டுரைகளைத் தேடித் தேடிப் படித்தான்; அறிவை வளர்த்துக் கொள்ள ஆராய்ச்சிகளும் செய்தான். ஞானத்தைப் பெற்றுவிட வேண்டும் என்ற வேட்கை அவனிடம் இருந்தது.

ஞான சேகரனின் பெண்குழந்தைகள் இரண்டு பேருமே திருமணப்பருவத்தை அடைந்தவர்கள். ஆகவே அவர்களுக்கு திருமணம் செய்துவைக்க வேண்டிய கடமை அவருக்கு இருந்தது. அதற்குத் தேவையான பணம் அவரிடம் இல்லை. ஆகவே, மகனையும் தொழில் ஒன்றில் சேர்த்து விட்டால் மகனின் உழைப்பும் மகள்களின் திருமணத்திற்கு உதவியாக இருக்கும் என்று நினைத்து, ''மகனே! இப்படி புத்தகக் கட்டுக்குள்ளேயே முடங்கிக் கிடக்கின்றாயே, நல்ல தொழில் ஒன்றைத் தேடிக் கொள். உனது இரண்டு தங்கை களுக்கும் திருமணம் செய்வதென்றால் எனது உழைப்பு மட்டும் போதக்கூடியதாக இல்லையே, நீயும் சிறிது பணம் சேர்த்துக் கொடுத்தால் எனக்கு உதவியாக இருக்கும். தங்கைகளை நல்ல இடத்தில் திருமணம் செய்து கொடுத்து விடலாம்'' என்றார்.

''அப்பா, நான் நிறையவே படிக்க வேண்டும். தத்துவ ஆராய்ச்சி செய்ய வேண்டும். வாழ்க்கையின் நுணுக்கங்கள், சமுதாய அமைப்பு பற்றிய ஆராய்ச்சி, இறைவனைப் பற்றிய ஆராய்ச்சி என்று எனது அறிவை விரிவுப்படுத்திக்கொள்ளத் திட்டமிட்டுள்ளேன். இவ்வுலக வாழ்க்கையில் சிக்கிக் கொள்ள எனக்கு விருப்பம் இல்லை. நீங்களும்தான் எத்தனையோ

கட்டுரைகளில் உலக வாழ்க்கையில் உள்ள சிக்கல்களைப் பற்றி எழுதியுள்ளீர்கள். துறவறம், ஆன்மீகம் சிக்கல்கள் இல்லாத தெளிவான நீரோடைப் போன்றது என்றெல்லாம் எழுதியிருக்கின்றீர்கள். இப்போது நீங்களே என்னை உலக வாழ்க்கையில் சிக்கவைக்கப் பார்த்தால் எப்படி?''

தந்தை ஒரு ஞானி; அதேநேரம் கர்மயோகத்தில் தொடர்பு கொண்டவர். தனக்கென உள்ள கடமைகளைச் செய்ய வேண்டும் என்பது இவ்வுலகில் வாழ்பவர்களுக்கு விதிக்கப்பட்டது என்பதை அறிந்தவர். ஆனால் மகனுக்கோ படிப்பறிவு உண்டு; ஆனாலும் தந்தையின் அளவு இல்லை. அனுபவ அறிவோ மிகமிகக் குறைவாகவே உள்ளது. ஆகவேதான், தந்தையிடம் தந்தையின் அறிவைப் பற்றியே கேள்வி கேட்கின்றான். கர்ம யோகத்தைப் பற்றி மகன் அதிகமாகவே அறிந்து கொள்ள வேண்டியுள்ளது.

## ஓம் – 2

*வ்யாமி ஸ்ரேணேவ வாக்யேன புத்திம் மோஹயஸீவ மே*
*ததேகம் வத நிஸ்சித்யேன ச்ரேயோ ஹமாப்னுயாம்.*

*குழம்பியது போன்ற பேச்சினால் என் புத்தியைக் கலக்குகிறீர்கள் போலிருக்கிறதே! எதனால் நான் மேன்மையை அடைவேனோ அந்த ஒன்றைத் தீர்மானித்துக் கூறுங்கள்.*

''மதியை மயக்கும் வார்த்தைகள் போல்
முன்பின் முரண்பட பகர்கின்றாய்!
இயம்பிடு இங்கு உறுதியுடன்
நான்பெற சிறப்பொன்றினையே!''

ஞானசேகரன் எழுதிய சில கட்டுரைகளில் ஞானமே சிறந்தது என்று எழுதியிருந்தார். இதைப் படித்த மகன் அதை மட்டுமே மனதில் நிறுத்தி வைத்தான். அதன் பிறகு கர்மத்தின் உயர்வைப் பற்றியும் மற்றுமொரு கட்டுரையில் எழுதினார். இதையும் மகன் படித்துப் பார்த்தான். மற்றும் ஒரு கட்டுரையில் உனக்கு கர்மம் செய்வதற்குத்தான் பொறுப்பு நீ யோகத்தில் நிலைபெற்றுக் கர்மம் செய் என்று பொருள்பட எழுதினார்.

இதைப் படித்தவுடன் மகனின் சிந்தனை ஓட்டம் தெளிவாக இல்லை. தங்கைகளுக்கு திருமணத்திற்கு பணம் தேடித் தரும்படியும், தொழில் தேடிச் செய்யும்படியும் தந்தை கூறியது, தான் தேடிப் போகும் ஞானத்தை தனக்குக் கிடைக்க விடாமல் செய்து விடுமோ என்று பயந்தான். உலகக் கடமைகளைச் செய்வதுதான் எனக்கு பொறுப்பு என்றால், ஞானத்தைத் தேடும் வழிகளை எப்படி கண்டுபிடிப்பது? உலகக் கடமைகளில் நான்

ஈடுபட்டு விட்டால் ஞானம் பெற்றுவிட முடியாத நிலை ஏற்பட்டு விடுமோ? துறவறத்தை மேற்கொண்டால் சாந்தி கிடைக்குமா? உலக பந்தங்களில் சிக்கும் தங்கைகளின் திருமணத்திற்கே தன்னை உதவி செய்யும்படி தந்தை கூறுகின்றாரே?

மகனின் சிந்தனையில் தடுமாற்றம் ஏற்பட்டது. எங்கேயோ சிக்கல்கள் இருப்பதுபோல் தோன்றியது. ஆகவே, அவர் எழுதிய அறிவுரைகளுக்கு அவரிடமே விளக்கம் கேட்டான்.

## ஓம் - 3

*லோகேஸ்மிந் த்விவிதா நிஷ்டா புரா ப்ரேரக்தா மயானக*
*ஞானயோகேந ஸாங்க்யானாம் கர்மயோகேன யோகினாம்*

*தத்துவத்தை ஆராய்ச்சி செய்வதன் மூலம், விவேகம், வைராக்கியம், துறவு முதலியவை வாயிலாக தெளிவுப்பட ஆத்ம சொரூபத்தை நேராக கிரகிக்குமானால் அதற்கு ஞான யோகம் என்று பெயர். தத்துவ ஆராய்ச்சி செய்பவர்களுக்காக ஞானயோகம் என்னால் இயற்றப்பட்டது.*

*கர்மத்தை முறையாகச் செய்து வருவதால் அறிவு தெளிவடைகிறது; அப்படி தெளிவடைந்த அறிவு, ஆத்ம சொரூபத்தை விளக்குகிறது. இவர்களுக்காக என்னால் இயம்பப்பட்டதே கர்மயோகமாகும்.*

''பாபமற்ற மன்னவனே
பகர்ந்தேன் யெதையான் அறிந்திடுவாய்!
தத்வ விசாரம் செய்பவர்க்கு
தந்ததே ஞான யோகமாகும்!
தானே ஞானத்தை அனுஷ்டிப்பவர்க்கு
தந்ததே கர்ம யோகமாகும்!
என்றே நன்னெறி இரண்டாக
இயம்பியுள்ளேன் அறிந்திடுவாய்!''

தத்துவ ஆராய்ச்சி செய்து ஞானம் பெற்ற சுவாமி விவேகானந்தர் தத்துவ ஆராய்ச்சிபற்றி கூறுவதைப் பார்ப்போம்:-

''காலம், இடம் இந்த இரண்டு பரிமாணங்களின் ஆளுகைக்கு உட்பட்டு நிற்கும் அறிவானது காலம், இடம்,

மனம், புலன்கள் இவற்றையெல்லாம் கடந்து நிற்கக்கூடிய முழுமையான, எல்லையற்ற, இரண்டற்ற ஒன்றாகிய தத்துவத்தை அடைந்து இரண்டறக் கலந்து விடும்.

நானே பரம்பொருள் என்ற உறுதியைக் கைவிடாதீர்கள். அதுதான் உண்மை. உலகின் எல்லையற்ற சக்தி உங்களுக்கே சொந்தமாகும். இந்தப் பிரபஞ்சத்தைப் படைத்து இதையும் மாயையையும் ஆட்சிபுரிவது ஒரே தெய்வம்தான் என்ற கருத்து வேதாந்தத்தின் ஆரம்பமே ஒழிய முடிவல்ல! இக்கருத்து வளர வளர எந்தக் கடவுள் வெளியே இருக்கின்றார் என்று நினைத்தோமோ அந்தக் கடவுள் (பரம்பொருள்) உண்மையில் நமக்குள்ளேயே இருக்கின்றார். ஏன்? நாமே அந்தக் கடவுளாக இருக்கின்றோம் எனபதை வேதாந்திகள் உணர்கின்றனர்.

அறியாமை நிறைந்த இந்த உலகத்தில் ஒளியாகவும் ஞானமாகவும் உள்ள ஒரே தத்துவத்தை உணர்பவன் எவனோ அவனுக்கே அழியாத அமைதி கிட்டுகிறது. வேறு யாருக்கும் இது கிட்டாது; கிட்டவே கிட்டாது.

உங்களுக்கு இயற்கையைவிட சக்தி அதிகம். இயற்கை உங்கள் கழுத்தை நெருக்குவதாக நீங்கள் ஒரு குழந்தையைப் போல் கனவு கண்டு பயந்தீர்கள். உங்கள் குறிக்கோள் இந்தப் பயத்தில் இருந்து விடுபடுவதுதான். இந்தக் குறிக்கோளை அறிவுப்பூர்வமாக மட்டுமல்லாமல் உண்மையிலேயே பார்த்து இந்த உலகத்தை உணர்வதைவிட நிச்சயமாக அதை நாம் உணர வேண்டும்; அப்பொழுதுதான் நாம் சுதந்திரமானவர்கள் என்பதை உணர்கின்றோம். இயற்கையின் நாம ரூபக்காட்சி போன்ற மனதின் பொய்த் தோற்றங்கள் அப்பொழுது மறைந்து விடும். மாயை இப்போது இருப்பதைப் போல ஒரு பயங்கரக் கனவாக இல்லாமல் அழகுமிகுந்ததாக மாறி விடும். அபாயங்கள், துன்பங்கள், கஷ்டங்கள் எல்லாம் தெய்வத்தன்மைப் பெற்று விடும். அவற்றின் உண்மை இயல்பும் நமக்குத் தெரிந்துவிடும்.

ஒரே வார்த்தையில் சொல்லப் போனால் நாம் அவனுக்குள் இருந்து தோன்றி அவனுக்குள்ளேயே வாழ்ந்து முடிவில் அவனுக்குள்ளேயே ஒடுங்கிவிடுகின்றோம்.

நான் அனுபவிக்கும் துன்பத்திற்கு நானே காரணம். ஆகவே நானேதான் இதற்கு பரிகாரமும் தேடிக் கொள்ள வேண்டும் என்று நமக்கு நாமே சொல்லிக் கொள்ள வேண்டும்.

பாறைபோல் உறுதியாக நில்! உனக்கு அழிவே இல்லை, நீயே பிரபஞ்சத்தின் கடவுள்! நீயே ஆன்மா! உன்னைப் பயன்படுத்துவது எது? உன்னை மேலே வரவிடாமல் தடுப்பது எது? அறியாமையும் மாயையுமே! உன்னை வேறு எதுவும் கட்டுப்படுத்த முடியாது. நீயே தூய்மையும் ஆனந்தமும் நிறைந்த பரம்பொருள்.

இதயத்தில் உள்ள எல்லா ஆசைகளையும் துறந்து விட்டால் அழியும் தன்மையுள்ள நாம் அழியாத்தன்மையைப் பெற்று விடுவோம். அப்போது மனிதனே கடவுளாகி விடுவான்.

அவருக்கும் ஆசையில்லை, முழுமையடைந்த மனிதனுக்கும் ஆசையில்லை. ஆனால் ஆசைப்படுவதற்கு வேண்டிய அறிவு அவருக்கில்லை. ஆனால் முழுமையடைந்த மனிதனுக்கோ ஆசைப்படுவதற்கு ஒன்றுமில்லை.

சத், சித், ஆனந்தம் (அறிவு, அன்பு, ஆனந்தம்) என்ற மூன்று குணங்களே பரம்பொருளுக்கு இருப்பதாகவும் ஆனால் அவை மூன்றும் இணைந்து ஒன்றாகவே இருப்பதாகவும் வேதாந்திகள் கூறுகின்றனர். இயற்கையின் ரகசியத்தை அறிந்து இயற்கையின் மூலமே இயற்கைக்கு அப்பாற்பட்ட பரம்பொருளை உணர்ந்தவன் மரணத்தை வென்று விடுகின்றான். உன்னுள் இருக்கும் உண்மையை நான் உணர்கின்றேன். உன்னுள் இருப்பதே எனக்குள்ளும் இருக்கின்றது; நானே அது.

நம்முடைய தனித்தன்மை என்ற அகங்காரம் அழிய வேண்டும். அப்போதுதான் நாம் உண்மையை உணர முடியும். அந்த உண்மைதான் கடவுள் என்பதையும் அதுதான் நமது

உண்மையான இயல்பு என்பதையும் அது எப்போதும் நமக்கு உள்ளேயும் நம்மோடும் கூடவே இருக்கின்றது என்பதையும் நாம் உணர முடியும்.

எனக்கு மரணமோ, பயமோ இல்லை; ஜாதி, மத பேதமில்லை. தந்தை, தாய், சகோதர, சகோதரிகள், நண்பர்கள், பகைவர்கள் யாருமே எனக்கு இல்லை. ஏனென்றால் நானே சச்சிதானந்த சொரூபம்; நானே ஆனந்தமயமான ஆன்மா; பாவமோ புண்ணியமோ இன்பமோ துன்பமோ என்னைக் கட்டுப்படுத்துவதில்லை. தலயாத்திரைகளுக்கோ, மத சாத்திரங்களுக்கோ, மூடநம்பிக்கைகளுக்கோ நான் கட்டுப் பட்டவனல்ல. நானே சச்சிதானந்த சொரூபம்! நானே ஆனந்த மயமான ஆன்மா! நானே ஆனந்தமயமான ஆன்மா!

இதுதான் ஞான யோகம்! இது ஆழ்ந்த தத்துவ ஆராய்ச்சியின் மூலமே கிடைப்பது.

இந்தக் கருத்துகள் சுவாமி விவேகானந்தர் அவர்கள் செய்த தத்துவ ஆராய்ச்சியில் இருந்து நமக்குக் கிடைத்தவை.

பகவான் ஞான யோகம் பெறும் வழிமுறைகளைக் கூறியது போல் இவ்வுலக வாழ்க்கையில் வாழ்ந்து கொண்டிருப்பவர்களுக்கு ஆத்தும சொரூபத்தை அடையவும் கர்ம யோகமென்ற யோகத்தைத் தந்துள்ளார். இதன்படி இவ்வுலக வாழ்க்கையில் வாழ்ந்து கொண்டே வாழ்க்கையை அறிந்து உலகத்தைப் புரிந்து ஆன்மாவையும் அறிந்து கொள்ள முடியும்.

இறைவனை அடைய கர்ம யோகமும் ஒரு வழியாகும். ஞான யோகம் அறிவைக் கொண்டு ஆராய்ச்சி செய்து பெற்றுக் கொள்ளப்படுவது. கர்மயோகம் இவ்வுலகில் வாழ்ந்தே அனுபவரீதியாக ஞானம் பெற்றுக் கொள்வது.

குடும்பத்தில் தலைமகனாகப் பிறந்துவிட்டால் கழுதை படாத பாடு பட வேண்டும் என்பார்கள். இதில் இருந்து மகானும் தப்பவில்லை. அவனுக்கு மூன்று தம்பிமார்கள் இரண்டு தங்கைகள். ஏழைக் குடும்பம் என்பதால் தந்தையும்

தாயும் கூலிவேலை செய்துதான் வாழ்க்கையை நடத்திக் கொண்டிருந்தனர். வறுமையின் காரணமாக மகானும் பத்து வயது முதலே பெற்றோரோடு சேர்ந்து உழைக்கத் தொடங்கி விட்டான். தன் சகோதரர்களும் தன்னைப்போல் கூலி வேலை செய்யக்கூடாது என்ற எண்ணத்தில் தனக்கு முடிந்தளவு பண உதவி செய்து அவர்களைப் படிக்க வைத்தான்.

உழைத்து, உழைத்தே நோயைத் தேடிக்கொண்ட தந்தை, மகானுக்கு இருபது வயதாகும்போதே இறந்து விட்டார். அவர் செய்த சேவை - பட்ட சிரமங்கள் மகானின் மனதை அதிகமாகவே பாதித்தது. தந்தையின் பிரிவால் தாய் படும் வேதனைகள் அவனை மேலும் வேதனைப்படுத்தின. எல்லாத் துன்பங்களுக்கும் பணமே காரணம் என்று முடிவு செய்தான். ஆகவே, ஓய்வில்லாமல் உழைத்தான். இரண்டு தங்கைகளுக்கும் வசதியான குடும்பத்தில் திருமணம் செய்து வைத்தான். மூன்று தம்பிமார்களையும் நன்றாகப் படிக்க வைத்து நல்ல தொழில்களில் சேர்த்து விட்டான். ஆகவே வசதியான குடும்பங்களில் இவர்கள் திருமணமும் செய்து கொண்டனர். மகானும் தனது தகுதிக்கேற்ப ஏழைக் குடும்பம் ஒன்றில் திருமணம் செய்துகொண்டு, தாயையும் தன்னுடன் வைத்துக் கொண்டான்.

ஆனால், வசதியான வாழ்க்கையை அமைத்துக் கொண்ட சகோதரர்கள் மகானை அண்ணனென்று கூறிக் கொள்ள வெட்கப்பட்டனர். இதையேதான் தங்கைகளும் செய்தனர். அண்ணன் படிக்காதவன், ஏழை, நாகரீகம் அறியாதவன், தற்கால உலக வாழ்க்கையை புரிந்துகொள்ள முடியாதவன் என்றெல்லாம் மகான்மீது குற்றச்சாட்டுகளைக் கூறி தொடர்புகளை குறைத்துக் கொண்டனர். சகோதரர்கள் நடந்துகொண்ட விதம் ஆழ்ந்து சிந்திக்க வைத்தது. மகான் சகோதரர்கள் நடந்துகொண்ட முறைகளை மட்டுமல்லாது சமுதாய அமைப்பைப் பற்றியும் சிந்தித்தான். சமுதாயத்தின் மேல் கோபமும் வெறுப்பும் ஏற்பட்டது.

தன் தாய், மகானைவிட மற்ற பிள்ளைகள் வசதியான வாழ்க்கை வாழ்வதை பெருமையாகப் பேசுவாள். ஆனால் அவர்கள் வீட்டிற்கு தாய் வருதலை அவர்கள் விரும்புவதில்லை. தலைமுடி நரை விழுந்து, பல் விழுந்து, மெலிந்து எண்பது வயதை எட்டிப்பிடித்துவிட்ட இவள் பழைய சேலையை உடலில் சுற்றிக்கொண்டு வெற்றிலை மென்று கொண்டு தற்கால நாகரீகத்திற்கு ஒத்துவராமல் பாசத்தை மட்டுமே மனதில் சுமந்துகொண்டு பேரக்குழந்தைகளையும் பெற்ற பிள்ளைகளையும் காணச் சென்றால், பிச்சைக்காரிபோல் இருக்கின்றாள்; நாகரீகம் தெரியாதவள்; இவள் வீட்டில் இருந்தால் வீட்டிற்கு வரும் நண்பர்கள் தங்களையும் மதிக்க மாட்டார்கள் என்ற கருத்தில் ஒவ்வொரு பிள்ளையும் திருப்பி அனுப்பிவிட்டார்கள். திருப்பி அனுப்பிவிட்டார்கள் என்பதைவிட வசைமொழி கூறி விரட்டிவிட்டார்கள் என்பதுதான் உண்மை.

தன் தாய் அவர்கள் வீட்டிற்குச் சென்று திரும்பி வரும் ஒவ்வொரு முறையும், அவள் வேதனைப்பட்டு கண்கலங்கும் போது மகான் கலங்கிடுவான். தான் பெற்ற பிள்ளைகளுக்காகவே உழைத்து, உழைத்து ஓடானவள். மார்பிலும் மடியிலும் போட்டு வளர்த்தவள். தாயின் உழைப்பை நேரடியாகவே பார்த்து கண்கலங்கியவன்தான் மகான். இப்போது தாயின் நிலைமையும் அவளின் மனவேதனையையும் பார்த்த மகான் இனிமேல் தன் தாயை எந்த உறவினர் வீட்டிற்கும் அனுப்புவதில்லை என்றும், தாயின் கடைசிக் காலம்வரை தன்னுடனேயே வைத்துக் கொள்வது என்றும் முடிவு செய்தான். தனது ஏழ்மைக்கு ஏற்றாற்போல் தனக்கு முடிந்த எல்லா வசதிகளையும் செய்து கொடுத்து தாயை மகிழ்ச்சிப் படுத்தினான்.

ஒரு நாள் மகானின் மகள் திருமணம் நிச்சயிக்கப் பட்டது. தனது மகளின் திருமணத்திற்கு தனது தாய் வாழ்த்த வேண்டும் என்பதில் அதிக மகிழ்ச்சியாக இருந்தான். வாழ்க்கையில் அனுபவப்பட்ட வயதானவர்கள் கடவுளைப்

போன்றவர்கள். இவர்கள் திருமணங்களில் மணமக்களை வாழ்த்துவது இறைவனே நேரில் வந்து வாழ்த்துவது போலானது என்பது மகானின் கருத்து. ஆகவே, தன் தாயின் வாழ்த்து மகளுக்குக் கிடைப்பதில் ஏகமகிழ்ச்சியில் இருந்தான்.

விடிந்தால் திருமணம். நள்ளிரவில் மகானின் தாய்க்கு உடல்நிலை மோசமாகிவிட்டது. உடனே வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றான். வைத்தியசாலையில் அனுமதித்து விட்டு வந்து, விடிய விடிய திருமணத்திற்கு ஆகவேண்டிய வேலைகளைச் செய்தான்.

விடிந்ததும் தாய் வைத்தியசாலையில் இறந்து விட்டாள் என்ற தகவல் அவனுக்குக் கிடைத்தது.

ஒரு பக்கம் தாயின் மரணம்; மறுபக்கம் மகளின் திருமணம் - எதைச் செய்வது! வேதனையில் அழுவதா! மகிழ்ச்சியில் சிரிப்பதா! ஒரு பக்கம் வாழ்க்கை முடிந்து விட்டது; மறுபக்கம் வாழ்க்கை தொடங்குகிறது. ஒரே நேரத்தில் இன்பத்தையும் துன்பத்தையும் மனது சுமந்தாக வேண்டும். இதுதான் விதி!

காலையில் திருமணத்தை நடத்திவிட்டு மாலையில் மரண ஊர்வலத்தை நடத்த முடிவு செய்தான். ஆகவே, தாயின் மரணத்தை யாருக்கும் அறிவிக்காமல் மனதுக்குள்ளேயே எரிமலைபோல் அடக்கி வைத்தான். பகவத்கீதையையும், பகவானையும் மனதில் நினைத்துக்கொண்டு முழு பாரத்தையும் இறைவனிடம் இறக்கி வைத்துவிட்டு மகளின் திருமணத்தை நடத்தினான். மணமக்களை மணமகனின் வீட்டிற்கு அனுப்பி வைத்துவிட்டு, மாலையில் மரண காரியங்களைத் தொடங்கினான்.

உறவினர்களுக்கெல்லாம் தகவல் அனுப்பினான். பிரிந்து சென்ற உறவினர்கள் எல்லாம் தாயின் மரணச் சடங்கிற்கு வந்திருந்தனர். ஆனால் மரணத்தை வைத்திய சாலையில் வைத்து விட்டு மகளின் திருமணத்தை நடத்தியது தவறு என்று விவாதிக்கவே அதிகமான உறவினர்கள் வந்திருந்தனர்.

வாக்குவாதங்கள் அதிகமாயின. இதில் வாக்குவாதங்களை அதிகப்படுத்தியவர்கள் - அந்தத் தாயை இகழ்ச்சிப்படுத்தி வீட்டைவிட்டு விரட்டி விட்டவர்கள்தாம். தாயை வீட்டை விட்டு விரட்டியபோதும் கௌரவப் பிரச்சினை, தாய் இறந்த போதும் கௌரவப் பிரச்சினைகளைப் பார்த்தார்கள். முதலில் தாய் வீட்டில் இருந்தால் வீட்டுக்கு வருபவர்கள் தங்களை மதிக்க மாட்டார்கள் என்ற கௌரவப் பிரச்சினை. இப்போது தாயை அனாதைபோல் வைத்தியசாலையில் இருந்து நேரடியாக மயானத்துக்கே கொண்டு சென்றதால் சமுதாயம் குறை கூறுமே என்ற கௌரவப் பிரச்சினை.

தாய் உயிரோடு இருந்தபோது பசிக்கு உணவு கொடுக்காதவர்கள், கணவனை இழந்து வயதான காலத்தில் தள்ளாடியபோது பிச்சைக்காரி என்று விரட்டியவர்கள், அந்த அம்மையின் கண்களில் கண்ணீர் கொட்டும்போது நீலிக் கண்ணீர் என்று கூறியவர்கள் இப்போது உயிரற்ற அந்த உடலுக்காக மகானை குற்றவாளியாக்கி சுற்றி நின்று கேள்வி கேட்கின்றனர்.

தாயின் இறுதி கிரியைகளையும் முடித்து விட்டு வீட்டுக்கு வந்த மகான் சிரித்தான். அவன் சிரிப்பில் தெளிவு இருந்தது. மனதில் பாரம் இருக்கவில்லை. பிரபஞ்சம் முழுவதும் பறப்பதுபோல் தோன்றியது. மனது மேகமில்லாத வானம் போல் இருந்தது. இந்த உலகம் அவனுக்குக் கொடுத்த தெளிவுக்காக இறைவனுக்கு நன்றி கூறிக்கொண்டான். உலகில் உள்ள அத்தனை செயற்பாடுகளுக்கும், மனிதர்களிடம் உள்ள அத்தனை உணர்வுகளுக்கும் நன்றி கூறினான். தனக்குக் கிடைத்த இந்த சுதந்திரம் இந்த உலக வாழ்க்கையில் இருந்து கிடைத்தது. ஆகவே இறைவனை உலகில் ஒவ்வொரு அணுவிலும் பார்த்தான். இந்த வெற்றி அவனுக்கு கர்மயோகத்தில் இருந்து கிடைத்தது. வாழ்ந்து பார்த்து முழுமையடைந்தவன் இவன்.

# ஓம் - 4

*ந கர்மணா மநாரம்பா ந்நைஷ்கர்ம்யம் புருஷேஸ்நுதே*
*ந சஸந்யஸநா தேவ ஸித்திம் ஸமதி கச்சதி*

*கர்மத்தை முறையாகச் செய்து அதில் முதிர்ச்சியடைந்து அதன் வழியே ஞானம் பெற்று பரிபூரணம் அடைய வேண்டும். பரிபூரணம் அடைவதற்கு முன்பே ஒருவன் கர்மத்தைத் துறந்து சந்யாசத்தை பின்பற்றினால் எந்தவொரு நன்மையும் பெற்றுவிடுவதில்லை. இப்படிச் செய்வதால் நிறை நிலையை அடைந்துவிட முடியாது.*

''அகிலத்தில் கர்மத்தை
அலட்சியம் செய்துவிட்டால்!
ஆத்ம சொரூபத்தை
அடைந்திட மாட்டாய்!
வெற்று சந்யாசத்தால் மட்டுமே
வென்றிடமாட்டாய் நிறைநிலையே!''

சாந்தனும், ஜெகனும் நெருங்கிய நண்பர்கள். சிறு வயதில் இருந்தே ஒன்றாகவே சேர்ந்து விளையாடி, ஒரே பாடசாலையில் படித்து வளர்ந்தவர்கள். இருவருமே நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். இருவரும் வளர்ந்து வாலிபப் பருவத்தை அடைந்ததும் குடும்பப் பொறுப்பு இருவருக்குமே சுமையாக இருந்தது. ஜெகன் நண்பனைப் பிரிந்து வேலை தேடி வெளியூர் சென்றான்.

குடும்ப நன்மைக்காக ஜெகன் முழுநேரமும் உழைத்தான். அவன் உழைப்பின் பயனாக சொந்தமாக வீடு கட்டினான். தனது தாய், தந்தை, சகோதரர்களை அவ்வீட்டில் குடிவைத்தான்.

தனது இரண்டு தங்கைகளுக்கும் திருமணம் செய்து வைத்தான். தனது தம்பியை தன்னைவிட ஒருபடி மேலே படிக்க வைத்தான். அவனுக்கு தனது நண்பர்கள் உதவியுடன் வேலையும் தேடிக் கொடுத்தான். குடும்பத்தில் ஏற்படும் ஒவ்வொரு பிரச்சினையையும் தானே முன்நின்று முடிவெடுத்து தீர்த்து வைத்தான். பெற்றோர் மகிழ்ச்சியடையும் எல்லாவற்றையுமே செய்து கொடுத்தான். அவனுக்கு திருமண வயது என்பதால் பெற்றோர் பெண் பார்த்து திருமணமும் செய்து வைத்தனர். ஒரு ஆணும், ஒரு பெண்ணுமாக இரண்டு குழந்தைகளுக்குத் தந்தையானான்.

காலப்போக்கில் சமுதாய சேவையும் செய்யத் தொடங்கினான். பொது சேவை செய்யும் அமைப்புகளுடன் தன்னை இணைத்துக் கொண்டான். இவனது சேவையும் நேர்மையும் சமுதாயத்தில் உயர்ந்த இடத்தை இவனுக்குப் பெற்றுக் கொடுத்தது.

ஒரு நாள் அந்த ஊர் கோவிலில் திருவிழா விமரிசையாக நடத்த வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. நிர்வாக அமைப்பின் முக்கிய பொறுப்பில் ஜெகன் நியமிக்கப்பட்டான். திருவிழாக் காலத்தில் துறவி ஒருவரை அழைத்து ஊர் மக்களுக்கு ஆசிவழங்க ஏற்பாடுகள் செய்யவேண்டும் என்பதும் கோரிக்கைகளில் ஒன்றாக இருந்தது. இதன் காரணமாக சிவயோகி என்பவர் கோவிலுக்கு வரவழைக்கப்பட்டார். அவரை வரவேற்கச் சென்ற ஜெகனுக்கு அதிர்ச்சியாகவும், ஆச்சர்யமாகவும் இருந்தது. அந்தத் துறவியின் முகம் அவன் கண்களுக்குப் பழக்கப்பட்ட முகம். ஆம்! சிவயோகியாக வந்தவர் ஜெகனின் பால்யகால நண்பன் சாந்தன்தான்.

வரவேற்பு முடிந்ததும் அன்று மாலையில் யோகியை ஜெகன் தனியாக சந்தித்தான். "எப்படி இத்தனை மாற்றங்கள்?" என்று கேட்டான்.

''இந்த உலக வாழ்க்கை எனக்குப் பிடிக்கவில்லை. உலக மாயையில் சிக்குண்டு தவிக்க நான் விரும்பவில்லை. எங்கு பார்த்தாலும் பொய்யும், புரட்டும், களவும், கொலையும் வஞ்சனைகளும் கற்பழிப்புகளும் என்று இவ்வுலகம் நிம்மதியில்லாமல் தடுமாறிய நிலையிலேயே சுழன்று கொண்டிருக்கின்றது. ஆகவே மனஅமைதியைத் தேடி நான் துறவறத்தை நாடினேன்'' என்று கூறினார்.

இதைக் கேட்டதும் ஜெகனுக்கு பெருமையாக இருந்தது. ஒரு துறவி தனக்கு நண்பன் என்று நினைக்கும்போது இதயத்திற்கு எவ்வளவு இதமாக இருக்கின்றது. அவர் அந்தக் கோவிலில் இருந்து செல்லும்வரை அவருக்குச் செய்ய வேண்டிய எல்லா பணிவிடைகளையும் தானே முன்னின்று கவனித்தான்.

சில மாதங்களுக்குப் பிறகு தினசரி பத்திரிகை ஒன்றில் வந்த செய்தியைப் படித்ததும் அதிர்ச்சியானான். ''துறவி சிவயோகி கைது! பெண்ணுடன் சல்லாபம்!'' என்று தலையங்கம் தீட்டப்பட்டிருந்தது. ஒரு பெண்ணைக் கற்பழித்ததாகவும் அந்தப் பெண்ணுக்கும் துறவிக்கும் உள்ள தொடர்பை பொதுமக்கள் அறிந்து போலீசில் புகார் கொடுத்ததால் அவர் கைது செய்யப்பட்டதாகவும் செய்தியில் இருந்தது.

இந்தச் செய்தியை ஜெகன் நம்பவில்லை. கோபமும் மனவேதனையும் அவன் மனதைப் பற்றிக் கொண்டன. தனக்கிருந்த மதிப்பையும், மரியாதையையும் பயன்படுத்தி சிவயோகியை வெளியே கொண்டு வந்தான். அன்று மாலையே தனியான இடத்திற்கு அழைத்துச் சென்று என்ன நடந்தது என்று தன்னிடம் உண்மையைக் கூறினால் விடுதலை பெற்றுத் தருவதற்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்வதாக ஜெகன் கூறினான்.

சிவயோகி தேம்பி, தேம்பி அழுதார். ''நான் இந்த உலக ஆசைகளை துறந்துவிடுவதில் கவனம் செலுத்தினேன் என்பது உண்மைதான். ஆனால் அதற்கான ஞானம் என்னிடம் இருக்கவில்லை என்பதை இப்போது உணர்கின்றேன். எல்லா ஆசைகளையும் துறந்த எனக்கு பெண்ணாசை அடிமனதில் சாம்பல் பூத்த நெருப்பாக இருந்ததை அறிய முடியாமல் போய்விட்டது. அந்தப் பெண்ணுக்கும் எனக்கும் உறவு ஏற்பட்டது உண்மைதான். நான் எனது மனதை கட்டுப்படுத்த முடியாமல் தோல்வியடைந்து விட்டேன். ஆனால் எனது நியாயங்கள் இந்த சமுதாயத்தில் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. நான் நீதிமன்றம் கொடுக்கும் தண்டனையை ஏற்றுக்கொள்வதுதான் சரியானதாக இருக்கும். மாயையில் இருந்து விடுதலை அடைய நான் செய்த முயற்சிகள் யாவும் தோல்வியில் முடிந்து விட்டன'' என்று கூறியவர் மீண்டும் காவல் நிலையத்தில் சரணடைந்து விட்டார்.

சிவயோகி பேசும்போது ஜெகனுக்கு அவர்மீது கோபம் ஏற்படவில்லை; அனுதாபம்தான் ஏற்பட்டது. துறவைப் பற்றிய அறிவைப் பெற்றுக் கொள்ளாமலேயே துறவறத்தில் ஈடுபட்டு இருக்கின்றார். எத்தனையோ வருடங்களாக அவர் செய்த முயற்சி தோல்வி கண்டுவிட்டதில் தனது நண்பனின் நிலை கண்டு வேதனைப்பட்டான். நண்பனுக்காக வேதனைப்பட முடிந்ததே தவிர சட்டத்தில் இருந்து அவரைக் காப்பாற்ற முடியவில்லை.

ஜெகனுக்கும் வயதாகிக் கொண்டு வந்தது. தனது இரண்டு பிள்ளைகளையும் அவர்கள் விருப்பப்படியே திருமணமும் செய்து வைத்தார். தான் அன்பாக நேசித்த பெற்றோரும் பேரக் குழந்தைகளின் திருமணம் முடிந்து சில வருடங்களிலேயே இறந்து விட்டனர். ஜெகன் கடந்து வந்த வாழ்க்கையில் அவர் சந்தித்த ஒவ்வொரு பிரச்சினையும்

அவருக்கு ஒவ்வொரு பரீட்சையாகத் தோன்றின. அவருக்குக் கிடைத்த வெற்றிகளும் தோல்விகளும் உலக வாழ்க்கையைப் பற்றிய ஒருவகை தெளிவை தனக்குக் கொடுத்தன என்பதை உணர்ந்தார்.

சில நேரங்களில் துறவியாகிவிட வேண்டும் என்று தோன்றியதுண்டு. இப்போதெல்லாம் காவி உடை தரித்து, தாடி வளர்த்து கோவில் கோவிலாகச் செல்வதும், காட்டில் இருந்து கொண்டு விடுதலை வேண்டி தவம் செய்வதும், இவ்வுலக வாழ்க்கையை அனுபவித்து விடுதலை பெறுவதும், எல்லாமே ஒன்றுதான் என்று உணரத் தொடங்கினார். தற்போது உலகப் பற்றே தனக்கு இல்லை என்பதை உணரத் தொடங்கினார். வாழ்க்கையில் ஒவ்வொன்றாகப் பார்த்து அனுபவித்து கடந்து வந்தவர். ஆகையால் இவ்வளவுதான் உலகம் என்பதை உணர்ந்தவராக இருந்தார்.

கடைசிக்காலம் வரை மக்களோடு மக்களாக இருக்கவே விரும்பினார். தான் உலக மாயையில் இருந்து விடுதலை அடைந்ததை இந்த சமுதாயம் பார்க்கட்டும். அவர்கள் என்னைப் பார்த்து உலகத்தை புரிந்துகொள்ளட்டும் என்று எண்ணினார். தன்னால் முடிந்த எல்லாவற்றையுமே மக்களுக்குச் செய்தார். ஆனால் அவர் மனம் எந்த வகையிலுமே பாதிக்கப்படவில்லை. அவர் வாழ்க்கை தாமரை இலையில் விழுந்த நீர்போல் இருந்தது. ஞானமும் அமைதியும் குடிகொண்ட ஞானியாக இருந்தார்.

# ஓம் - 5

*நஹி கஸ்சித் க்ஷணமபி ஜாது திஷ்டத்ய கர்மக்ருத்*
*கார்யதே ஹவச: கர்ம ஸர்வஹ ப்ரக்ருதிஜைர்குனை:*

*கணப்பொழுதாவது எந்த ஒரு இயக்கத்திலும் ஈடுபடாமல் இருப்பவர் இவ்வுலகில் எவரும் இல்லை. ஒவ்வொருவரும் ஏதோ ஒன்றைச் செய்தவாறே இருக்கின்றனர். முக்குணமாகிய சத்வம், ரஜஸ், தமஸ் ஆகியவை கர்ம சொரூபம். இதில் கட்டுண்டு கிடப்பவர் கர்மம் செய்தேயாக வேண்டும். உண்பது, உறங்குவது, சுவாசிப்பது, இருதயம் துடிப்பது எல்லாமே கர்மம் என்பதால் அனைவரும் கர்மத்தில் கட்டுண்டு கிடப்பவராவர்.*

''கணப்பொழுதேனும்
கர்மம் செய்யாதவரிலர்!
கர்ம சொரூபமே
முக்குணமாகையால்
கர்மத்தை செய்திடுவர்
கட்டுண்டு கிடப்பவர்!
தன்னுயிர் செய்திடும்
தன்வயமின்றியே!''

''சும்மா இருப்பதே சுகம்'' என்ற வார்த்தையை ஒரு சோம்பேறி படித்துப் பார்த்தான். இதைவிட மகிழ்ச்சி அவனுக்கு வேறொன்றும் இல்லை. பெரியதொரு ஆராய்ச்சி செய்து கண்டுபிடித்ததைப் போல் மகிழ்ச்சி. சும்மா இருந்துகொண்டே சுகமாக இருப்பதென்றால் எவ்வளவு பெரிய விஷயம்.

சுகமாக வாழ்வதென்றால் உணவு வேண்டும்; உடை வேண்டும், வீடு வேண்டும், மனதுக்கு மகிழ்ச்சி வேண்டும். இவை சும்மா இருக்கும்போது கிடைக்கவும் வேண்டும். இதை சாதாரணமாக விட்டுவிட முடியாது. ஆகவே இந்த வார்த்தையின் ரகசியத்தைக் கண்டறிய வேண்டும் என்று முடிவு செய்தான். அவன் வாழும் ஊரில் உள்ள மக்களைக் கவனித்தான். யாரும் சும்மா இருப்பதாக அவனுக்குத் தெரியவில்லை. ஒவ்வொருவரும் மிக வேகமாக வேலை செய்வதாகவும் சிலர் உணவு உண்ணக்கூட நேரமில்லாமல் முழுநேரமும் உழைப்பதையும் அறிந்துகொண்டான். ஆகவே இவர்களிடம் தனக்குத் தேவையான விளக்கம் கிடைக்கப் போவதில்லை என்பதை அறிந்து தனது ஊரில் இருந்து புறப்பட்டுச் சென்றான். தான் செல்லும் வழிகளிலெல்லாம் மக்கள் வயல்களில் வேலை செய்வதும், சிறுவர்கள் ஆடு, மாடுகளை மேய்ப்பதும், சிலர் பாரமான பொருட்களை சுமந்து செல்வதுமாக எல்லோரும் ஏதோ ஒன்றைச் செய்தவண்ணமே இருந்தனர்.

நடந்த களைப்பு தாகம் எடுத்தது. ஒரு வீட்டில் தண்ணீர் வேண்டிக் குடித்தான். சிறிது தூரம் நடந்தான். தாங்க முடியாத பசியெடுத்தது. மற்றொரு வீட்டில் உணவு கேட்டு உண்டான். மீண்டும் நடந்தான். வழியில் உள்ள கோவில் அருகே ஒரு மரத்தடியில் தாடி வளர்த்த சந்நியாசி ஒருவர் அமர்ந்திருந்ததைப் பார்த்தான். அவருக்கு ஒரு பெண் உணவும் நீரும் கொடுத்து விட்டு செல்வதையும் பார்த்தான். இவரிடம் கேட்டால் தன் கேள்விக்கு விடை கிடைக்கும் என்று எண்ணினான். சுவாமியிடம் சென்று, ''சுவாமி! சும்மா இருந்து சுகமாக வாழ எனக்கு வழி கூறவேண்டும்'' என்று கேட்டான்.

''மகனே, எந்த ஜீவனும் இவ்வுலகில் சும்மா இருப்பதில்லையே! எல்லாமே இயங்கிக் கொண்டுதானே இருக்கின்றன?''

''அப்படியானால் நீங்கள் மரத்தடியில் அமர்ந்திருக்கும் போது ஒரு பெண் உணவும் தண்ணீரும் கொண்டு வந்து வைத்துவிட்டுப் போகின்றாளே, இதற்கு என்ன பதில் கூறுகின்றீர்கள்?''

''மகனே! இந்த கிராமத்து மக்களுக்கு அறிவுரை கூறுகின்றேன். அவர்களை ஆசீர்வதிக்கின்றேன். என்னுடைய செயல்களால் அவர்கள் மனநிறைவு அடைகின்றனர். ஆகவே அவர்கள் எனக்கு உணவளித்து மகிழ்கின்றனர்.''

''அப்படியானால் நான் வரும்போது ஒரு வீட்டில் தண்ணீர் கொடுத்தார்கள். மற்றொரு வீட்டில் உணவு கொடுத்தார்கள். இதைப்பற்றி என்ன கூறுகின்றீர்கள்?''

''நீ அவர்களிடம் கேட்டாய்; அவர்கள் கொடுத்தார்கள். நீ கேட்டதுகூட ஒருவகை இயக்கம்தானே! உனக்கு ஏற்பட்ட பசிகூட ஒருவகை இயக்கம்தானே! பசியின் தாக்கம்தான் மற்றொருவரிடம் போய் உணவு கேட்க வைத்தது. நீ மூச்சு விடுவதும் இயக்கம்தான். மூச்சு விடாமல் இருந்தால் உன் உயிர் போய்விடும். உலகில் உள்ள எல்லா உயிர்களும் ஏதோ ஒரு வகையில் இயங்கிக்கொண்டுதான் இருக்கின்றன. நீ கண்ணைத் திறந்தால்தான் பக்கத்தில் உள்ளவற்றை பார்க்க முடிகிறது. கண்ணை மூடிக் கொண்டால் எதுவுமே தெரிவதில்லை. நீ சிந்திப்பதுகூட ஒரு வகை இயக்கம்தான். இதுதான் உண்மை. ஆகவே, யாராலும் சும்மா இருக்க முடியாது. இவ்வுலகில் இயங்கிக்கொண்டுதான் இருக்க முடியும்.

## ஓம் - 6

*கர்மேந்த்ரியாணி ஸம்யம்ய ய ஆஸ்தே மனஸா ஸ்மரன்*
*இந்த்ரியார்த்தான் விமுடாத்மா மித்யாசார:ஸ உச்யதே*

*மனது நிறைய ஆசைகளை வளர்த்துக்கொண்டு வெளி உலகில் மிகவும் கட்டுப்பாடாக வாழ்வது போல் நடிப்பவன் பொய்யொழுக்கம் உடைய முட்டாள் என்று கூறப்படுவான்.*

''அனுபவிக்கும் அவயவங்களை
அடக்கி வைத்து விட்டு!
ஆழ்மனதில் ஆசைகளை
ஆல்போல் வளர்த்து விட்டால்!
அவ்வொழுக்கம் பொய்யொழுக்கம்
ஆகவேதான் மூடனவன்.''

குழந்தைகளாக இருக்கும்போது விளையாட்டுப் பொருட்கள் மீதும், இனிப்புப் பண்டங்கள் மீதும் ஆசை இருக்கும். இவற்றை இவர்களுக்கு பெற்றுக் கொடுத்து விட்டால் இனிப்புகளை உண்டு மகிழ்ந்தும் விளையாட்டுப் பொருட்களை விளையாடி மகிழ்ந்தும், சில நாட்களில் விளையாட்டுப் பொருட்களை துண்டுத் துண்டாகப் பிரித்துப் பார்த்தும், பிறகு இணைத்துப் பார்த்தும் அதை என்னவென்று அறிந்த பிறகு ஒரு மூலையில் போட்டு விடுவார்கள். முதலில் ஒரு முக்கியமான பொருளாகத் தெரிந்த அந்தப் பொருள் அதைப் பற்றிய அறிவைப் பெற்றவுடன் சாதாரண ஒன்றாக குழந்தைக்குத் தோன்றும்.

சிலருக்கு பலவிதமான உடைகளை உடுத்த வேண்டுமென்ற ஆசை இருக்கும். இவர்கள் விருப்பப்படி உடுத்தி மகிழ்ந்து

வாழ்ந்தால் காலப்போக்கில் இந்த ஆசைகள் குறைந்து விடுகின்றன. வயதாகும்போது இரண்டோ மூன்றோ ஆடைகள் இருந்தால் போதும் என்ற மனநிறைவைப் பெற்று விடுகின்றனர். இப்படி வாழ்க்கையை முழுமையாக அனுபவிக்கும்போது காலப்போக்கில் மனதில் உலக வாழ்க்கையை புரிந்து கொள்ளக் கூடிய மனப்பக்குவம் வந்து விடுகின்றது. அதன் பிறகு தன்னை அறியாமலேயே ஆசைகளைத் துறக்கும் மனநிலைக்கு வந்துவிட முடியும். அனுபவித்து முடித்த மனிதனின் மனநிலை அலையில்லாத கடலைப்போல் அமைதியாக இருக்கும்.

நாம் ஆசைகளை மனதில் அடக்கிக்கொண்டு வாழ்ந்தால், பார்ப்பவர்களுக்கு நாம் அமைதியான வாழ்க்கை வாழ்வதைப் போல் ஒரு வெளித் தோற்றத்தை உண்டு பண்ணினாலும் நமது மனது எரிமலை அனலை அடக்கி வைத்துக்கொண்டு இருப்பதுபோல்தான் இருக்கும். இப்படிப்பட்ட வாழ்க்கை பொய்யானதாகத்தான் இருக்கும்.

ஆசைகளை சரியான வழியில் அனுபவித்து சந்தோஷமாக வாழ்ந்துவிட வேண்டும். அதன் பிறகு மனபாரமோ ஏக்கங்களோ நம்மை எப்போதும் பாதிக்காது. உணவு உண்டால் பசி அடங்குவதுபோல் அனுபவித்து விட்டால் கனமில்லாத உணர்வுகள் மட்டுமே நம்மிடம் எஞ்சி நிற்கும்.

# ஓம் - 7

*யஸ்த் விந்த்ரியாணி மனஸா நியம்யாரபதேர்ஜுன கர்மேந்த்ரியை: கர்மயோகமஸக்த: ஸ விசிஷ்யதே*

*அர்ஜுனா! பற்றற்ற மனமாய் மனதை ஒழுங்குபடுத்திக் கொண்டு கர்மேந்திரியங்களைக் கொண்டு கர்மம் செய்பவன் மேலானவன்.*

''படிய வைத்து இந்திரியம்
பற்றற்ற மனதில்!
கர்மேந்திரியங் கொண்டு,
கர்மயோகம் தொடங்கியவன்;
சிறந்தவனென்றே: அர்ஜுனா!
செப்பினேன் நான்!''

விளையாட்டு வீரர்கள் விளையாடி முடிந்தவுடன் ஒருவருடன் மற்றொருவர் கைகுலுக்குவதும், கட்டிப்பிடித்து நன்றிகூறிக் கொள்வதும் பார்க்கக்கூடியதாக இருக்கும். இதில் வெற்றி பெற்றவர்களும், தோல்வியடைந்தவர்களும் நன்றிகளை பரிமாறிக் கொள்வார்கள். வெற்றிகளையும் தோல்விகளையும் சமமாக ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம்தான் இது! இப்படிப் பட்ட மனப்பக்குவம் வாழ்க்கையில் எல்லாவற்றிலுமே இருக்க வேண்டும். நாம் செய்யும் எல்லா கர்மங்களிலுமே கடுமையாக உழைக்க வேண்டும். முழு முயற்சியோடு செயற்பட வேண்டும். வெற்றி கிடைத்தாலும், தோல்வியடைந்தாலும் அமைதியாக ஏற்றுக் கொள்ள வேண்டும். இப்படி நமது மனதை பழக்கப் படுத்திக் கொண்டால் வேதனை நம்மைத் தாக்க மாட்டாது.

நமக்கென்று சில கடமைகள் இருக்கின்றன. பெற்றோரை அன்புடன் வாழ வைக்க வேண்டும். மனைவியின் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும். உற்றார் உறவினரை அன்புடன் உபசரிக்க வேண்டும். கோவிலுக்குச் செல்வது, தானம் கொடுப்பது, மற்றவர்களுக்கு உதவி செய்வது, தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்வது இப்படிப்பட்ட நமது கடமைகளை வாழ்க்கையில் நாம் செய்யும்போது பல வெற்றிகளும் தோல்விகளும் வந்து சேரும். இந்த சந்தர்ப்பங்களில் முயற்சி செய்தோம்; முடிவை இறைவன் தந்தான் என்று நினைத்து அமைதியாக ஏற்றுக் கொள்ள வேண்டும்.

நாம் எதைச் செய்தாலும் விருப்பு வெறுப்பு இல்லாமல் வெற்றி தோல்விகளை சமபாவனையுடன் ஏற்றுக்கொண்டால் அது கர்ம யோகத்தின் வெற்றியாக அமையும்.

விளையாட்டு வீரர்கள் விளையாடும்போது எதிர் அணியுடன் கைகலப்பு வந்துவிடுமோ என்று சில நேரம் பார்வையாளர்களை கதிகலங்க வைத்து விடும். விளையாட்டு முடிந்தவுடன் ஒருவரோடு மற்றவர் கைகுலுக்கிக் கொள்வதும் கட்டிப்பிடித்து நன்றிகூறிக் கொள்வதும் பத்திரிகைகளில் ஒருவரை மற்றவர் புகழ்ந்து மாறி மாறி அறிக்கை விடுவதும் வாழ்க்கையில் ஒவ்வொருவருக்கும் ஒரு நல்ல உதாரணம். ஒவ்வொரு கர்மத்திலும் வாழ்க்கை இப்படி இருக்க வேண்டும். தோல்வியும் வெற்றியும் இங்கே சமநிலையாக்கப்படுகின்றன. வெற்றியும் தோல்வியும் நமது உணர்வுகளை பாதிக்காமல் இருக்கும்போது துயரம் ஏற்படுவதில்லை.

வீரனுக்கு வெற்றியும் தோல்வியும் சமம் என்பதுதான் கர்ம யோகத்தின் வெற்றி.

## ஓம் - 8

*நியதம் குரு கர்மத்வம் கர்ம ஜ்யாயோ ஹ்யகர்மண:*
*சரீரயாத்ரரபி சதே ந ப்ரஸித்யே தகர்மண:*

*நித்திய கர்மம் என்று கூறப்படும் உண்பது, உறங்குவது, நீராடுவது போன்றவற்றைச் செய்! இது உனது உடலைப் பேணுவதற்கு உதவியாக இருக்கும். செயல் இன்மையைவிட செயல் சிறந்தது. செயலில் ஈடுபடாதவனுக்கு உடலைப் பாதுகாப்பதுகூட இயலாது.*

''உடலைப் பேணவும் முடியுமோ
உன்னிடம் செயலில்லை யென்றால்!
செயலின்மையை விடவும்
செயலே சிறந்ததாகும்!
நிம்மதி உன்னிடம் வாழ
நித்திய கருமம் நீ செய்வாய்!''

மனிதன் தனது தகுதி, அறிவு, சூழ்நிலை போன்றவற்றிற்கு ஏற்ப தனது வாழ்க்கையை அமைத்துக் கொண்டு இவ்வுலகில் சிறப்பாக இயங்க முயற்சி செய்ய வேண்டும். இவ்வுலக பிரச்சினைகளுக்கு மனிதர்கள் முகம் கொடுக்க வேண்டும். பிரச்சினைகளைக் கண்டு ஓடி ஒதுங்கக் கூடாது. பிரச்சினைகளை சந்திப்பதன் மூலம்தான் உலகைப் பற்றிய தெளிவு ஏற்படும். நாயிடம் முழுத் தேங்காயைக் கொடுத்தால் அதன் சுவையை அதனால் அறிந்துகொள்ள முடியாது. அதையே மனிதனிடம் கொடுத்தால் அதை உடைத்து அதன் நீரைப் பருகி உணவாகவும் மாற்றிக் கொள்வான். ஆகவே இயங்கக் கூடியவர்களால்தான் மகிழ்ச்சியும், தெளிவும் உள்ள வாழ்க்கையை வாழ முடியும்.

# ஓம் - 9

*யக்ஞார்த்தாத் கர்மணோன்யத்ர லோகோயம் கர்மபந்தன:*
*ததர்த்தம் கர்ம கௌந்தேய முக்தஸங்க: ஸமாசர*

*கர்மத்தால் இவ்வுலகம் கட்டுப்பட்டுக் கிடக்கின்றது. வலிவுடையது முன்னுக்கு வருகிறது. வலிவற்றது பின்னணியில் வருந்தி வாழ்கிறது. கர்மத்திற்கேற்ப சமுதாயத்தில் மாற்றங்கள் நிகழ்கின்றன. சுயநலம் கருதாது புண்ணியச் செயல் செய்து தியாக புத்தியோடு செய்யும் சேவை, உலக நன்மைக்கென்றே செய்யப்படும் செயல், ஈசுவர ஆராதனையாக ஆற்றும் வினை பெருநோக்கத்தோடு செய்யப்படும் கர்மம் - இவை யக்ஞமென்று கூறப்படும். பற்று இல்லாமல் கர்மத்தை யக்ஞமாக மாற்றி விட்டால் உலக இயக்கத்தில் கட்டுப்பட மாட்டாய்.*

''கர்மத்தால் இவ்வுலகம்
கட்டுப் படுகிறது!
பற்றற்று இயற்றினால்
பார்த்தா; யக்ஞகர்மம்;
கட்டுப்பட மாட்டாய்
இவ்வுலக இயக்கத்தில் நீ!''

மணி என்று ஒருவர் இருந்தார். இவர் ஒரு பால் வியாபாரி. இவருக்கு திருமணம் முடிந்து மூன்று ஆண்டுகளிலேயே அழகான ஒரு பெண் குழந்தையும் இரண்டு ஆண் குழந்தைகளும் பிறந்தன. தனது வசதிக்கேற்ப இரண்டு குழந்தைகளையும் படிக்க வைத்தார். மூத்த குழந்தை பெண் என்பதால் திருமணப் பருவம் அடைந்ததுமே திருமணம் செய்து வைத்து விட்டார்.

இந்தக் காலகட்டத்தில் எதிர்பாராத சம்பவம் ஒன்று நடந்தது. இவரது மனைவிக்கு ஒரு கள்ளக்காதலன் இருப்பது தெரியவந்தது. இது உண்மையென்று உறுதியாக அறிந்ததும் அவளை வீட்டை விட்டே அனுப்பி விட்டார். தன் கண்ணில் இனிமேல் அவள் தென்படக்கூடாது என்று கூறிவிட்டார். எப்போதுமே தனது சக்திக்கு அப்பாற்பட்டு எது நடந்தாலும் இறைவன் விட்ட வழி என்று முடிவு செய்து கொள்வார். தன் மனைவியை தண்டிக்கவில்லை. அவள் விருப்பப்பட்ட ஆண்மகனுடனேயே செல்ல அனுமதித்து விட்டார். இதன் பிறகு இவர் வாழ்க்கையில் பல மாற்றங்கள் நிகழ்ந்தன.

இவர் இரண்டாவது திருமணம் செய்து கொண்டார். மகன்கள் இருவரும் நன்றாகவே படித்து தொழில் தேடி தொலைவில் உள்ள நகரங்களுக்கு சென்று விட்டனர்.

இரண்டாவது மனைவியும் இரண்டு ஆண் குழந்தைகளையும் இரண்டு பெண் குழந்தைகளையும் பெற்றாள். கடைசிக் குழந்தை பிறந்து மூன்று மாதம் ஆகும் போதே மற்றுமொரு சம்பவம் அவர் வாழ்க்கையில் நடந்தது.

மிகவும் அழகாக இருந்த அவரின் மனைவிக்கு தன் கணவன் கிழவன், அழகில்லாதவன் என்ற எண்ணம் ஆழ்மனதில் இருந்ததால், ஒரு அழகான இளைஞன் தன்வசம் சிக்கியவுடன் குழந்தைகளையும் கணவனையும் விட்டுவிட்டு அவனோடு சென்று வாழத் தொடங்கினாள்.

அவர் கோவிலுக்குச் சென்று தனது மனபாரத்தை இறைவனிடம் இறக்கி வைத்தார். இரண்டாவது மனைவியின் குழந்தைகளை பாசத்தோடு வளர்த்தாரே தவிர, நல்ல படிப்பறிவைக் கொடுப்பதற்கு போதுமான வருமானம் அவருக்கு கிடைக்கவில்லை. சிறுவயதிலேயே கைத்தொழில் படிப்பதற்கு அவர்களை அனுப்பி வைத்தார். தனது வருமானத்தில் உணவும்

உடையும் வாங்கிக் கொடுத்தார். முதல் மனைவியின் பிள்ளைகள் இருவரும் தொழில் தேடிச் சென்ற இடத்திலேயே திருமணமும் செய்து கொண்டனர். தந்தைக்கு பெரிதாக எந்த உதவியும் செய்யவில்லை.

இவரின் வயதான காலத்தில் மூத்த மகன் மனைவியை விவாகரத்து செய்து விட்டு வீட்டிற்கு வந்து விட்டான். இரண்டாவது மகன் தொழில் செய்த நிர்வாகத்தை மூடி விட்டார்கள் என்று கூறிக்கொண்டு மனைவியும் இரண்டு குழந்தைகளுமாக வீட்டிற்கு வந்து விட்டான். தனக்கு உதவி செய்யாத பிள்ளைகள் இப்போது தந்தையின் தயவை நாடி வந்துள்ளனர். ஆனால் தந்தை அவர்கள் மனவருத்தப்படும்படி ஒரு வார்த்தைக்கூட கூறவில்லை. எல்லோரையுமே தன் வீட்டில் இருப்பதற்கு அனுமதித்து விட்டார். சில மாதங்கள் கடந்தன. ஒரு நாள் முதல் மனைவி முற்றத்தில் வந்து நின்று அனாதையாகி விட்டேன் என்று அழுது புலம்பினாள். பிச்சை எடுப்பதாகவும் உடுத்துவதற்கு உடைகள்கூட இல்லை என்றும் அழுதாள். தலை நரைத்து எலும்பும் தோலுமாக இருந்தாள். அவளுக்கும் தன் வீட்டில் தஞ்சம் கொடுத்தார்.

வாழ்க்கையில் ஒவ்வொன்றையும் சேவை மனப்பான்மையிலேயே செய்து பழக்கப்பட்டு விட்டதால் மனது சஞ்சலப்படாமல் இருந்தது. உலக வாழ்க்கையை புரிந்து கொண்டு வாழ்ந்த இவர் தெளிவாகவே இருந்தார். தனது அறிவுக்கும் திறமைக்கும் உட்பட்டே வாழ்க்கையை அமைத்துக் கொண்ட இவர் பேராசைப்பட்டு, தனது சக்திக்கு அப்பாற்பட்டு எதையுமே செய்யவில்லை. தனக்கு பிரச்சினைகள் வந்தபோதெல்லாம், தனது அறிவுக்கும் சிந்தனைக்கும் தெளிவாகத் தெரிந்த தர்மத்தையே கடைப்பிடித்தார். இந்த வாழ்க்கை முறையே இவரை அமைதியாக வாழ வழிவகுத்தது.

## ஓம் - 10

*ஸஹயக்ஞாஹ ப்ரஜாபதி: ஸ்ருஷ்ட்வா புரேரவாச*
*ப்ரஜாபதிஹி*
*அநேன ப்ரஸவிஷ்யத்வ மேஷவோ ஸ்த்விஷ்ட்ட காமதுக்*

*கல்பத்தின் ஆரம்பத்தில் ப்ரஜைகளின் தலைவரான ப்ரமதேவன் யாகங்களுடன் மக்களைப் படைத்து விட்டுக் கூறினார்: "நீங்கள் இந்த வேள்வியின் மூலம் பல்கிப் பெருகுங்கள். இந்த வேள்வி உங்களுக்கு நீங்கள் விரும்பிய யோகத்தைத் தரும் காமதேனுவாகட்டும்."*

"பிரஜைகள் படைத்த பிரமன்
யங்ஞத் தோடே படைத்தார்!
விருத்தி யடைந்திட யிதையே
காம தேனுவாகட்டு மென்றார்."

மனிதனுக்குத் தேவையான எல்லாவற்றையுமே இறைவன் படைத்துள்ளார். உணவு, உடை, வீடு, படிப்பு, பக்தி, எப்படி வாழ வேண்டும் என்ற வாழ்க்கை நெறிமுறைகள் என்று எல்லாமே இவ்வுலகில் உண்டு. இவ்வுலகில் உள்ள இயற்கைச் செல்வங்கள் எல்லாமே இறைவனால் நமக்குக் கொடுக்கப் பட்டவை.

இவற்றோடு வாழ்க்கையில் நமக்குள்ள கடமைகள் என்னவென்பதையும் தெளிவாகக் கூறியுள்ளார். நமது கடமைகளை வேள்வியாகச் செய்ய வேண்டும். இப்படிச் செய்தால் நமது வாழ்க்கை மகிழ்ச்சியானதாக இருக்கும்.

கல்வி புகட்ட சிறந்த ஆசிரியர்கள், உணவு உற்பத்தி செய்ய அனுபவமுள்ள விவசாயிகள், சாஸ்திரங்கள் படித்த

பிராமணர்கள், நமக்குத் தேவையான பொருட்களைத் தேடித் தருவதற்கு வியாபாரிகள், நாட்டை நிர்வகித்து வழி நடத்த அரசியல்வாதிகள், நம்மைப் பாதுகாப்பதற்கு படை வீரர்கள் - இப்படியாக எல்லா வசதிகளும் கொண்டது இவ்வுலகம்.

நாம் வாழும் முறையைத் தேர்ந்தெடுப்பதிலும் நமது மன நிலையிலும்தான் இன்பமும் துன்பமும் நம்மை வந்தடைகின்றன. இறைவன் நமக்குக் கொடுத்துள்ள சிந்தனை சக்தியை சரியான வழியில் பயன்படுத்தினால் துன்பம் நம்மை அணுகுவதில்லை.

எந்த வசதியும் இல்லாத துறவிகளிடம் இருக்கும் மன அமைதி எல்லா வசதிகளும் கொண்ட பணக்காரனிடம் இருப்பதில்லையே ஏன்? வாழ்க்கையைப் புரிந்து கொள்ள வேண்டும்.

ஒரு வியாபாரிக்கு வியாபாரத்தில் நல்ல திறமை இருக்கும். அவன் வியாபாரத்தை விட்டு விட்டு விவசாயம் செய்யச் சென்றால் திறமையான விவசாயியோடு போட்டி போட்டு அவனால் வெற்றி பெற்றுவிட முடியாது. அதேபோல் வியாபாரத்தின் நுணுக்கங்களை அறியாத விவசாயி வியாபாரத்தில் ஈடுபட்டால் தோல்வியும் வேதனையுமே ஏற்படும். நமக்கு எந்தத் தொழிலில் திறமை இருக்கின்றதோ, அல்லது எந்தத் தொழிலைப் பற்றி படித்து அறிவை சேமித்து வைத்திருக்கின்றோமோ அந்தத் தொழிலையே நாம் தொடங்க வேண்டும். இதுவே நமக்கு வெற்றியையும் மகிழ்ச்சியையும் கொடுக்கும்.

நமது தொழில் நமது வாழ்க்கையில் அதிக நேரத்தை ஆக்கிரமிப்பதாலும், நமது சிந்தனையின் அதிகமான அளவை தன்வசப்படுத்திக் கொள்வதாலும் தொழிலை நமது திறமைக்கும் அறிவுக்கும் ஏற்றாற்போல் அமைத்துக்கொள்வதால் வாழ்க்கையில் அதிகமான பங்கை மகிழ்ச்சியே ஆட்சி செய்யும்.

நாம் தொழில் செய்யும்போது அதற்கான ஊதியத்தைப் பெற்றுக் கொள்கின்றோம். அதே நேரம் நாம் வேலை செய்யும் நிர்வாகம் படிப்படியாக உயர்வடையும்போது பொறாமைப்படக் கூடாது. நாம் தொழில் செய்யும் திறமையால்தான், நம் முதலாளியும் நிர்வாகமும் முன்னேறுகின்றன, நான் சுயநலவாதி அல்ல. என் உழைப்பு மற்றவர்களுக்கும் பகிர்ந்தளிக்கப் படுகிறது என்று நினைத்து மகிழ்ச்சியடைய வேண்டும். நமது தொழிலை சேவை மனப்பான்மையோடு செய்யும்போது மகிழ்ச்சி மட்டுமே நமது உள்ளத்தில் நிறைந்திருக்கும்.

ஒரு வியாபாரி ஒரு பொருளை விற்பனை செய்யும்போது அது சேவையாகவும் இருக்கின்றது, தனது வாழ்க்கைக்குத் தேவையான ஊதியத்தை தேடிக் கொள்வதாகவும் இருக்கின்றது. அதே நேரம் அதை விற்பனை செய்யும்போது மிக அன்பாகப் பேசி மற்றவர்களை மகிழ்வித்து ஒரு பொருள் விற்கப்படுகிறது. இதனால் பொருளை வாங்குபவரும் விற்பவருமாக இரண்டு தரப்பினருமே மகிழ்ச்சியடைகின்றனர். வாழ்க்கையில் இப்படி எல்லா சந்தர்ப்பங்களிலுமே ஒருவரை மற்றவர் மகிழ்வித்தே வாழப் பழக வேண்டும்.

தாய், தந்தை, மனைவி, குழந்தைகள், உறவினர்கள் இவர்களுக்காக நாம் செய்வதெல்லாம் நமது கடமையே; ஆகவே இவர்களுக்காக எதைச் செய்தாலும் பாரமாக நினைக்கக் கூடாது. சேவை மனப்பான்மையுடனேயே செய்ய வேண்டும். சேவை மனப்பான்மையோடு செய்யும் ஒவ்வொரு செயலும் மகிழ்ச்சியையும், உற்சாகத்தையுமே கொடுக்கும்.

தன் குழந்தையிடம் எந்த பிரதி உபகாரமும் எதிர்பார்க்காமல் தன் இரத்தத்தையே பாலாக ஊட்டும் தாயைப் போல் உலகத்திற்காக, உலக மக்களுக்காக, இறைவனால் படைக்கப்பட்ட உயிர்களுக்காக சேவை செய்ய வேண்டும்

என்கிற எண்ணம் வளர்ச்சியடைந்து விட்டால் வாழ்க்கை இன்பமாகவே இருக்கும்.

நமது தகுதி, அறிவு, சூழ்நிலைக்கு ஏற்றவாறு வெவ்வேறாக யாகங்கள், தானம், தவம், ப்ரணாயாமம், புலனடக்கம், அத்யயனம் கற்பிப்பது, மக்களைக் காப்பது, போரிடுவது, உழுது பயிரிடுவது, வியாபாரம், சேவை முதலிய கடமைகளைச் செய்ய வேண்டும். இதுதான் ஸ்வதர்மம். இந்த வாழ்க்கை முறை இறைவனால் நமக்கு அருளப்பட்டது.

ஒரு தாய் சமையலுக்கு வேண்டிய எல்லாப் பொருட்களையும் கொண்டு வந்து அதனுடன் சேர்க்க வேண்டியவற்றைச் சேர்த்து சுவைகூட்டி சமைத்து அருகில் வைத்தவுடன் அதை சுவைத்து உண்ணுவது மட்டுமே குழந்தையின் செயலாக இருக்கும். அதேபோல் இறைவன் எல்லாவற்றையும் கொடுத்து வாழ வேண்டிய முறைகளையும் அருளியுள்ளார். மகிழ்ச்சியாக வாழ நாம் முயற்சி செய்ய வேண்டும்.

# ஓம் - 11

*தேவான் பாவயதானேன தே தேவா பாவயந்துவ:*
*பரஸ்பரம் பாவயந்த: ச்ரேய: பர மவாப்ஸ்யத*

*சுயநலமற்ற புண்ணியச் செயல், தியாக சேவை, உலகத்தின் நன்மைக்கென்றே செய்யப்படும் செயல், ஈசுவர ஆராதனை போன்ற செயல்களைச் செய்வதன் மூலம் தேவர்களுக்கு நாம் உதவினவர்கள் ஆகின்றோம். ஆகவே, அவர்கள் உதவியும் நமக்குக் கிடைக்கப் பெறுகின்றது. இதனால் மேலான நன்மையை அடைவோம்.*

''தேவர்கள் உங்களை வளர்க்க
தேவரும் உங்களால் வளர:
ஒருவரை ஒருவர் வளர்த்து
உயர்ந்திடவே ஒரே வழியில்!
யக்ஞத்தை துணையாய்க் கொண்டு
உறவுகள் வளர்த்தால் போதும்!''

'செய்தவனுக்கு செய்; செத்தவனுக்கு அழு' என்று ஒரு பழமொழி கூறுவார்கள். நம்மை இவ்வுலகில் படைத்து உயர்வான வாழ்க்கை வாழ தெளிவான அறிவைக் கொடுத்த இறைவனுக்கு நன்றி கூற வேண்டும். அவன் திருவடிகளை வணங்க வேண்டும்.

நம்மைப் பெற்று வளர்த்த தாய் தந்தைக்கு நம்மால் செய்யக்கூடிய எல்லா உதவிகளையும் செய்ய வேண்டும். நாம் குழந்தையாக இருந்தபோது நம்மைத் தூக்கி முத்தமிட்டு இனிப்புக் கொடுத்து அன்புக் காட்டிய சொந்தபந்தங்களுக்கு

நம்மால் முடிந்த உதவிகளைச் செய்ய வேண்டும். நமக்கு 'அ' என்ற அச்சாரம் தொட்டு அகிலத்தில் அனைத்தையும் தெளிவுபட விளக்கிய குருவுக்கு அவர் விருப்பப்படி உதவிகள் செய்ய வேண்டும். மாதா, பிதா, குரு, தெய்வம் என்பார்கள். இவர்களுக்காக எதையும், எப்போதும் செய்ய நமது மனது விருப்பத்தோடு இருக்க வேண்டும்.

இவ்வுலகில் ஒன்றில்லாமல் மற்றொன்று இயங்க முடியாது. நமக்கு பால் வேண்டுமென்றால் பசுவிடம் இருந்துதான் பெற்றாக வேண்டும். பால் என்பது மிகவும் பெறுமதியான ஒன்று. இதை நம்மைவிட அறிவில் குறைந்த பசுவிடம் இருந்துதான் பெற்றுக்கொள்ள முடிகிறது. ஆகவே நம்மைவிட கீழ்மட்டத்தில் உள்ளவர்களின் உதவியும் நமக்கு தேவைப் பட்டேயாக வேண்டும்.

நாம் தொழில் செய்யும் இடங்களில் நமக்கு முன்பின் அறிமுகம் இல்லாதவர்கள்கூட உதவி செய்கின்றனர். நமக்கு நோய் வந்துவிட்டால் ஒரு வைத்தியரின் உதவி தேவைப் படும். நாம் சந்திக்கும் வைத்தியர் யார் என்பதே அதற்கு முன் தெரியாமல் இருந்திருக்கும். ஆனால் அன்பாகப் பேசி மன தைரியம் கொடுத்து முகத்தில் சிரிப்பை வரவழைத்து மருந்து கொடுத்து அனுப்புகின்றார்.

வெயில் கொடுமையில் பாதிக்கப்படும் வழிப்போக்கன் மர நிழலை நாடிச் செல்கின்றான். அந்த மரமும் நமக்கு உதவுகிறது. மரத்தை நட்டவரும் நமக்கு உதவியுள்ளார். ஒரு சிட்டுக் குருவி எச்சமிட்டால் அதில் இருந்துகூட ஒரு ஆலமரமோ, அரசமரமோ உண்டாகி விருட்சமாகி விடுகிறது. இந்த மரங்கள் எத்தனையோ ஆயிரம் பேருக்கு நிழல் கொடுக்கின்றன. ஆகவே ஒரு சிட்டுக்குருவிகூட பெரிய உதவிகளை இச்சமுதாயத்திற்கு செய்து விடுகிறது.

இப்படியே ஒன்றை ஒன்று சார்ந்தே இயக்கங்கள் நடக்கின்றன. எத்தனையோ பேர் செய்த உதவிகளால்தான் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். நாம் உண்ணும் உணவு, உடுக்கும் உடை, வசிக்கும் வீடு, உபயோகிக்கும் பொருட்கள் என்று எல்லாமே நமக்கு முன்னால் வாழ்ந்த ஆதி மனிதர்களால் பலமுறை முயற்சி செய்து தேவையானவை எவை என்று அடையாளம் காணப்பட்டு சமுதாயத்தில் புழக்கத்தில் இருக்கின்றன. ஆகவே மற்றவர்கள் காட்டிய பாதையில் அவர்கள் சிந்தித்து, சிரமப்பட்டு கொடுத்தவற்றில்தான் சுகமாக வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். ஆகவே மற்றவர்களுக்கு நாம் உதவி செய்தேயாக வேண்டும் என்பதுதானே உண்மை.

மரம், செடி, கொடி, மிருகங்கள், பறவைகள் தொடங்கி மனிதர்கள், தெய்வம் வரை எல்லோருக்குமே நம்மால் எந்த அளவு நன்மை செய்ய முடியுமோ அவற்றைச் செய்ய வேண்டும். நம்மைவிட சக்தி உள்ளவர்கள் நமக்கு உதவி செய்தால் அவர்கள் மனம் குளிர நன்றி கூறவேண்டும். இப்படி ஒருவருக்கொருவர் உதவி செய்து எல்லோரும் உயர்வடைய வேண்டும்.

# ஓம் - 12

*இஷ்டான் போகான்ஹி வோதேவா தாஸ்யந்தே*
*யக்ஞபாவிதா:*
*தைர்தத்நப்ர தாயைப்யோ யோபுங்க்தே ஸ்தேந ஏவஸஹ*

*யாகத்தால் பேணப்பெற்ற தேவர்கள் கேட்பதை யெல்லாம் கொடுப்பவர்கள். அங்ஙனம் அவர்களிடம் இருந்து பெற்றவர்கள் அவர்களுக்கு கைம்மாறு செய்யாவிட்டால் இவர்கள் திருடர்கள் என்று அழைக்கப்படுவர்.*

''நாடிய போகங்கள் நல்கிடுவர்
பேணப்பெற்ற யாகத்தால் தேவர்களே!
போகங்கள் பெற்றவர் திருடராவர்!
நுகர்ந்திடின் கைம்மாறு செய்யாமலே!''

ஒரு குழந்தை கருவாக வயிற்றில் வளர்ச்சியடைய தொடங்கிய காலம் முதலே அதைப்பற்றிய சிந்தனை பெற்றோருக்கு தொடங்கி விடுகின்றது. குழந்தை வயிற்றில் வளரும்போது எந்த உணவை உண்டால் குழந்தை பாதிப்பு அடையாது, எந்த உணவை உண்டால் குழந்தைக்கு நல்லது என்று உணவுகளை குழந்தைக்காக தேர்வு செய்யும் தாய், படுக்கும்போதும், குளிக்கும்போதும், அமரும்போதும் என்று தனது ஒவ்வொரு அசைவிலும் எதை எப்படிச் செய்தால் வயிற்றில் உள்ள குழந்தை பாதிப்பில்லாமல் இருக்கும் என்று சிந்தித்து பத்து மாதங்களும் அந்தக் குழந்தைக்காக தனது இயக்கத்தையே மாற்றியமைத்து தாங்க முடியாத மரண வேதனையோடு குழந்தையைப் பெற்றெடுக்கின்றாள்.

அதன் பிறகு அன்பும், அறிவும் ஊட்டி தங்களால் எந்த அளவு உயர்வாக வளர்க்க முடியுமோ அப்படி வளர்த்து இவ்வுலகில் எவ்வளவு காலம் அவர்கள் வாழ்கின்றார்களோ அதுவரையும் தன் பிள்ளைகளை பாசத்தோடு பாதுகாக்கின்றனர். தன் பிள்ளைகள் மணப்பருவம் அடைந்ததும் அவர்களுக்கு திருமணமும் செய்து வைத்து அவர்களின் பேரப் பிள்ளைகளையும் அன்போடு நேசிக்கின்றனர். இப்படிப்பட்ட பெற்றோர்களை அன்போடு உபசரித்து உதவிகள் செய்யா விட்டால் இந்தப் பிள்ளைகளை என்னவென்று அழைப்பது? இவர்களை திருடர்கள் என்று அழைப்பதில் எந்தத் தவறும் இல்லை.

சமூக சேவை செய்யும் எத்தனையோ மனிதர்களைப் பார்க்கின்றோம். இப்படிப்பட்டவர்களுக்கு நம்மால் முடிந்த எல்லா நன்மைகளையும் செய்ய வேண்டும்.

நமக்கு உதவி செய்தவர்களுக்கு ஒரு வீழ்ச்சியென்றால் நாம் ஓடோடிப் போய் உதவ வேண்டும்.

நாம் இறைவனிடம் சிலவற்றைக் கேட்கின்றோம். அவை கிடைத்தவுடன் நேர்த்திக்கடன் என்று கூறிக்கொண்டு இறைவனுக்கு பூசை செய்து மனநிறைவு பெறுகின்றோம். இதே போன்றதுதான் நாம் உதவி பெற்றவர்களுக்கு அவர்கள் மனங்குளிர ஏதாவது நன்மைகள் செய்வதும்!

நாம் ஒரு முறைக்கு பலமுறை நமது கடந்த காலங்களை திரும்பிப் பார்க்க வேண்டும். நமது முன்னேற்றத்திற்கு ஏணிப்படிகளாக இருந்த எல்லோரையும் நினைத்துப் பார்க்க வேண்டும். அவர்களை மகிழ்விக்கக்கூடிய நம்மால் செய்ய முடிந்த எல்லாவற்றையும் கட்டாயம் செய்ய வேண்டும்.

ஒரு வயதானவர் மாங்கன்று ஒன்றை நட்டார். அப்போது அவ்வழியே வந்த வழிப்போக்கன் கேட்டானாம்: “நீ இன்னும்

சிறிது காலத்தில் உலகை விட்டே சென்று விடுவாய். உனக்கு ஏன் இந்த வேலையெல்லாம்?'' என்று.

அதற்கு அவர் கூறினார்: ''தம்பி எனது பூட்டனார் வளர்த்து விட்ட மாமரங்களின் கனிகளை நான் உண்டு சுவைத்தேன். இப்போது நான் நட்டுச் செல்லும் மரங்களின் கனிகளை எனது பேரக்குழந்தைகள் உண்டு மகிழட்டுமே!''

இதுதான் வாழ்க்கை. இந்த நிகழ்ச்சி ஒரு மனிதன் தனது கடைசிக் காலம் வரை இவ்வுலகிற்கு கைம்மாறு செய்ய முடியும் என்பதையே காட்டுகின்றது. மனிதன் வாழ்க்கையில் கைம்மாறு செய்யவும், உதவிகள் செய்யவும் இளமையிலிருந்தே பழகிக் கொள்ள வேண்டும்.

# ஓம் - 13

*யக்ஞ சிஷ்டாசினஸந்தோ முச்யந்தே ஸர்வ கில்பிஷை:*
*புஞ்ஜதே த்வகம் பாபாயே பசந்த்யாத்ம காரணாத்*

*வேள்வியில் எஞ்சிய உணவை உண்ணுகின்ற சான்றோர்கள் எல்லாப் பாவங்களிலிருந்தும் விடுபடுகின்றனர். ஆனால் எந்தப் பாவிகள் தம் உடலைப் பேணுவதற்காகவே உணவைச் சமைக்கின்றார்களோ அவர்கள் பாவத்தையே உண்கிறார்கள்.*

''பாபத்தில் விடுபடும் நல்லோர்
யாகத்தில் மிஞ்சியதை பெறுபவரே!
பாபிகள் தமக்கே சமைத்து
பாபத்தை உண்ணும் பாபிகளே!''

சிறுவயதில் பாடசாலைக்குச் சென்று வரும்போது ஐந்து சதத்திற்கு மிட்டாய் வாங்கி பத்து நண்பர்கள் பகிர்ந்து உண்டு மகிழ்ந்த காலங்கள் இன்றும் மனதில் பசுமையாக இருக்கின்றன. இதை நான் மட்டுமல்ல, சிறுவயதில் கிராம பாடசாலைகளில் படிக்கும் எல்லா குழந்தைகளும் செய்வதுதான். கைக்குட்டையில் வைத்து மடித்து பல்லால் கடித்து (இதற்கு 'காக்காய் கடி' என்று பெயர்) நண்பர்களோடு பகிர்ந்து சுவைத்து மகிழ்ந்த நாட்களை எவராலும் மறந்து விட முடியாது. இப்படிப்பட்ட உயர்வான உணர்வுகள் குழந்தைப் பருவத்திலேயே இயற்கையாகவே இருக்கின்றன. இந்த மென்மையான உணர்வுகள் காலப் போக்கில் சுயநலம் வளரும்போது மூடி மறைக்கப்பட்டு விடுகின்றன. நாம் எப்போதுமே பகிர்ந்து உண்ணும் பழக்கத்தை சுயநலத்திற்கு பலி கொடுத்துவிடக் கூடாது.

தன் உழைப்பில் ஒரு பகுதியை அனாதை இல்லத்திற்கும், கோவில்களுக்கும், அன்னதான திட்டங்களுக்கும் கொடுப்பவர்கள்

நம்முடன் வாழ்ந்து கொண்டுதான் இருக்கின்றனர். இவர்கள் வழியைப் பின்பற்றி தன் தகுதிக்கேற்ப மற்றவர்களும் உதவிகள் செய்யப் பழகிக் கொள்ள வேண்டும்.

எந்த ஒரு பெண்ணும் தன் கணவனும் குழந்தைகளும் உண்ணும் முன் உண்ணுவது கிடையாது. இந்தப் பழக்கம் இந்து மக்களிடம் உண்டு. இதேபோல்தான் தானம் செய்யும் போதும், மற்றவர்களுக்குக் கொடுத்து அவர்கள் உண்டு பசியாறிய பிறகு நாம் உண்ண வேண்டும். நம் உழைப்பில் மற்றவர்கள் அனுபவித்து மகிழ்வதைக் கண்டு நாம் மகிழ்ச்சி அடைய வேண்டும். இப்படிப்பட்ட வாழ்க்கை முறைகளை அமைத்துக் கொள்பவர்களைத்தான் நல்லோர்கள் என்று போற்ற வேண்டும். கோவிலில் பிராமணர்கள் இறைவனிடம் வேண்டுபவை உலக நன்மைக்காகத்தான். ஆசான்கள் கற்பிப்பதும் மற்றவர்களுக்காகத்தான். இதுபோல் தன்னிடம் உள்ள அறிவு, அன்பு, பொருட்செல்வம், எல்லாவற்றிலுமே மற்றவர்களுக்கும் பங்கு கொடுக்க வேண்டும். இதுதான் சிறந்த வாழ்க்கை முறை.

சில பிள்ளைகள் நாகரீகமான வாழ்க்கையை அமைத்துக் கொண்டதும் தன்னைப் பெற்று வளர்த்த பெற்றோரையே தெருவில் பிச்சையெடுக்கும் நிலைக்குக் கொண்டு வந்து விடுகின்றனர். உறவினர்கள் ஏழையாக இருந்தால் அவர்களை உறவினர் என்று மற்றவர்கள் முன் கூறுவதில்லை. இவர்கள் ஆடிப்பாடி, உண்டு உறங்கி சுயநலத்தோடு வாழ்கின்றனரே அன்றி தம் உயர்வுக்குக் காரணமாக இருந்தவர்களை நினைத்துக் கூடப் பார்ப்பதில்லை. இப்படிப்பட்டவர்கள் பாவிகள் என்று அழைக்கப்படுவர். ஒவ்வொருவரிடமும் மற்றவர்களுக்கு உதவ வேண்டும் என்ற உணர்வு உண்டு. இந்த மென்மையான உணர்வு குழந்தைகளிடம் இருப்பதை தெளிவாக உணர முடியும். இந்த உணர்வுகள் செயல்வடிவமாக வெளிவர வேண்டும். சுயநலம் இந்த உணர்வின் செயற்பாட்டை கட்டுப் படுத்தவோ, இயங்காமல் தடை செய்யவோ இடமளிக்கக்கூடாது.

## ஓம் - 14

*அன்நாத் பவந்தி பூதானி பர்ஜன்யா தந்ந ஸம்பவ:*
*யக்ஞாத் பகவதி பர்ஜந்யோ யக்ஞ: கர்மஸமுத்பவ:*

*அறச்செயல் புரிந்து வருபவர் நல்லார் ஆகின்றனர். இவர்கள் செய்யும் கர்மம் யக்ஞமாகிறது. இவர்கள் நல்ல மனமுடையவர்கள். இவர்கள் மழை வேண்டுமென்று விரும்பினால் மழை பெய்கிறது. இப்படி பெய்யும் மழை நீரினால் உணவு உண்டாகி இந்த உணவினால் உயிர்கள் உண்டாகின்றன.*

''உயிர்கள் உண்டாக
உணவேத் தேவை!
உணவு உண்டாக
மழை நீர்த் தேவை!
மழை நீர் உண்டாக
யக்ஞம் தேவை!
யக்ஞம் உண்டாக
கர்மம் தேவை!''

'செய்யும் தொழிலே தெய்வம்' என்றொரு வார்த்தையை நம் மூதாதையர்கள் நமக்குக் கற்றுத் தந்துள்ளனர். இது மிகவும் ஆழமான கருத்தைக் கொண்டது.

உழவுத் தொழில் செய்பவர் தமக்கு மட்டுமல்லாமல் இந்த சமுதாயம், நாடு, உலகம் என்று எல்லோருக்காகவும் உழைக்கின்றனர். அவர்கள் உழைப்பில் அவர்களுக்குக் கிடைப்பதோ மிக மிகச் சிறிதே. இவர்கள் உற்பத்தி செய்யும் உணவு முழு உலகமும் சென்றடைகிறது. இதைப் போலவே மக்களுக்காக எவ்வளவோ தொழில்கள் உலகில் நடக்கின்றன. ஆனால் உழவுத் தொழில்தான் உலகில் உயர்ந்ததாக கருதப்படும்.

இது தொழில் மட்டுமல்ல; உலக சேவையாகவும் இருக்கின்றது. உயிர்கள் வாழ்வதற்காகவே உழவன் உணவை உற்பத்தி செய்கின்றான். உணவில் இருந்துதான் உயிர்கள் அனைத்தும் உண்டாகின்றன. உணவு இல்லையென்றால் உயிர்கள் அனைத்தும் அழிந்து விடும். இப்படி உலகிற்காகவே கர்மம் செய்யும் மனிதர்கள் உயர்ந்தவர்கள். இவர்களின் சுயநலமற்ற கர்மம் வேள்வியாக மாறிவிடுகிறது. ஆகவே இவர்கள் மழை பெய்ய வேண்டும் என்று வேண்டினால் மழை பெய்யும். அதைத்தான் 'நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லோர்க்கும் பெய்யும் மழை' என்று ஔவைப் பிராட்டியார் பாடினார்.

இப்படிப்பட்ட கர்மம் வேதத்தில் இருந்து உண்டாவது, வேதம் அழிவற்ற பரமாத்மாவிடம் தோன்றியது. ஆகவே எங்கும் நிறைந்த அழிவற்ற பரபிரம்மம் பரமாத்மா எப்பொழுதும் வேள்வியில் நிலைபெற்று இருக்கின்றார். ஆகவே நீ செய்யும் கர்மம் சுயநலமற்ற தூய்மையானதாக இருக்கும்போது அதுவே வேள்வியாகவும், அதுவே தெய்வமாகவும் தெய்வம் நிலைப் பெற்றதாகவும் இருக்கின்றது.

உலக நன்மைக்கென்றே செய்யும் சேவை சுயநலமற்று தூய்மையாக இருந்தால் தெய்வத் தன்மையைப் பெறுவது போல்தான், கணவனுக்கு மனைவி செய்யும் சேவையும் தூய்மையாக இருந்தால் அவள் தெய்வீகத் தன்மையை அடைந்து விடுகின்றாள். இதைத்தான் வள்ளுவரும் 'பத்தினிப் பெண்கள் பெய்யென்றால் மழை பெய்யும்' என்று கூறினார். மதுரையை எரித்த கண்ணகியும், கொக்கென்று நினைத்தனையோ கொங்கனவா என்று கேட்ட வாசுகியும், சூரியனையே உதிக்கத் தடை விதித்த நளாயினியும் எப்படி சக்தி வாய்ந்தவர்களாய் இருந்தார்கள். இவர்கள் சுயநலமில்லாமல் கணவனுக்குச் செய்த சேவைதான் காரணமாக இருந்திருக்க முடியும்.

ஆகவே சுயநலமில்லாமல் உலக நன்மைக்கென்றே நாம் சேவை செய்யும்போது அது வேள்வியாகிறது.

## ஓம் - 15

*கர்ம ப்ரஹ் மோத்பவம் வித்தி ப்ரஹ்மாக்ஷர ஸமுத்பவம்*
*தஸ்மாத் ஸர்வகதம் ப்ரஹ்ம நித்யம் யக்ஞே ப்ரதிஷ்டிதம்*

*பரமாத்மாவிடத்தினிருந்து வேதம் என்று கூறப்படும் இயற்கை உதித்தது. இந்த வேதமெனும் இயற்கையில் இருந்துதான் கர்மம் வந்தது. இக்கர்மம் முறையாக கையாளுமிடத்து இது யக்ஞமாகிறது. ஆகவே யக்ஞத்தில் நிலைத்திருப்பது வேதமாகிறது.*

"கர்மம் உதித்தது
வேதத்திலே!
வேதம் உதித்தது
பரமத்திலே
எங்கும் நிறைந்தது
வேதத்திலே
வேதம் நிலைத்தது
யக்ஞத்திலே!

ப்ரம்மம் என்ற அழிவற்றதில் இருந்துதான் வேதம் உண்டானது. ஆகவே ப்ரம்மமும் வேதமும் வேறுபட்டவை அல்ல. இந்த வேதத்தில் இருந்துதான் கர்மம் உண்டானது.

நமது அறிவு, திறமை, அனுபவம், சூழ்நிலை, மாறுதல் இவற்றிற்கேற்ப நமது கடமைகளை சுயநலமில்லாமல் செய்ய வேண்டும்.

இவ்வுலகம் இறைவனால் படைக்கப்பட்டது. இவ்வுலகம் இயங்கும்போது அது கர்மமாகிறது. இந்தக் கர்மங்கள் சிறப்பாக

நடக்க வேண்டும். இவை சிறப்பாக நடப்பதற்கு சில வழிமுறைகள் உள்ளன. நாம் ஒவ்வொருவரும் ஏதாவது ஒன்றில் திறமை உடையவர்களாக இருப்போம். ஆகவே நமது திறமையின் வழியே நம் வாழ்க்கையை நடத்திச் செல்ல வேண்டும். இந்த வாழ்க்கை முறை மன அமைதியையும் மகிழ்ச்சியையும் கொடுக்கும். நாம் மனதாலும், சொல்லாலும், உடலாலும் எந்தெந்த செயல்களைப் புரிந்தாலும் அவை புண்ணிய கர்மங்களாக இருக்கும்போது அது யக்ஞமாகிறது.

யாகங்கள், தானம், தவம், ப்ரணாயாமம், புலனடக்கம், அத்யயனம் (வேதம்) கற்பிப்பது, மக்களைக் காப்பது, போரிடுவது, உழுது பயிரிடுவது, வியாபாரம், சேவை முதலியன நமது கடமைகளாக இவ்வுலகில் இருக்கின்றன. இவற்றை நமது தகுதிக்கும், திறமைக்கும் ஏற்றவாறு செய்ய வேண்டும். இவற்றை செய்யும்போது சுயநல நோக்கம் இல்லாமல் விருப்பு, வெறுப்புகளுக்கு அப்பாற்பட்டு செய்ய வேண்டும் இப்படி செய்யும்போது யக்ஞமாகிறது. யக்ஞம் வேள்வி என்று கூறப்படும். இந்த வேள்வியாக இருப்பதே இறைவன்தான்.

ஆகவே நாம் பற்றற்று செய்யும் புண்ணிய கர்மங்களில் இறைவன் இருக்கின்றார்.

## ஓம் - 16

*ஏவம் ப்ரவர்த்திதம் சக்ரம் நானுவர்தயதீஹய:*
*அகாயு ரிந்த்ரியாரரமோ மோகம் பார்த்த ஸஜீவதி*

*உலகில் இப்படியாக இயக்கப் பெற்றுள்ள முறைகளைப் பின்பற்றாதவன் புலன்களின் வழியே வாழ்ந்து பாபவாழ்க்கை வாழ்பவன் ஆகிறான். இவனுடைய வாழ்க்கை வீணான வாழ்க்கைதான்.*

''இயக்கத்தில் இயக்கிய
சக்கரம் இவைதான்!
இவற்றைப் போற்றா
எவனாயினுமே!
பாப வாழ்க்கை
பெற்றவனாக;
புலன்களில் பொருந்தி
வாழ்வோனாக;
வீணே வாழ்க்கை
வாழ்கிறான் எனலாம்.''

உயிரினங்கள், புண்ணியச் செயல், கடமைகள், வேள்வி, மழை, உணவு - இப்படித்தான் உலகம் இயங்கிக் கொண்டிருக்கின்றது. நாம் செயல்படும்போது நமது அறிவுக்கும், திறமைக்கும், சூழ்நிலைக்கும் ஏற்றாற்போல் புண்ணியச் செயல்களைச் செய்தால் இவ்வுலகம் முறையாக இயங்க உதவினவர்கள் ஆவோம். நாம் மகிழ்ச்சியாக வாழ்வதற்கு சிறந்த வழி இந்த வாழ்க்கை முறையைப் பின்பற்றுவதுதான்.

நமக்குள்ள கடமைகளை நாம் செய்யும்போது சுயநல நோக்கம் இல்லாமல் செய்தால் அதன் வெற்றியும் தோல்வியும் நம்மைப் பாதிப்பதில்லை. மனம் அமைதியாக இருக்கும். நமது வாழ்க்கை உலகம் போற்றத்தக்க முறையில் அமைந்து விடும்.

இவ்வுலகில் நமக்காக உள்ள கடமைகளை நாம் செய்யும்போது, அவை புண்ணியச் செயலாகவும் இருக்கும் போது, அதன் சக்தி வேள்வியாகி விடுகிறது. இந்த வேள்வியின் பயனாக, மழை உண்டாகிறது. மழை பெய்வதால் மரம், செடி, கொடிகள் வளர்கின்றன. விவசாயிகள் விவசாயம் செய்வதற்கு உதவியாக இருக்கின்றது. உணவுகள் உயிர்கள் உண்டாவதற்கு காரணமாக இருக்கின்றது. இந்த உயிர்கள் புண்ணியச் செயல்கள் செய்யும்போது இவை வேள்வியாக மாறுகின்றன. ஆகவே, நமது கடமைகளை முறையாகச் செய்தால் இவ்வுலகம் உயர்வடைவதற்கு உதவினவர்கள் ஆவோம். இப்படிப்பட்ட வாழ்க்கை முறைதான் உயர்வானது.

நமது புலன்களால் ஏற்படும் ஆசைகள் காரணமாக சுயநல நோக்கத்தோடு தவறான வழிகளைத் தேர்ந்தெடுப்பது, தன் நலத்திலேயே கவனம் செலுத்துவது, பிறருக்கு விளையும் தீமைகளை கண்டுகொள்ளாமல் இருப்பது, எல்லாப் பிராணிகளுக்கும் துன்பம் அளிப்பது - இவையெல்லாம் உலகில் தடுமாற்றத்தை ஏற்படுத்தும். உலக இயக்கத்தை தவறான வழியில் இட்டுச் செல்லும். இப்படிப்பட்ட வாழ்க்கை தவறானதாகும். இப்படிப்பட்ட வாழ்க்கை முறையை அமைத்துக் கொண்டால், இவர்களின் வாழ்க்கை பாவம் நிறைந்ததாக இருக்கும்.

மனிதனின் வாழ்க்கை விலை மதிக்க முடியாத சிறப்பான ஒன்று. ஆகவே வாழும் விதிமுறைகளை சரியான பாதையில் திசை திருப்பி செயல்பட வேண்டும். சுயநலத்தோடு போகங்களில் ஈடுபட்டு வீணாக்கிக் கொள்ளக் கூடாது.

## ஓம் - 17

*யஸ்த்வாத் மரதிரேவஸ்யா தாத்ம த்ருப்தஸ்ச மாநவ:*
*ஆத் மந் யேவ ச ஸந்துஸ்ட ஸ்தஸ்ய கார்யம் நவித்யதே*

*பிரகிருதி கர்ம சொரூபம், மனதோ பிரகிருதியின் கூறுபாடாகும். ஆத்மாவிடத்து கர்மம் இல்லை. ஆத்மாவானது ஆனந்த சொரூபம். ஆகவே மனமானது ஆத்மாவில் நிலைத்து ஆனந்தமயமானால் அவனுக்கு உலகில் உள்ள கர்ம பாதிப்புகள் ஏற்படுவதில்லை.*

''ஆத்மாவே
இன்பமாய்!
ஆத்மாவே
திருப்தியாய்!
ஆத்மாவே
மகிழ்ச்சியாய்!
ஆனவனுக்
கில்லையாம்;
வினையாற்றும்
கடமைகள்!''

இவ்வுலகம் கர்மத்தோடு தொடர்புடையது. ஆகவே, இயங்கிக்கொண்டே இருக்கின்றது. மனது இவ்வுலக இயக்கங்களுடன் தொடர்புடையத ப் இருக்கின்றது. ஆகவே இன்பம், துன்பம் இரண்டிலுமே பாதிக்கப்படுகின்றது. மனது சில நேரம் அமைதியாகவும், சில நேரம் இன்பமாகவும், சில நேரம் துயரத்தில் வாடுவதாகவும் நிம்மதியில்லாமல் கடல்

அலைபோல் இருக்கின்றது. உலகம் எப்படி இயங்குகிறதோ அவ்வழியிலேயே சென்று மனது அலைக்கழிக்கப்படுகிறது.

ஆனால், ஆத்மா ஆனந்தமயமானது. உலக இயக்கங்கள் இதை பாதிக்க மாட்டாது. மனிதன் தன் கடமைகளைப் பற்றற்று நிறைவேற்றும்போது, அவனது மனம் ஆத்மாவில் இருக்கின்றது. இப்படி மனதை ஆத்மாவில் நிறுத்தி கடமைகளைச் செய்யும் போது ஒருவன் ஞானியாகின்றான். இந்நிலை உயர்வடையும் போது அவன் ஆத்மா பரமாத்மாவுடன் நிலைபெற்று விடுகிறது. இவர்கள் 'மஹாத்மா ஆன ஞானி மனிதர்' என்று அழைக்கப்படுகின்றனர். ஒவ்வொரு மனிதனும் பற்றற்று கடமைகளைச் செய்து சாதனை புரிந்தால் இப்பேற்றைப் பெற முடியும். பரமாத்ம நிலையைப் பெறுவதற்கு எல்லா மனிதர்களுக்கும் உரிமையுண்டு.

ஒருவனின் மனம் ஆத்மாவில் நிலை பெற்றவுடன் திருப்தியடைந்து விடுகிறான். ஆகவே மகிழ்ச்சியைத் தவிர வேறு எதுவும் அவனிடம் இருப்பதில்லை. அதன் பிறகு இவ்வுலகில் எதையாவது செய்ய வேண்டும் என்ற கட்டாயம் அவனுக்கில்லை. அப்படி எதையாவது செய்தால்கூட அதன் நன்மை தீமைகள் அவனைப் பாதிப்பதில்லை.

## ஓம் - 18

*நைவ தஸ்ய க்ருதேனார்த்தோ நாக்ரு தேனே ஹகஸ்சன*
*ந சாஸ்ய ஸர்வ பூதேஷு கஸ்சிதர்த்தவ்ய பாச்ரயஹ*

*ஆத்மாவில் மனம் பற்றான பிறகு அவன் பூர்ணானந்தத்தைப் பெற்றவனாகின்றான். அதன் பிறகு கர்மம் செய்து அவன் எதையும் பெறுவதுமில்லை. கர்மம் செய்யாமல் எதையும் இழப்பதும் இல்லை. அவன் எதையும் சார்ந்து இருப்பதுமில்லை. எதையும் எதிர்பார்ப்பதுமில்லை.*

''கர்மம் செய்தொன்றும்
பெறுதலுமில்லை!
கர்மம் செய்யாதொன்றும்
இழத்தலுமில்லை!
உயிர்களைச் சார்ந்து
இருப்பதுமில்லை!
ஏதோ ஒன்றை
எதிர்பார்ப்பதுமில்லை!
ஆத்மாவில் மனம் பற்றாகி
அவன் ஞானியான பின்னே!''

மனம் உலக இன்ப துன்பங்களில் இருந்து விலகி ஆத்மாவுடன் பற்றாகி விட்டால், இந்நிலை மிகவும் தூய்மையான நிலையாகும். இப்படிப்பட்ட நிலையில் உள்ளவர்களை ஞானி என்கின்றோம். இவர்கள் தேவைகள் எல்லாம் பூர்த்தியாகியவர்கள். இவர்கள் இவ்வுலகில் எதையாவது செய்தால் அதனால் நன்மையோ, தீமையோ இவர்களைச் சென்றடைவதில்லை. இவர்கள் யாருடைய உதவிகளையும் எப்போதும் எதிர்பார்க்க

மாட்டார்கள். இவர்கள் எப்போதும் தியானத்தில் மூழ்கி இருப்பார்கள். ஸத், சித், ஆனந்தமயமான பரமாத்மாவை அடைந்துவிட்ட ஞானிகள் இவர்கள். சரீர அபிமானம் இல்லாத படியால் தம் வாழ்க்கையைப் பற்றிக் கவலைப்படுவதில்லை.

காட்டில் தியானத்தில் இருந்த ஞானியிடம் சென்று ஒரு அரசன் அரசாட்சி செய்வது பற்றி ஆலோசனை கேட்டான். ஞானியும் அவனுக்கு ஆலோசனை கூறினார். அவரின் ஆலோசனை அவனை வியக்க வைத்தது. உடனே அவன் அந்த ஞானியை தன் அரமண்மனையில் வந்து தங்கும்படியும் அவருக்குத் தேவையான எல்லா உதவிகளையும் செய்வதாகக் கூறினான். அதை அவர் ஏற்றுக் கொள்ளவில்லை. அவர் தன் கட்டளையை ஏற்காவிட்டால் அவர் தலையை துண்டித்து விடுவதாக எச்சரித்தான். அதைக் கேட்டு அவர் பதட்டப் படவில்லை. ''நீ பேசியதில் இந்த வார்த்தைதான் மிகவும் முட்டாள்தனமானது'' என்றார். அவரின் ஆன்மாவை எவரும் எதுவுமே செய்துவிட முடியாது என்ற தெளிவைப் பெற்றவர் அந்த ஞானி. இவர் ஆனந்த ஸ்வரூபமாக இருப்பவர்.

## ஓம் - 19

*தஸ்மாதஸக்த: ஸததம் கார்யம் கர்ம ஸமாசர*
*அஸக்தோ ஹ்யாசரன்கர்ம பரமாப்னோதி பூருஷ:*

*மனிதன் பெருநிலையை அடைய வேண்டுமென்றால் பற்றற்றவனாய் பண்புடன் உயர்ந்த செயல்களைச் செய்ய வேண்டும். ஆகவே நீயும் பற்றற்று உயர்ந்த செயல்களைப் புரிவாயாக!*

''பற்றற்று கர்மம் செய்தால்
பரத்தை அடைந்திடுவாய்!
பற்றற்று யென்றும்
இயற்றிடு நன்கு;
நித்திய கர்மம் நீ
யாகையால்!''

நாம் எதைச் செய்தாலும் பற்றில்லாமல் செய்ய வேண்டும். செய்வதை முழுத் திறமையுடனும், தகுதிக்கு அப்பாற் செல்லாமல் தகுதிக்குற்பட்டே செய்ய வேண்டும். பற்றற்று செய்யும்போது ஆசைகள் உண்டாவதில்லை. ஆசைகள் இல்லாததால் எதிர்பார்ப்புகள் நம்மைப் பாதிப்பதில்லை. ஆகவே மனம் அலை போல் இல்லாமல் அமைதியாக இருக்கும்.

குழந்தைகளை வளர்க்கும்போதும் அவர்களின் படிப்புக்கு செலவு செய்யும்போதும், அவர்களைப் பற்றிய எதிர்காலக் கனவுகள் பெற்றோருக்கு வருவதுண்டு. மகன் எதிர்காலத்தில் தொழில் செய்து கொண்டு வரப்போகும் பணம் பற்றியும், அவன் திருமணத்தின்போது கிடைக்கப் போகும்

சீதனம் பற்றியும் பெற்றோர் சிந்தித்தும், பேசியும் மகிழ்வதுண்டு. இப்படிப்பட்ட ஆசைகள் பிற்காலத்தில் மன வேதனைகளைக் கொடுக்கக்கூடியவையாகத்தான் இருக்கும். குழந்தைகளைப் பாதுகாப்பதும் படிக்க வைப்பதும் பெற்றோரின் கடமைகள். இதில் எவ்விதமான எதிர்பார்ப்புகளும் இருக்கக் கூடாது. இதேபோல் இவ்வுலகில் பலவிதமான ஆசைகளை வளர்த்துக் கொண்டு, பற்றுடன் வாழும்போது வேதனைகள் நம்மை சூழ்ந்து கொள்கின்றன. நாமே கட்டிய ஆசையெனும் கூண்டுக்குள் நாமே அடைபட்டுக் கொண்டு இந்த பிரபஞ்சத்தில் சுதந்திரமாக உலா வர முடியாமல் வேதனைப்படுகின்றோம்.

சில பிரச்சினைகளை நாம் சந்திக்கும்போது மூச்சுத் திணறுவது போல் இருக்கும். நெஞ்சில் ஏதோ ஒன்று வந்து அடைப்பது போல் இருக்கும். இவையெல்லாம் ஏன் ஏற்படுகின்றன? நமது ஆசைகள், எதிர்பார்ப்புகள் நிறைவேறாத போது ஏற்படும் எதிர் விளைவுகள் இவை. நாம் இவ்வுலகில் செய்யும் ஒவ்வொன்றையும் நமது கடமைகளாக நினைத்து சுயநலமில்லாமல் செய்தால் மனரீதியாகவும், உடல்ரீதியாகவும் நாம் பாதிப்படைய மாட்டோம். நாம் நீரில் மூழ்கி எழுந்தது போல் சமுதாயப் பிரச்சினைகளில் மூழ்கி எழும்போது, பற்றற்ற என்ற எண்ணெய் பூசப்பட்டிருந்தால், வேதனை என்ற நீர் நம்மீது ஒட்டுவதில்லை. மேகமில்லாத நீல வானம் போல் உள்ளம் தெளிவாக இருக்கும். அங்கே இறைவன் மட்டுமே நிறைந்து இருப்பான். நாம் பற்றற்று நீதி நேர்மையுடன் நமது கடமைகளைச் செய்தாலே போதுமானது இறைவனை அடைவதற்கு.

## ஓம் - 20

*கர்மணைவ ஹி ஸம்ஸித்தி மாஸ்த்திதா ஜனகாதய:*
*லோகஸங்க்ரஹ மேவாபி ஸம்பச்யந் கர்த்து மர்ஹஸி*

*ஜனகர் முதலானவர்கள் தன்னலம் இன்றி கடமையைச் செய்து முக்தி அடைந்தார்கள். உலக நன்மையைக் கருத்தில் கொண்டு நீ கடமைகளைச் செய்வாயாக!*

''நல்வழி நடாத்த உலகை
நன்குணர்ந்தாவது:
கடப்பாடுடைத் திரு
கர்மஞ் செய்ய!
கர்மத்தாலே யடைந்தார் முக்தி
ஜனகர் முதலானோர்தாமே!''

பரமாத்மாவை அடைவதற்கு தத்துவ ஞானம் வேண்டும் என்பது ஒரு வழிமுறை. அதேபோல்தான் தத்துவ ஞானம் அறியாதவர்கள் பற்றற்று தனது கடமைகளைச் செய்து மனம் பரிசுத்தமாகி இதனால் அனுபவரீதியாக ஞானம் பெற்று பரமாத்மாவை அடைய முடியும் என்பதும்.

இப்படி கர்ம யோகம் செய்து ஞானம் பெற்றவர்கள் அஸ்வபதி, இக்ஷ்வாகு, பிரஹலாதன், அம்பரீஷன் முதலான மஹா புருஷர்கள். ஆகவே தத்துவங்களைப் படித்தவர்களும், உயர் குலத்தில் பிறந்தவர்களும், பிராமணர்களும் துறவிகளும் மட்டுமே இறைவனை அடைய முடியும் என்பதில்லை. பற்றற்று தனக்கு விதிக்கப்பட்ட கடமைகளை முறையாகச் செய்யும் எல்லோருமே பரமாத்மாவை அடைய முடியும். ஆகவே நாம் நமது கடமைகளை பற்றற்று முறையாகச் செய்ய வேண்டும்.

நாம் நம் கடமைகளை உணர்ந்து செய்யும் போது நமது குழந்தைகள், சுற்றத்தார், உறவினர்கள் ஆகியோரும் நம்மைப் பின்பற்ற முயற்சி செய்வர். இப்படி வாழ்க்கையை அமைத்துக் கொள்வது உலகிற்கு நாம் வழிகாட்டுவதாக அமையும்.

தந்தை ஆசிரியராக இருந்தால் மகனும் ஆசிரியராகி விடுகின்றான். தந்தை டாக்டராக இருந்தால் மகனும் டாக்டராகி விடுகின்றான். தந்தையின் பழக்கவழக்கங்களை சிறுவயதில் கவனிக்கும் மகன் வளர்ச்சியடையும்போது அதையே வாழ்க்கையில் பின்பற்றுகின்றான். பெற்றோரின் வாழ்க்கை முறையும், சுற்றத்தாரின் வாழ்க்கை முறைகளும் ஒருவனை வழி நடத்துவது இயற்கையாக இருக்கின்றது. ஆகவே நமது வாழ்க்கையை சிறப்பானதாக அமைத்துக் கொண்டால் அது மற்றவர்களை சரியான வழியில் வழி நடத்துவதற்கு உதவுகிறது.

நாம் இவ்வுலகில் நமக்காக விதிக்கப்பட்ட கடமைகளை பற்றற்று உயர்வான முறையில் வாழ்ந்து உயர்ந்து விட்டால் இதையே நம் குழந்தைகளும், சுற்றத்தாரும் பின்பற்றுவர். இதற்கான தெளிவையும், அறிவையும் நாம் வாழ்ந்து காட்டும் முறையிலேயே மற்றவர்களுக்கு நாம் கொடுத்து விடலாம்.

வாழ்க்கையை எப்படி வாழ வேண்டும் என்று அறியாமலேயே வாழ்ந்து கொண்டிருப்பவர்கள்தான் அனேகமானோர். உலக ஆசைகளில் அகப்பட்டு வேதனையான வாழ்க்கையை வாழ்ந்து எது சரி, எது பிழை என்றுகூட சிந்திக்க நேரமில்லாமல் மிக வேகமாக வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் அதிகமானோர். வாழ்க்கை என்றால் என்ன? அதை எப்படி வாழ வேண்டும்? இந்த உலகில் மகிழ்ச்சியாக வாழ்வது எப்படி? என்ற கேள்விகளுக்கு பதிலாக தெளிவான வாழ்க்கையை நாம் இவ்வுலகில் வாழ்ந்து காட்டி மற்றவர்களையும் இந்த வழிமுறைகளைப் பின்பற்றச் செய்ய வேண்டும். இது இவ்வுலகிற்கு நாம் செய்யும் நன்மையாக இருக்கும்.

## ஓம் - 21

*யத்ய தாசகரதி ச்ரேஷ்ட்ட ஸ்தத்ததே வேதரோ ஜநஹ*
*ஸ யத்ப்ரமாணம் குருதே லோக ஸ்தனுவர்ததே*

*மேலோர் எதைச் செய்கின்றார்களோ அதையே மற்றவர்களும் செய்கின்றனர். மேலோர் எதை உண்மை நிலை என்று கூறுகின்றனரோ அதையே உலகம் அனுசரிக்கின்றது.*

''மேலோன் செயல் வழியே
செல்வோர் மற்றோர்!
மேலோன் செல் வழிமுறையே
சென்றிடும் உலகம்!''

புத்தன், ஏசு, காந்தி போன்ற மஹான்கள் இவ்வுலகில் வாழ்ந்து காட்டிய வழிமுறைகள் மிகவும் உயர்ந்தவையாக இருந்தன. இவர்களை மக்கள் மதிக்கின்றனர். இவர்களின் வழிமுறைகளைப் பின்பற்றும் மக்களும், பின்பற்ற முயற்சி செய்யும் மக்களும் அதிகமானோர்.

மேலோன் என்று மக்களால் மதிக்கப்படும் மஹான்கள் உலகக் கடமைகளில் சரியான வழியிலேயே செல்ல வேண்டும். ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் இவர்கள் கடமை தவறி விட்டால் அவர்கள் வழியில் செல்லும் எல்லோருமே தவறு செய்ய நேரிடும். மஹான்கள் தவறு செய்ய மாட்டார்கள் என்ற நம்பிக்கையில் மக்கள் வாழ்வதால் மஹான் செய்த தவறும் சரியானதாகத்தான் இருக்கும் என்று நம்பி மக்களும் அதையே செய்வர். அப்படி ஒரு சூழ்நிலை ஏற்படுமிடத்து உலக வாழ்க்கையில் தடுமாற்றம் ஏற்பட்டு குழப்பத்தை உண்டு பண்ணும். ஆகவே மேலோன் என்று மக்களால் ஏற்றுக்

கொள்ளப்பட்டவர்கள் பொறுப்புடன் கர்மங்களைச் செய்ய வேண்டும்.

சாதாரணமாகவே அரசியல் தலைவர்களைப் பின்பற்றும் மக்கள், தம் தலைவன் செய்வது எல்லாமே சரியானவைதான் என்று வாதிப்பதைப் பார்க்கின்றோம். அரசியல் தலைவர்கள் சுயநல நோக்குடன் செய்யும் தவறுகளைக்கூட சரியானவைதான் என்று அவரைச் சார்ந்தவர்கள் வாதிக்கின்றார்கள். இதனால் இந்த சமுதாயத் தலைவர்கள் தங்களை நம்பி பின்பற்றி வருபவர்களை தவறான வழிக்கு திசை திருப்பி விடுகின்றனர். ஆகவே சமுதாயத்தில் தங்களை வழிநடத்துவோர் என்று கூறிக்கொள்ளும் தலைவர்களும் பெரியோர்களும் தங்கள் கடமைகளை சரிவரச் செய்ய வேண்டும். இவர்கள் தங்கள் வழியில் நீதி நேர்மையை முழுமையாகக் கடைப்பிடிக்க வேண்டும்.

தற்காலத்தில் தங்களை ஆன்மீகவாதி என்று கூறிக் கொண்டு மக்கள் சேவை செய்வதாகக் கூறிக்கொண்டு, தங்கள் பேச்சுத் திறமையால் மக்களை மயக்கி கொலை, களவு, கற்பழிப்பு முதலியவற்றில் ஈடுபட்டு சிறைகளில் அடைக்கப் படுபவர்களையும் காணக்கூடியதாக இருக்கின்றது. இவர்கள் சமுதாய வளர்ச்சிக்கோ, உலகிற்கோ நன்மை செய்யக் கூடியவர்கள் அல்லர். இவர்கள் மக்களுக்கு ஆலோசனைகள் கூறுவது தவிர்க்கப்பட வேண்டும்.

மற்றவர்களால் மதிக்கப்படும் ஒவ்வொருவருமே உயர்வான சிறந்த வாழ்க்கை முறைகளைத் தேர்ந்தெடுத்து வாழ்வதுதான் சிறப்பானதாக இருக்கும். மதத் தலைவர்கள், அரசியல் தலைவர்கள், நிர்வாக இயக்குநர்கள், சாதனையாளர்கள், குடும்பத் தலைவர்கள் என்று ஒவ்வொரு துறையிலும் முதன்மையாக இருப்பவர்கள் தங்கள் கடமைகளை சரிவரச் செய்ய வேண்டும். இப்படிச் செய்தால்தான் இவ்வுலகம் முறைப்படி சரியான வழியில் தெளிவாக இயங்கிக் கொண்டிருக்கும். இல்லை யென்றால் பலவித சிக்கல்களால் வேதனையேற்பட்டு தவிக்கும்.

## ஓம் - 22

*நமே பார்த்தாஸ்தி கர்தவ்யம் த்ரிஷுலோகேஷுகிஞ்சந*
*நான வாப்த மவாப்தவ்யம் வர்த்த ஏவ ச கர்மணி.*

*மூன்று உலகத்திலும் எனக்கு கடமையென்று எதுவுமே கிடையாது. நான் எதையாவது அடைய வேண்டுமென்று முயற்சி செய்ய வேண்டியதில்லை. நான் அடையாதது எதுவுமே கிடையாது. ஆயினும் நான் கர்மம் செய்துகொண்டே இருக்கின்றேன் பார்த்தா!*

''கடமையேதும் கிடையாது
மூவுலகிலும் எனக்கு!
அடைந்திட வேண்டுமென்ற;
அடையாதொன்று மில்லையெனக்கு!
ஆயினும் செய்கின்றேன் கர்மம்
பார்த்தா! என்றும்!''

பகவான் சர்வமும் அவராகவே இருக்கின்றார். ஆகவே அவருக்கு மூவுலகிலுமே பெற்றுக்கொள்ளக்கூடிய, அவருக்குக் கிடைக்காத எதுவுமே இல்லை. ஆனால் உலகத்திற்கு வழிகாட்டியாக இருப்பதற்காக கர்மங்களைச் செய்கின்றார். இவ்வுலகம் எப்படி இயங்க வேண்டும் என்பதை உலக மாந்தர் மீது உள்ள கருணையால் தனது கர்மத்தின் மூலம் காட்டுகின்றார்.

இறைவன் நம்மீது காட்டும் கருணையால் நல்வழியில் வாழும் நாம் மற்றவர்களுக்கும் அதே நல்வழிகளைக் காட்டி வழிநடத்த உதவ வேண்டும்.

சுவாமி விவேகானந்தர் இவ்வுலகில் பற்றில்லாத ஞானியாக வாழ்ந்தார். ஆனாலும் அவரிடம் இருந்த அறிவை முழு உலகத்திற்கும் கொடுத்தார் என்பதை உலகம் அறியும். மதர் தெரசா அம்மையார் அவர்கள் தனது கடைசிக் காலம் வரை இந்த உலகத்திற்காக கர்மம் ஆற்றினார். ஆனால் இவ்வுலகில் எதையுமே அவர் எதிர்பார்த்ததில்லை.

புத்தர் ஞானம் பெற்ற பிறகு காட்டிலேயே இருந்து விடவில்லை. தான் அறிந்தவற்றை உலக மக்களுக்குக் கூறி சமுதாயத்தில் நல்ல சில மாற்றங்களைச் செய்தார். அவர் இதனால் தனிப்பட்ட முறையில் எந்த நன்மையையும் எதிர்பார்க்கவில்லை. இவர் ஒரு முழுமையடைந்த சம்பூர்ணமான ஒருவராக இருந்தார். உலக இயக்கங்கள் அவருக்கு எதையும் செய்துவிட முடியாது என்ற நிலையில்தான் அவர் இருந்தார். ஆனாலும் உலக மக்களுக்கு கடைசிக் காலம் வரை நல்வழிகளைக் காட்டி போதனை செய்து கொண்டேயிருந்தார்.

இறைவன் பல அவதாரங்களில் இவ்வுலகில் தோன்றி வாழ்ந்ததாக இதிகாசங்களில் படிக்கின்றோம். இந்த இதிகாசங்கள் கூறுவதை கவனித்தால் இவ்வுலகில் மாந்தர் எப்படி வாழ வேண்டும் என்பதை விளக்குவதாகவே இருக்கின்றன. வாழ்க்கை எப்படியும் வாழலாம் என்பதல்ல; இப்படித்தான் வாழவேண்டும் என்பதை புராணங்களும், இதிகாசங்களும் விளக்குகின்றன. ஆகவே உலகிற்கு வழிகாட்டவே இந்த அவதாரங்கள் தோன்றி யுள்ளன.

ஒரு நாட்டின் பிரதமர் இறந்தபோது அவரின் சொத்துக்களைக் கணக்கெடுக்கத் தொடங்கினார்கள். அவர் விட்டுச் சென்ற பணம் அறுநூறு ரூபாய் மட்டுமே இருந்தது. அவர் வேறு எந்த சொத்துக்களுக்கும் சொந்தக்காரர் இல்லை யென்பது தெரியவந்தது. ஆனால் இவர் அதிக காலம்

அரசியல்வாதியாக வாழ்ந்து மரணமடையும்போதும் பிரதமர் பதவியில் இருந்தவர். இவர் வாழ்ந்து காட்டிய அரசியல் வாழ்க்கை மற்ற அரசியல்வாதிகளுக்கும், மக்களுக்கும் வழிகாட்டலாகவே அமைந்திருந்தது.

இவ்வுலகில் எப்படி வாழ வேண்டும் என்ற வழிமுறைகள், இறைவனாலும், ஞானிகளாலும், நம் முன்னோர்களாலும் நமக்கு தெளிவாகக் காட்டப்பட்டுள்ளன. இவ்வழியை நாமும் பின்பற்ற வேண்டும்.

# ஓம் - 23

*யதி ஹ்யஹம் ந வர்தேயம் ஜாது கர்மண்யதந்த்ரித!*
*மம வர்த்மானுவர்தந்தே மனுஷ்யா: பார்த்த ஸர்வச:*

*ஏனெனில் பார்த்த! ஒருகால் நான் கவனத்துடன் கர்மங்களில் ஈடுபடாமல் இருந்தால் மனிதர்கள் எல்லா விதங்களிலும் என்னுடைய வழியையே பின்பற்றுவார்கள்.*

''எல்லா விதங்களிலும்
என் வழி வருவோர்!
இன்னல்கள் தாக்கிட
இனியவை இழப்பர்: பார்த்த
ஈடுபடாவிட்டால்: கவனமாய்
எப்பொழுதும் கர்மத்தில் யான்!''

தாய் தந்தை செய்வதைத்தான் குழந்தைகளும் செய்கின்றன. ஆசிரியர் செய்வதைத்தான் மாணவர்களும் செய்கின்றனர். தலைவன் செய்வதைத்தான் தொண்டனும் செய்கின்றான். துறவி செய்வதை சீடன் செய்கின்றான்.

தாய் சமைப்பதற்கு மரக்கறி வெட்டும்போது குழந்தையும் அருகில் அமர்ந்துகொண்டு தனக்கும் ஒரு கத்தியும் மரக்கறியும் வேண்டும் என்று அடம்பிடிக்கும். கொடுத்தால் தாய் செய்வதைப் போலவே தானும் செய்ய முயற்சி செய்யும். தந்தை மண்வெட்டியை எடுத்துக் கொண்டு தோட்டத்தில் மண்வெட்டும்போது குழந்தை தனக்கும் மண்வெட்டி வேண்டும், தானும் மண் வெட்ட வேண்டும் என்று அழும். மண்வெட்டியைக் கொடுத்தால் தானும் மண் வெட்ட முயற்சி செய்யும்.

புராணக் கதைகளைப் புரட்டிப் பார்த்தால் இராமர் சொல்லுக்குக் கட்டுப்பட்ட சீதை தீக்குளித்தாள். தாய் கூறியதால் பஞ்ச பாண்டவர்களும் ஒரு பெண்ணையே மணந்து கொண்டார்கள். இறைவன் மேல் பக்தி கொண்டதால் கண்ணப்பர் தன் கண்ணையே இறைவனுக்கு தானம் கொடுத்தார்.

தற்காலத்தில் தன் தலைவனுக்காக தன்னையே வருத்திக் கொண்டு உண்ணாவிரதம் இருப்பவர்களும், நேர்த்திக் கடன் என்று கூறிக்கொண்டு தலைவனுக்காக கை விரல்களை வெட்டி காணிக்கையாக கோவில் உண்டியலில் போடுபவர்களையும், தலைவனுக்காகத் தீக்குளிப்பவர்களையும் காணக்கூடியதாக இருக்கின்றது. இவற்றைப் பார்க்கும்போது தலைவர்களும், சமுதாயத்தை வழிநடத்துபவர்களும், குடும்பத் தலைவர்களும் மற்றவர்களின் சிந்தனையை தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து அவர்களை வழிநடத்திச் செல்லக்கூடிய சக்தியைப் பெற்றிருக்கின்றார்கள் என்பது வெளிப்படையாக அறிய முடிகின்றது. மக்கள் இறைவனிடமோ அல்லது மற்றவர்களிடமோ தெளிவான ஒன்றைப் பெற்றவுடன் தொடர்ந்து அவர்கள் வழியையே பின்பற்றுகின்றனர். ஆகவே முன்நின்று வழிநடத்துவோர் கொள்கைகளைப் பின்பற்றி தங்கள் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்கின்றனர் என்பதே உண்மை.

ஆகவே மக்களால் மதிக்கப்படுகின்றவர்கள் செய்யும் ஒவ்வொரு செயலும் சிந்தித்து நல்லதாகவே செய்ய வேண்டும். இவர்கள் ஒரு சிறு தவறு செய்தால்கூட மக்கள் அதைப் பின்பற்றி வேதனை அனுபவிக்க வேண்டி வரும். காரணம் தங்களால் மதிக்கப்படுபவர்கள் நீதி நேர்மையோடு செயல்படுபவர்கள் என்று மக்கள் நம்பிக்கை வைத்துள்ளனர்.

# ஓம் - 24

*உத்ஸிதேயுரிமே லோகா ந குர்யாம் கர்ம சேதஹம்*
*ஸங்கரஸ்யச கர்த்தா ஸ்யாமுபஹன் யாமிமா ப்ரஜா:*

*நான் கர்மஞ் செய்யாவிட்டால் இம்மனிதர்கள், அனைவரும் சீர்குலைந்து போவார்கள். மேலும் நான் சீர்குலைவு செய்கிறவனாகவும் இம்மாந்தர் அனைவரையும் அழிப்பவனாகவும் ஆவேன்.*

''இவ்வுலகம் அழிந்து விடும்
என் கர்மம் இல்லையெனில்!
ஸ்வதர்மம் நாசம் செய்த,
கர்த்தாவும் நானாவேன்;
மக்களைக் கெடுத்தவனும்
நானாக ஆவேனே!''

மனிதர்கள் ஒவ்வொருவரும் ஸ்வதர்மங்களின்படி எப்படி வாழ வேண்டும் என்று இறைவன் நமக்கு வழிகாட்டிக் கொண்டிருக்கின்றார். இதன்படித்தான் நம் மூதாதையோரும் வாழ்ந்தனர். இதன் வழியே நாமும் வாழ்ந்தால் இவ்வுலகம் உயர்வடையும். இல்லையேல் அழிந்து விடும்.

உழவுத் தொழில் செய்பவர்கள் அத்தொழிலின் நுணுக்கங்களை அறிந்து வைத்திருப்பர். நிலத்தை பண்படுத்துவது எப்படி? விதைப்பது எப்படி? நீர் விட வேண்டியது எப்போது? பசலைப் போட வேண்டிய அளவு நேரங்கள், அறுவடை செய்ய வேண்டிய காலம், அவற்றைப் பாதுகாக்கும் முறைகள் என்பதையெல்லாம் தெளிவாக அறிந்தவர்களாக இருப்பார்கள். இதேபோல்தான் தொழில் துறைகளையும் மற்றைய

நிர்வாகங்களையும் நிர்வகிக்கும் இயக்குநர்கள் அந்த தொழிலைப் படித்து தேர்ச்சியடைந்து, நடைமுறை அனுபவமும் பெற்று அதன் நெளிவு சுளிவுகளை அறிந்தவர்களாக இருப்பர்.

இதேபோல் வைத்தியர்கள் அதைப்பற்றி படித்து எந்த நோய்க்கு எந்த மருந்தை எப்படி கொடுக்க வேண்டும் என்பதையும், நோயின் தன்மைகளையும் அறிந்தவர்களாக இருப்பர். இதேபோல் தங்கள் அறிவுக்கும் திறமைக்கும் ஏற்றாற் போல் தொழில்களைத் தேர்ந்தெடுத்து செய்ய வேண்டும். அப்போது அந்தத் தொழில் வளர்ச்சியடையும். தொழில்களில் எந்தத் தவறுகளும் ஏற்படாது. இதனால் உலகம் சீராக இயங்கும்.

இவ்வுலகில் விவசாயிகள், அரசியல்வாதிகள், போர் வீரர்கள், வியாபாரிகள், வைத்தியர்கள், ஆசிரியர்கள், அர்ச்சகர்கள், சமுதாயத் தலைவர்கள், எழுத்தாளர்கள் என்று நாட்டை வழி நடத்தும் சக்தி படைத்தவர்கள். எல்லோருமே தங்கள் அறிவையும், திறமையையும் பயன்படுத்தாமல் மூன்று வேளையும் உண்ணுவதும் உறங்குவதும் அமைதியாக உலக இயக்கத்தில் இருந்து ஓரமாக ஓய்வாக இருப்பதும் நல்லதல்ல! நல்ல தகுதியும் திறமையும் உள்ள இவர்கள் ஒதுங்கிக் கொள்வதால், தகுதியும் திறமையும் இல்லாதவர்கள் சமுதாயத்தில் முக்கிய இடங்களில் அமர்ந்து கொண்டு உலகை சீரழித்து விடுகின்றனர். பணத்தையும் சுகபோகத்தையுமே மனதில் கொண்டு இயங்கும் இவர்கள் சமுதாய நலனில் சிறிதும் கவனம் செலுத்துவதில்லை. ஆகவே இவ்வுலகம் தவறான வழியில் திசை திருப்பப்பட்டு உலக மக்கள் துன்பம் அடைகின்றனர். ஆகவே தகுதியும், திறமையும் உடையவர்கள் எப்போதும் இவ்வுலகில் ஸ்வதர்மத்தை கடைப்பிடித்து இயங்கிக்கொண்டே இருக்க வேண்டும். இல்லையென்றால் உலகில் நடக்கும் தவறான எல்லாவற்றிற்குமே காரணமானவர்களாக குற்றத்தை சுமக்க வேண்டி வரும்.

## ஓம் - 25

*ஸக்தா: கர்மண்ய வித்வாம்ஸோ யதா குர்வந்தி பாரத*
*குர் யாத் வித்வாம் ஸ்ததா ஸக்தஸ் சிகிர்ஷுர் லோக*
*சங்க்ரஹம்*

*பரதகுலத் தோன்றலே! கர்மங்களில் பற்றுக் கொண்ட அஞ்ஞானிகள் எவ்விதம் கர்மங்களைச் செய்கின்றார்களோ அதேபோல் பற்றில்லாத தத்துவஞானிகளும் உலகத்திற்கு வழிகாட்டுதலை விரும்பி கர்மங்கள் செய்ய வேண்டும்.*

''பற்றுள்ளவராய்க் கர்மம்
பாமரர் செய்வது போல்!
பாரினில் கர்மம்:
செய்திடல் வேண்டும்!
பற்றில்லா பண்டிதர்கள்
பெருநெறி புகட்டிடவே!''

குழந்தையை தாய் வளர்க்கும்போது மிகுந்த ஆசையோடும் பற்றோடும் வளர்க்கின்றாள். அக்குழந்தையின் எதிர்கால நன்மைகளை மனதில் கொண்டு அன்பு, அறிவு, உணவு, உடை, சரீர வளர்ச்சி எல்லாவற்றிலுமே அதிகமான கவனத்தை செலுத்துகின்றாள்.

காதலர்கள் ஒருவர் மேல் ஒருவர் வைத்திருக்கும் அன்பினால் ஒருவருக்காக மற்றவர் தன்னை முழுமையாகவே தியாகம் செய்யத் தயாராகி விடுகின்றனர்.

ஒருவன் வீடு கட்ட வேண்டுமென்றோ அல்லது ஏதாவது ஒன்றை தன்வசப்படுத்திக் கொள்ள வேண்டுமென்றோ முடிவு

செய்தவுடன் எத்தனை இடையூறுகள் வந்தாலும் எல்லாவற்றையும் சமாளித்து தன் குறிக்கோளை வென்று எடுக்கின்றான்.

இவையெல்லாம் இவ்வுலகில் பற்றுடன் வாழ்வதாலேயே செய்ய முடிகின்றது. உலக வாழ்க்கையில் பற்றுள்ள எல்லோருமே தங்கள் முயற்சியால் விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்ள முடிகின்றது.

ஆனால் பற்றுடன் இவ்வுலகில் வாழ்பவர்கள் தங்கள் விருப்பங்களை பூர்த்தி செய்து கொள்வதற்காக முயற்சிகள் செய்யும்போது அவர்களின் மனம் வேதனை, மகிழ்ச்சி, வெறுப்பு, விருப்பு என்று பல மாறுதல்களைக் கொடுத்து அலைக்கழித்து விடுகிறது.

ஆனால் அஹங்காரம், மமகாரம், பற்று, ஆசை அறவே இல்லாத ஞானிகள் உலக இயக்கங்களில் ஈடுபடும்போது அவர்கள் மனது ஒரே நிலையில் இருக்கும். மனது சஞ்சலப் படுவதில்லை. இவர்கள் கர்மம் செய்தாலும், செய்யா விட்டாலும் இரண்டுமே இவர்களுக்கு ஒன்றுதான். ஆனால் இவர்கள் கர்மம் செய்வதால் உலகில் பற்றுடன் வாழும் மனிதர்கள் சிறந்த பயனை பெற்றுக் கொள்ள முடியும்.

பற்றுடன் உலகில் வாழும் மனிதர்கள் கர்மங்கள் ஆற்றும்போது ஸ்வதர்மப்படி செயல்படுவது மிகக் குறைவே. அனேகமானோர் ஸ்வதர்மம் என்றால் என்னவென்று அறியாமலேயே தவறான வழிகளில் சென்று தானும் துன்பப் பட்டு சமுதாயத்தையும் துன்பத்தில் ஆழ்த்தி விடுகின்றனர். ஆனால் ஞானிகள் உலக இயக்கங்களில் ஈடுபடும்போது ஸ்வதர்மத்தின்படி கர்மங்களை ஆற்றுகின்றனர். இப்படி இவர்கள் கர்மம் செய்யும்போது இது உலக மக்களுக்கு வழிகாட்டியாக அமைந்து விடுகிறது. இவர்கள் கர்மங்கள் செய்யும் முறைகளை மக்கள் பின்பற்றும்போது ஸ்வதர்மம்

மக்களிடம் நிலைபெற்று உலக வாழ்க்கை இன்பமாக மாறி விடும். ஆகவே ஞானிகள் உலகில் கர்மங்கள் செய்ய வேண்டும். ஸ்வதர்மத்தின்படி மக்கள் வாழ பழகிக் கொண்டால் அவர்களின் மனதில் வேதனை, வெறுப்பு ஏற்படுவதில்லை. மகிழ்ச்சிகூட மனதை அலைக்கழிப்பதில்லை. அமைதியான வாழ்வை வாழ முடியும்.

ஸ்வதர்மம்:- நமது அறிவுக்கும், சூழ்நிலைக்கும் ஏற்றவாறு வெவ்வேறாக யாகங்கள், தானம், தவம், ப்ரணாயாமம், புலனடக்கம், அத்யயனம், கற்பிப்பது, மக்களைக் காப்பது, போரிடுவது, உழுது பயிரிடுவது, வியாபாரம், சேவை முதலிய ஆற்ற வேண்டிய கடமைகளால் சித்திக்கக் கூடியதே ஸ்வதர்மம் என்பது.

## ஓம் - 26

*ந புத்தி பேதம் ஜநயே தக்ஞாநாம் கர்ம ஸங்கிநாம்*
*ஜோஷயேத் ஸர்வகர்மாணி வித்வாந்யுக்த ஸ்ஸமாசரன்.*

*கர்மப் பற்று இல்லாத ஞானி எல்லாக் கர்மங்களையும் செய்ய வேண்டும். கர்மப் பற்றுடையவர்களை எல்லாக் கர்மங்களிலும் ஈடுபடுத்துதல் வேண்டும். அப்படி எல்லாக் கர்மங்களிலும் பற்றுடன் அவர்கள் செயற்படும்போது அவர்கள் மனம் கலங்கி விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.*

''கர்மப் பற்றில்லா ஞானி
கர்மமனைத்திலும் ஈடுபடல் வேண்டும்!
கர்மப் பற்றுள்ள அஞ்ஞானி
கர்மமனைத்திலும் ஈடுபடுத்தப்படல் வேண்டும்
கலங்கிவிடாமல் அவன் மனமே
காத்திடவும் வேண்டும்!''

ஒருவன் நம்பிக்கையுடன் கர்மம் செய்யும்போது இவ்வுலகில் பல வெற்றிகளைப் பெற்று விடுகின்றான். நம்பிக்கையுடனும் பற்றுடனும் செயற்படும் மனிதர்களால் இவ்வுலகம் வேகமாகவும் சுறுசுறுப்புடனும் இயங்கிக் கொண்டிருக்கின்றது. கர்மத்தில் ருசியுள்ளவர்களால்தான் பல கோணங்களில் இவ்வுலகம் இயங்கிக் கொண்டிருக்கின்றது. இவர்களிடம் சென்று தத்துவஞானிகள் அவசரப்பட்டு தத்துவ ஞானம் பற்றியோ, கர்ம யோகம் பற்றியோ கூறி யாருடைய மனதிலாவது இப்படிச் செய்யலாமா? அப்படிச் செய்யலாமா? என்ற தடுமாற்றத்தை எற்படுத்தி விடக் கூடாது. இப்படிச் செய்வது அவர்களின் புத்தியைக் குழப்பி விடும்.

உலக கர்மங்களில் பற்றுடன் வாழ்ந்து வருபவர்களிடம் அவசரப்பட்டு தத்துவ ஞானத்தையோ, கர்ம யோகத்தையோ போதிக்கும்போது மேன்மையடைவதற்கு பதிலாக இப்போது இருக்கும் நிலையில் இருந்து வழுவி வீழ்ச்சியடைவார்கள். ஆகவே இவர்களுக்கு தத்துவஞானத்தையோ, கர்ம யோகத்தையோ போதிக்கும்போது மிக மிகக் கவனமாக அவர்கள் அவர்களின் கர்மங்களில் இருந்து தவறி விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

கர்ம பற்றில்லாத ஞானிகள் உலக இயக்கங்களில் ஈடுபட்டு கர்மங்கள் செய்ய வேண்டும். கர்மங்கள் செய்யும் போது இவ்வுலகில் எதைச் செய்தாலும் எப்படிப்பட்ட சந்தர்ப்பத்திலும் மனிதனின் மனநிலை பாதிக்க மாட்டாது, இவ்வுலக இயக்கம் மனிதனை துன்பத்தில் ஆழ்த்திவிட முடியாது என்பதையும், இதற்கெல்லாம் காரணம் மனம் பற்றற்ற நிலையில் இருக்க வேண்டுமென்பதையும் ஞானிகள் இவ்வுலக கர்மங்களில் சம்பந்தப்பட்டு வாழ்ந்து மக்களுக்கு உணர்த்த வேண்டும்.

இவ்வுலக கர்மங்களில் ஈடுபடும் அதே நேரம் மக்களுக்கு உபதேசம் செய்தால் உண்மையின் தெளிவை மக்கள் உணர்ந்து கொள்வார்கள்.

பற்றற்ற ஞானிகள் கர்மம் செய்யும்போது சுயநலம், போட்டி, பொறாமைகள் எதுவுமே இருப்பதில்லை. ஆகவே இவர்களின் வெற்றியும் தோல்வியும் இவர்களைப் பாதிப்பதில்லை. இதனால் இவர்கள் சம்பந்தப்பட்ட எதிலுமே, கொலை, களவு, தீவிரவாதம் போன்றவை தலைதூக்க இடமில்லை. இவர்களைச் சுற்றி அமைதியான, இன்பமான வாழ்க்கை மட்டுமே இருக்க முடியும். இப்படியான உயர்ந்த வாழ்க்கையை இவர்கள் வாழ்ந்து காட்டுவதால் உலக மக்கள் இவர்களைப் பின்பற்றி உயர்வடைய முடியும்.

ஆகவே பற்றற்ற ஞானிகள் உபதேசம் செய்வதோடு நிறுத்திக் கொள்வதோ, சமுதாயத்தில் இருந்து ஒதுங்கிக் கொள்வதோ கூடாது. சமுதாய வாழ்க்கையில் கலந்து வாழ்க்கையென்றால் என்ன? அது எப்படியானது என்பதை வாழ்ந்து காட்ட வேண்டும். அவசரப்பட்டு தத்துவங்களைப் பேசி அரிச்சுவடி படிக்கும் குழந்தையிடம் இலக்கியப் பாடம் புகட்டுவதுபோல் ஜீரணிக்க முடியாதவற்றைக் கூறி குழப்பி விடக்கூடாது.

# ஓம் - 27

*ப்ருக்ருதே: க்ரியமாணானி குணைஹி கர்மாணி சர்வ:*
*அஹங்கார விமூடாத்மா கர்த்தாஹ மிதி மந்யதே*

*சத்வம், ரஜஸ், தமஸ் என்ற முக்குணங்களால் உலகில் கர்மங்கள் நிகழ்கின்றன. ஆனால் அஹங்காரமுடையவன் 'நானே எல்லாவற்றையும் செய்கின்ற கர்த்தா' என்று கூறுகின்றான்.*

''கர்மங்கள் நிகழ்வதெல்லாம்
பிரகிருதி குணங்களாலே!
கர்த்தா நானென்பான்
அஹங்கார மோகிதானே!''

ப்ரகிருதியில் உண்டான ஸத்வ, ரஜஸ், தமஸ் ஆகிய மூன்று குணங்கள்தாம் மனம், புத்தி, அஹங்காரம், ஐம்பெரும் பூதங்கள், காது முதலான பத்து புலன்கள், ஒலி முதலான ஐந்து நுகர் பொருட்கள் - ஆக இருபத்துமூன்று தத்துவங்களாக மாறுகின்றன.

இவற்றின் இயக்கங்கள்தாம் நாட்டின் தலைவன், செல்வந்தன், விஞ்ஞானி, கலைஞன், கொலைகாரன், சாதனையாளன் என்று பலவழிகளில் மனிதனை இயக்கிக் கொண்டிருக்கின்றன.

ஆனால் ஆத்மாவுக்கும் இந்த இயக்கங்களுக்கும் எந்தவிதத் தொடர்புகளும் இல்லை. மனிதன் பிரகிருதியில் உண்டான குணங்களால் இயக்கப்பட்டு தன்னைப்பற்றி தெளிவாக உணர்ந்து கொள்ளாமல் 'நானே சாதிக்கிறேன்' என்ற அஹங்காரம் கொண்டவனாக இருக்கின்றான்.

ஒரு விஷயத்தை முடிவு செய்தல் புத்தியின் செயல். அவன் பைத்தியமாகிவிட்டால் இதைச் செய்ய முடியாது. ஒலியைக் கேட்பது காதின் செயல்; காது செவிடாகி விட்டால் கேட்க முடியாது. உருவத்தைப் பார்ப்பது கண்களுடைய செயல்; குருடனாகி விட்டால் பார்க்க முடியாது. சுவைப்பது நாக்கினுடைய செயல்; நரம்புகள் உணர்வை இழந்து விட்டால் சுவையை அறிய முடியாது. கால் உடைந்து விட்டால் நடக்க முடியாது. ஆகவே பிரகிருதியில் உண்டான மூன்று குணங்களால்தான் இயங்கிக்கொண்டும் பல மாற்றங்களை இவ்வுலகில் ஏற்படுத்திக் கொண்டும் இருக்கின்றோம். நமது உடல் இயக்கத்தாலும் புத்தியாலும் இவ்வுலகில் செயல்பட்டு அதை நானே செய்கின்றேன் என்று சொல்வது அஹங்காரம். ஆத்மா எது ஆத்மா அல்லாதது எது என்று அறிய வேண்டும்.

நாம் நம் வாழ்க்கையில் உலக இயக்கங்களில் சம்பந்தப் பட்டு மனரீதியாகவும், உடல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும், சமுதாயத் திருப்பங்களும் எத்தனை எத்தனையோ மாற்றங்களும் இன்பத் துன்பங்களும் காண்கின்றோம். ஆனால் இந்த எல்லாக் கர்மங்களுக்கும் ஆத்மாவுக்கும் எந்தத் தொடர்பும் இருப்பதில்லை!

## ஓம் - 28

*தத்வவித்து மஹாபாஹோ குணகர்ம விபாகயோ:*
*குணாகுணேஷுவர்தந்த இதி மத்வா ந ஸஜ்ஜதே*

*ஆனால் நீண்ட புஜங்களை உடையவனே! குணங்களின் பிரிவு, கர்மங்களின் பிரிவு இவற்றின் தத்துவம் அறிந்த ஞான யோகி குணங்கள் அனைத்தும் குணங்களில் செயற்படுகின்றன என்று அறிந்து அவற்றில் பற்றுக் கொள்ளாதிருக்கின்றான்.*

''குணங்கள் குணங்களிலே
பிரவர்த்திப்பதறிந்து!
குணகர்ம ஞானியோ
பற்றுவைப்பதில்லை பெருந்தோளா!''

ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற முக்குணங்களின் விளைவாக உலகம் இயங்குவது மட்டுமல்லாமல் மனதில் சாத்வீக, ராஜஸ, தாமஸ எண்ணங்கள் உள்ளன. இந்த எண்ணங்களின் அடிப்படையில் மனிதன் இயங்குவதால் சாத்வீகன், ராஜஸன், தாமஸன் என்றும் மனிதர்களைப் பிரித்துப் பார்க்கின்றோம். இந்திரியங்களாக வடிவெடுத்துள்ள குணங்கள் விஷயங்களாக வடிவெடுக்கின்றன.

முதலாவதாக மனம், புத்தி, அஹங்காரம், ஐம்பெரும் பூதங்கள், காது முதலான பத்து புலன்கள், ஒலி முதலான ஐந்து நுகர்பொருட்கள் ஆக இருபத்துமூன்று தத்துவங்கள்.

இரண்டாவது மனிதனிடமுள்ள குணங்கள். சாத்வீகனாகவும், ராஜஸனாகவும், தாமஸனாகவும் தங்களை வெளிப்படுத்திக் கொள்ளும் குண இயல்புகள், அதாவது நல்லவனாகவும், கெட்டவனாகவும் இவ்வுலகில் இயங்கவைக்கும் குணங்கள்.

இதில் இவ்விரு வழிகளிலும் இவ்வுலகில் பற்றோடு செயல்படும்போது ஏற்படும் மாற்றங்களும் செயல்களுமே கர்மங்களின் பிரிவு எனப்படும். இவையெல்லாம் பிரகிருதியின் விளைவுகளே. இவை தோன்றி மறைபவை, மாறும் தன்மையுடையவை, மாயாமயமானவை, இல்லாதவை இருப்பதைப் போல் தோன்றும் கனவு போன்றவை இந்தக் குணப்பிரிவு, கர்மப் பிரிவு இரண்டிற்கும் அப்பாற்பட்டது. ஆத்மா! ஆத்மாவுக்கு இந்தப் பிரிவுகளுடன் எந்தத் தொடர்பும் இல்லை. ஆத்மா குற்றமற்றது, உருவமற்றது, விகாரமற்றது. நித்தியமானது, சுதந்திரமானது, விடுபட்டிருப்பது, அறிவே உருவானது, இதை அறிந்து கொண்ட ஞானி எதிலுமே பற்று வைப்பதில்லை. ஞானியானவன் குணப்பிரிவு, கர்மப்பிரிவு இரண்டையும் உணர்ந்து கொண்டதால் உலகில் எல்லாமே இயற்கையாகவே நடக்கின்றன என்பதை உணர்ந்து பற்றில்லாமல் வாழ்கின்றான்.

ஒரு நாட்டின் ஆட்சியில் பிரச்சினைகள் தோன்றிய நேரம் மந்திரிகளால் ஆலோசனை கூறி தீர்மானங்கள் எடுக்க முடியாமல் தவித்த நேரத்தில் அரசனிடம் மந்திரி ஒருவர் கூறினார். ''சகலமும் அறிந்த ஞானி ஒருவர் காட்டில் வாழ்கின்றார். அவரிடம் சென்று ஆலோசனை கேட்டால் நம் பிரச்சினைகளுக்கு நல்ல முடிவு கிடைக்கும்.''

இதைக் கேட்ட அரசன் காட்டிற்குச் சென்று ஞானியிடம் ஆலோசனைக் கேட்டான். அவரும் அரசனுக்கு திருப்தி அளிக்கக்கூடிய நல்ல ஆலோசனைகளைக் கூறினார். அரசன் மகிழ்ச்சியடைந்தான். இவரை தனது அரச சபையில் நிரந்தரமாக வைத்துக் கொண்டால் தனது அரசியல் சிறப்பாக இருக்கும் என்று எண்ணிய அரசன் ஞானியை தன்னுடன் மாளிகைக்கு வரும்படியும், அவருக்கு வேண்டிய எல்லா வசதிகளும் செய்து தருவதாகவும் கூறினான். ஆனால்

ஞானியோ அரச சபைக்கு செல்வதை உறுதியாக மறுத்து விட்டார். கோபங் கொண்ட அரசன் வாளை உருவி ''உன் தலையை வெட்டி வீழ்த்தி விடுவேன். நான் ஒரு நாட்டின் அரசன். நான் சொல்வதை நீ கேட்க வேண்டும்'' என்றான்.

உடனே ஞானி சிரித்து விட்டார்.

அரசனுக்கு அதிர்ச்சியாக இருந்தது.

''நீ இவ்வளவு நேரமாக பேசியதில் இப்போது பேசியது முட்டாள்தனமானது. என்னை எவரும் எப்போதும் எதுவுமே செய்துவிட முடியாது'' என்றார்.

இவர் இப்படி கூறியதற்குக் காரணம் ஞானி ஆன்மாவை மட்டுமே நம்பினார். தன் உடலை அவர் ஒரு பொருட்டாகவே கருதவில்லை. தன் தலையை துண்டித்தாலும் தனது உடலை என்ன செய்தாலும் ஆன்மாவை யாராலும் எதுவுமே செய்துவிட முடியாது என்பதை அறிவார் அவர்.

ஞானிக்கு உலக இயக்கங்களில் பற்றில்லை. தன் உடலிலும் பற்றில்லை. குணப்பிரிவுக்கும் கர்மப் பிரிவுக்கும் அப்பாற்பட்டவன் ஞானி. ஆன்மா ஒன்றே ஞானியின் நம்பிக்கை!

# ஓம் - 29

*ப்ரக்ருதேர்குண ஸம்மூடா: ஸ்ஸஜ்ஜந்தே குணகர்மஸு*
*தானக்ருத்ஸின விதோ மந்தான் க்ருத்ஸ்னவின்ன*
*விசாலயேத்*

*பிரகிருதி குணங்களில் ஆசை ஏற்பட்டு தொழில்களை விரும்பிச் செய்கின்ற மந்தப் புத்தியுடையோரை அறிவுள்ளவர்கள். கலங்கவைத்துவிடக் கூடாது.*

''கற்றுத் தெளிந்தவர்கள்
கலங்கிட செய்தலாகாதே!
குணங்களின் தொழில்களில்
பற்று வைத்து!
பிரகிருதி குணங்களில்
மோகம் கொண்டு!
மந்தப்புத்தி கொண்டு;
வாழ்வோரையே!''

சுவாமிநாதன் ஏழைக் குடும்பத்தில் பிறந்தவன். நல்ல பழக்க வழக்கங்களும், அதிக படிப்பறிவு இல்லாதவனாகவும் இருந்தான். சிறந்த உழைப்பாளி, சமுதாயத்தில் எந்தப் பிரச்சினையிலும் சிக்காத நல்லவன் என்று சுற்றத்தாரின் மனதில் இடம்பிடித்திருந்தான். ஆகவே நல்ல குடும்பத்தில் அழகான பெண்ணைத் திருமணம் செய்யும் வாய்ப்பைப் பெற்றான். இரண்டு ஆண் குழந்தைகளுக்கும் மூன்று பெண் குழந்தைகளுக்கும் தந்தையானான்.

குழந்தைகளை நன்றாகப் படிக்க வைத்து உயர்ந்த பதவிகளில் அமர்த்த வேண்டும் என்பது இவனுடைய

விருப்பமாக இருந்தது. தன்னைப் போல் வயல் நிலங்களிலும் காடு மேடுகளிலும் வேலை செய்து சிரமமான வாழ்க்கையை தன் பிள்ளைகளும் அனுபவிக்கக்கூடாது என்பதில் கவனமாக இருந்தான். ஆனால் அவனது உழைப்பு குடும்பச் செலவுக்கும் குழந்தைகளின் படிப்புக்கும் போதவில்லை. ஆகவே தனது கிராமத்தை விட்டு வெளி ஊர்களுக்குச் சென்று உழைத்தான். உழைப்பு நேரத்தையும் அதிகப்படுத்திக் கொண்டான். குழந்தைகளைப் பற்றிய எதிர்காலத் திட்டங்கள் அவனுக்கு உற்சாகத்தைக் கொடுத்தன.

இந்தச் சூழ்நிலையில் அவன் நண்பன் மனவேதனைப் படும் செய்தியொன்றைக் கூறினான். இவன் வெளி ஊரில் வேலைக்காகச் செல்லும் நேரத்தில் இவன் மனைவி மற்றுமொரு வாலிபனோடு தொடர்பு வைத்துள்ளாள் என்பதும், இதைப்பற்றி ஊர் மக்கள் பொது இடங்களில் பேசிக் கொள்வதாகவும் நண்பன் கூறினான்.

அதிர்ந்துபோனான் சுவாமிநாதன். இவன் உள்ளத்தில் அன்பின் சக்தியாக வேர்விட்டு வியாபித்து விட்டவள் அவள். அவள் அசைந்தால் அவன் உள்ளம் ஆட்டம் கண்டு விடும். சுவாமிநாதனால் நேரடியாக இதைப்பற்றி மனைவியிடம் கேட்க முடியவில்லை. அவன் மனம் அதற்கு இடம் கொடுக்கவில்லை. ஆனால் மனைவியின் செயற்பாடுகளை அவ்வப்போது கவனிக்கத் தொடங்கினான். சில சம்பவங்கள் சந்தேகப்படும் படியாகவே இருந்தன. மனைவியை நம்பவும் முடியாமல் நம்பாமல் இருக்கவும் முடியாமல் தவித்தான். வேதனை உள்ளத்தைப் பிழிந்தெடுத்தது. குழந்தைகளின் எதிர்காலம் பாதித்து விடுமோ என்று பயந்தான்.

தனது மன அமைதிக்காக கோவிலுக்குச் சென்று வந்தான். அப்போதுதான் துறவி ஒருவரைக் கண்டான். அந்தத் துறவி கடவுள்போல் அவனுக்குத் தோன்றினார். தனது மன வேதனைகளை எல்லாம் அவரிடம் கொட்டித் தீர்த்தான்.

உலகம் ஒரு மாயை, உறவுகள் நிரந்தரமானவையல்ல, உலக பந்தங்களில் இருந்து விடுபட்டாலன்றி மனதுக்கு விடுதலை கிடைப்பதில்லை. துறவறமே அமைதியைக் கொடுக்கக் கூடியது என்று துறவறத்தைப் பற்றி போதித்தார். அவன் மனைவி, குழந்தைகள், தொழில் எல்லாவற்றையும் விட்டு விட்டு காவி தரித்து தனக்கு துறவைப் பற்றி போதித்த துறவியுடனேயே ஊர் ஊராகச் சென்று பல ஸ்தலங்களையும் வழிபட்டான். ஆனாலும் அவனுக்கு மனஅமைதி கிடைக்க வில்லை. பார்வைக்கு துறவியாக இருந்தானே தவிர, உள்ளத்தின் ஒரு மூலையில் குடும்பப்பாசம் உறங்கிக் கொண்டுதான் இருந்தது. சிவ தலங்களுக்குச் செல்லும் வழியில் பல வருடங்களுக்குப் பிறகு சொந்த ஊருக்கு வந்தான். அப்போது தன் மனைவியையும் குழந்தைகளையும் பற்றி அறிந்து கொள்ள வேண்டுமென்று தோன்றியது.

அவன் கிராமத்து மக்களிடம் குடும்பத்தைப் பற்றி விசாரித்தான். ஆண் குழந்தைகள் இரண்டு பேரும் திருடர்களாக மாறிவிட்டார்கள். பெண் குழந்தைகள் எங்கு சென்றார்கள் என்றே கிராமத்து மக்களால் உறுதியாகக் கூற முடியவில்லை. மனைவி தெருவில் பிச்சையெடுத்துக் கொண்டிருந்தாள். இவற்றை அறிந்ததும் வேதனைப்பட்டான்.

இதைவிட ஒரு அதிர்ச்சியும் அவனுக்குக் காத்திருந்தது. அதுதான் அவன் மனைவியைப் பற்றிய மற்றொரு செய்தி.

தன் மனைவியை விட்டுப் பிரியும் முன் மனைவியைப் பற்றி எப்படியெல்லாம் கேள்விப்பட்டானோ அவன் பிரிவதற்கு எது காரணமாக இருந்ததோ அது உண்மையல்ல, அவை வதந்திகளே என்பதை இப்போது பலர் கூறினர். அவன் மனைவி புனிதமானவள் என்ற உண்மையை காலம் கடந்தே புரிந்து கொண்டான்.

வாழ்க்கையில் வெற்றி தோல்விகள் வந்துகொண்டே இருக்கும். உலக வாழ்க்கை இப்படிப்பட்டதுதான், இதை யாராலும் மாற்ற முடியாது. உலகம் முழுவதிலும் நல்லது மட்டுமே எப்போதும் நடக்காது. வெற்றி, தோல்வி, உயர்வு, தாழ்வு, நன்மை, தீமை இவற்றையெல்லாம் உள்ளடக்கியது தான் உலகம். எல்லாப் பிரச்சினைகளுக்கு மத்தியிலும் நாம் மகிழ்ச்சியாக வாழ முடியும். இது எப்படி சாத்தியம் என்பதை ஞானிகள் உலக மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும். அதுவும் படிப்படியாக விளக்க வேண்டும்.

துறவறத்தைப் போதிக்கும்போது துறவறத்தைத் தொடர்வதற்கு பக்குவப்பட்டவர்களையே தேர்ந்து எடுக்க வேண்டும். துறவறத்தைப் பற்றிய அடிப்படை ஞானம் இருக்க வேண்டும். இல்வாழ்க்கையில் ஈடுபட்டு உலக இன்பங்களில் மூழ்கி இருப்பவர்களுக்கு கர்மயோகத்தையும் ஸ்வதர்மத்தையும் படிப்படியாக போதிக்க வேண்டும். குடும்ப வாழ்க்கையில் உள்ளவர்களுக்கு துறவிகள் துறவறத்தை போதிக்க முயற்சி செய்து அவர்கள் மத்தியில் குழப்பத்தை உண்டு பண்ணக் கூடாது.

# ஓம் - 30

*மயி ஸர்வாணி கர்மாணி ஸமன்யஸ்யாத்யாத்ம சேதஸா*
*நிராசீர் நிர்மமோ பூத்வா யுத்யஸ்வ விகதஜ்வர:*

*பகுத்தறிவினால் சிந்தித்து விவேகத்துடன் எல்லாச் செயல்களையும் எனக்கு அர்ப்பணித்து, விருப்பு, ஆணவம், வருத்தம் ஏதும் கொள்ளாமல் உன் கடமையான போர் புரிவதைத் தொடங்கு.*

''எல்லாக் கர்மமும்
எனக்கே அர்ப்பணித்து!
சைதன்யத்தில்
சித்தத்தை வைத்து;
மமகாரமும் ஆசையும்
அகற்றி விட்டு;
மனக் கொதிப்பின்றியே
மன்னா! போர்புரிவாய் நீ!''

'எல்லாம் இறைவன் மயம்' என்று ஒரு வாக்கியம் உண்டு. நமது உள்ளம், புலன்கள், நம்மால் செய்யப்படும் கர்மங்கள் மற்றும் உலகில் உள்ள பொருட்கள், மலை, கடல், மரம், செடி, கொடி, சந்திர - சூரியன் என்று எல்லாமே இறைவன் மயம். இறைவனால்தான் எல்லாமே இயங்கிக் கொண்டிருக்கின்றன. நமக்கு எல்லாவித சக்தியையும் கொடுத்தவர் இறைவன். நம் மூலமாக கர்மங்களைச் செய்விப்பவரும் இறைவன். இறைவன் இன்றி இங்கு எதுவுமே நடப்பதில்லை. 'அவனின்றி ஒரு அணுவும் அசையாது' என்பதை நாம் உணர வேண்டும்.

பகவான்தான் எல்லாவிதமான சக்திகளையும் அளித்து நம் மூலம் அவர் விருப்பப்படி, நம் தகுதிக்கேற்றபடி எல்லா கர்மங்களையும் ஆற்றச் செய்கின்றார். நாம் அவரின் கைப்பாவை மட்டுமே என்று உணர வேண்டும். ஆகவே கர்மங்களிலோ அவற்றின் பயன்களிலோ எந்தவிதமான மனத் தொடர்பும் வைத்துக் கொள்ளக்கூடாது. ஆசையையும் மமகாரத்தையும் நீக்கிவிட வேண்டும். வேண்டியவர்களுக்குச் செய்வதும் வேண்டாதவர்களை ஒதுக்கி வைப்பதும் தடுக்கப்படும். எல்லோரையும் சமமாக நோக்கக்கூடிய மனநிலை உருவாகும். அதன் பிறகு நமது கடமை என்னவென்று புரியும். நமது ஆசைகளும் மமகாரமும் இல்லாமல் போகும்போது, ஆவேசம் இல்லாமல் போய் விடுகிறது. இப்படிப்பட்ட நிலையில் நாம் செயல்படும்போது நமது செயல்கள் மற்றவர்களுக்கு பாதிப்போ, நன்மையோ எது நடந்தாலும் அது அவர்கள் விதியென்று விட்டுவிட வேண்டும். இந்நிலையில் ஏற்படும் எல்லா நன்மை தீமைகளுக்கும் இறைவனே பொறுப்பு என்று அவனிடம் விட்டுவிட்டு நாம் அமைதியாக இருக்க வேண்டும்.

## ஓம் - 31

*யே மே மதமிதம் நித்யமனு திஷ்டயந்தி மாநவா:*
*ச்ரத்தாவந்தோ நஸூயந்தோ முச்யந்தே தேபி கர்மபிஹி*

*எந்த மனிதர்கள் பொறாமைப்படாது மிக ஆர்வத்தோடு எனது கோட்பாட்டை பின்பற்றுகின்றார்களோ அவர்கள் கர்மங்களில் இருந்து விடுபடுகின்றனர்.*

''எனது கோட்பாட்டை
எம் மனிதர் சிரத்தையுடன்
பின்பற்றுகின்றாரோ;
பொறாமை விட்டொழித்து!
வினையினின்றும் இவர்கள்கூட
விடுதலை பெறுவாரே!''

கர்மங்களிலும் அவற்றின் பயன்களிலும் மனத்தொடர்பு கொள்ளாமல் ஆசைகளையும், மமகாரத்தையும் அகற்றி விட்டு, நமது கர்மங்களில் ஏற்படும் நன்மைத் தீமைகள் எல்லாமே இறைவனால் ஏற்பட்டவை என்று எல்லாவற்றையும் இறைவனிடம் விட்டுவிட்டு மனதை அமைதியாக்கி இறைவன் மேல் குற்றம் தேடாமல், இறைவன் மேல் முழு நம்பிக்கையும் பக்தியும் கொண்டு உற்சாகத்துடன் செயல்பட்டால் இறைவனை அடைய முடியும்.

பிராமணர்களுக்கு மட்டுமோ, அல்லது சாஸ்திரங்கள் படித்த ஞானிகளுக்கு மட்டுமோ, அல்லது தியானம் செய்து சாதனைகள் புரிந்த யோகிகளுக்கு மட்டுமோ இறைவன் அருள் கிடைக்கும் என்பதில்லை.

மனிதர்களை உயர்ந்த ஜாதி, தாழ்ந்த ஜாதி என்று பிரித்து தாழ்ந்தவர்களை கோவிலுக்குள் விடக்கூடாது என்று தடை விதிப்பதும் சுயநல நோக்குடைய குறுகிய நோக்குடையவர்களால் கொண்டுவரப்பட்ட அடிமைத்தனமான விதிமுறைகள்தாம்.

உலகை நல்ல முறையில் வழி நடத்த தகுதியின் அடிப்படையில் தொழில்களைப் பகிர்ந்து செயல்பட்டு எல்லோரும் மகிழ்ச்சியாக வாழ்வதற்காகத்தான் ஆதிகாலத்தில் ஞானிகளால் திட்டங்கள் வகுத்துள்ளனரே தவிர தொழில் ரீதியில் ஜாதிகளை வைத்துக்கொண்டு ஒரு பிரிவினரை மற்றொரு பிரிவினா் அடிமைப்படுத்துவதற்காக அல்ல! இறைவனை வழிபடுவதற்கு எல்லா மனிதர்களுக்கும் உரிமையுண்டு. பக்தியும் கடவுளிடம் உறுதியான நம்பிக்கையும் இறைவனை அடையவேண்டுமென்ற முயற்சியும் இருக்குமானால் அவன் யாராக இருந்தாலும் இறைவனை அடைந்தே தீருவான். அவனுக்கு நடக்க வேண்டிய எல்லா நன்மைகளும் நடந்தே தீரும். இறைவன் முன் எல்லா உயிர்களும் சமம். இங்கு உயர்வு, தாழ்வு என்பதற்கே இடமில்லை. பக்தி, நம்பிக்கை, முயற்சி இவையே முக்கியமானவை.

## ஓம் - 32

*யே த்வேத தப்யஸூயந்தோ நானுதிஷ்டந்திமே மதம்*
*ஸர்வஞான விமூடான் ஸ்தானவித்தி நஷ்டா நசேதஸ:*
*எனது கொள்கைகளை இகழ்ந்து பின்பற்றாமல் விடுபவர்கள் எந்தவித ஞானமும், எந்தவித விவேகமும் இல்லாத மூடர்களாக கெட்டழிந்து போவார்கள் என்பதை அறிந்து கொள்வாய் நீ!*

''இகழ்ந்து பின்பற்றாதவர்
எனது கொள்கையை!
எந்தவித ஞானமும்;
எந்தவித விவேகமும்;
இல்லாத மூடர்கள்;
இவர்களேயென்றும்;
கெட்டழிந்து போனவர்
என்றறிந்து கொள்வாய் நீ!''

குழந்தையைப் பார்த்து தாய் 'விளக்கில் கை வைக்காதே, சுடும்' என்று கூறுவது அந்தச் சுடரின் தன்மையைப் பற்றி முற்றும் முழுவதுமாகப் பெற்றுள்ள அறிவினால்தான். தாய் தன் குழந்தைக்கு எப்போதும் கெடுதல் நினைக்க மாட்டாள். தனக்கு ஒரு துன்பம் நேர்ந்தாலும் தன் குழந்தைக்கு நேர்ந்துவிடக் கூடாது என்பதில் மிகவும் கவனமாக இருப்பாள். தாய் சொல்லைக் கேட்காமல் குழந்தை விளக்கின் சுடரில் கை வைக்கும்போது சூடுபட்டு நாள் முழுவதும் அழுதுகொண்டே இருக்கும். தாய் தந்தையின் சொற்படி நடக்காத பிள்ளைகள் காலப்போக்கில்

வேதனையான சம்பவங்களுக்கு முகம் கொடுக்க வேண்டி வருகிறது. பெற்றோர் எப்பொழுதும் தங்களின் வாழ்நாட்களில் பெற்ற அனுபவங்களைக் கொண்டு நல்ல வழிமுறைகளைத் தேர்ந்தெடுத்து குழந்தைகளை அவ்வழியில் வாழவைக்க விரும்புகின்றனர். இவ்வழிமுறைகளை உதாசீனப்படுத்தும் குழந்தைகள் வளர்ச்சியடையும்போது வேதனைகளை அனுபவிக்கின்றனர்.

இதேபோல் உலக வாழ்க்கையில் நாம் இன்பமாக வாழ்வதற்கு இறைவனால் தெளிவான வழிமுறைகள் அருளப்பட்டுள்ளன. இந்த வழிமுறைகளை மனித அறிவுக்கும் அப்பாற்பட்ட ஞானத்தைப் பெற்ற முனிவர்களும் துறவிகளும் இதிகாசங்களாகவும், புராணங்களாகவும் மக்களுக்கு தெளிவு பட எழுதி வைத்துள்ளனர். இவை குற்றம் கண்டுபிடிக்க முடியாத புனிதமான, தெளிவுடைய விளக்கங்களாகும். இவற்றைப் படித்து தெளிவடைந்து வாழ்ந்தால் வாழ்க்கை இன்பமானதாக இருக்கும்.

தற்காலத்தில் தங்களை படித்தவர்கள், அறிவாளிகள், சமுதாயத்தை வழிநடத்தத் தகுதியுடையவர்கள் என்றெல்லாம் அடையாளம் காட்டிக்கொண்டு மனிதர்களின் வாழ்க்கை முறைகளை புதிய கோணத்தில் திசை திருப்பிவிட பலர் முயற்சிகள் செய்கின்றனர். இவர்களின் புதிய வாழ்க்கை முறைகளைப் பின்பற்றும் மக்கள் தூரநோக்கு இல்லாமல் சந்தர்ப்பவாதிகளாக மாறி தங்களின் வாழ்க்கையையும் தங்களது எதிர்கால சந்ததியினரின் வாழ்க்கையையும் மிகவும் கீழ்த்தரமான நிலைக்கு இட்டுச் செல்கின்றனர்.

நாம் காலாகாலமாகப் பின்பற்றி வரும் இறைவனைச் சார்ந்த வாழ்க்கை முறை பக்தி, மனஅமைதி, பொதுநலம், விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை, அகிம்சை, பொறுமை,

சுயநலமின்மை என்று உயர்ந்த கோட்பாடுகளைக் கொண்டதாக இருக்கின்றது. ஸ்வதர்மத்தின்படி கடமைகளைச் செய்யாமல் தான்தோன்றித்தனமாக செயல்படுவது முழுமையான ஞானத்தில் அறிவு மயக்கம் உள்ளவர்களே! இப்படிப்பட்டவர்களின் வாழ்க்கை சீரழிந்து விடும். இறைவன் மேல் நம்பிக்கை இல்லாமல் வாழ்பவர்கள் உலக சுகங்களை புரிந்து கொள்ளாமல் தவறான முறையில் வாழ்பவர்களே! இவர்கள் வாழ்க்கை வீழ்ச்சியடைந்து விடும்.

## ஓம் - 33

*ஸத்ருசம் சேஷ்டதே ஸ்வஸ்யா: ப்ரக்ருதேர் ஞானவானபி*
*ப்ரக்ருதிம் யாந்தி பூதானி நிக்ரஹ: கிம் கரிஷ்யதி*

*உலக இயல்புக்கு ஏற்றவாறே எல்லோரும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். ஞானிகளும் தங்கள் தங்கள் இயல்புக்கு ஏற்றவாறே ஆழ்ந்து செல்கின்றனர். எவர் எந்த தடைச் செயல் புரியினும் தடையானது எதையும் செய்துவிட முடியாது.*

''இயல்புக்கு ஏற்றாற்போல்
எல்லோரும் வாழ்வதைப்போல்!
அவன் இயல்புக்கு ஏற்றாற்போல்
எங்கும் ஞானி வாழ்கின்றான்!
எவர் எதை தடை செய்யினும்
எதை செய்யும் தடையிங்கு!''

இவ்வுலகில் எல்லாப் பாதுகாப்போடும் செல்வங்களோடும் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் திடீரென்று கொலை செய்யப்பட்டு விடுகின்றனர். அதிஉயர்ந்த பாதுகாப்பிருந்தும் அவர்களைப் பாதுகாக்க முடிவதில்லை. சிலர் பரம ஏழையாக இருப்பார்கள். திடீரென்று லாட்டரி குலுக்கலில் கோடீஸ்வரனாகி விடுகின்றனர். ஒரு ஏழையின் மகன் நாட்டின் தலைவனாகி விடுகின்றான். எல்லா வசதிகளும் கொண்ட ஒருவனின் மகன் முட்டாளாகவும் சமுதாயத்திற்கு உதவாதவனாகவும் ஆகிவிடுகின்றான். இதுதான் வினைப்பயன்.

மனிதனின் முற்பிறவியில் செய்த வினைகள் பயனாக ஏற்படும் மனப்பதிவுதான் இவ்வுலக வாழ்க்கை. இதை எதிர்த்து

மனிதனால் வெற்றிபெற முடியாது. இவ்வியக்கம் உலகில் நடந்துகொண்டுதான் இருக்கும். ஆகவே இவ்வுலகில் வாழ்ந்துகொண்டே நமது கடமைகளை ஆற்றிக்கொண்டே கர்ம பந்தத்திலிருந்து விடுதலை பெற வேண்டும். கர்மம் செய்யாமல் இருப்பதால் உலக பந்தங்களில் இருந்து விடுதலை கிடைப்பதில்லை.

படிக்கும் காலத்தில் புத்தகங்களை மிகவும் கவனமாக பாதுகாக்கின்றோம். ஒவ்வொரு வகுப்பாக முன்னேறிச் செல்லும்போது பழைய புத்தகங்களை ஒதுக்கி விடுகின்றோம்.

சிறுகதைகள் படிக்கும் நாம், நாவல், துப்பறியும் நாவல், கவர்ச்சியான மனதை மயக்கும் புத்தகங்கள், கட்டுரைகள் என்று படித்து முடிவில் ஞானத்தைப் பற்றிய ஆன்மீகப் புத்தகங்களைப் படிக்கின்றோம். இவற்றைப் படிக்கும்போது முன்னால் படித்தவை சாதாரண ஒன்றாகவே தோன்றும்.

குழந்தையாக இருக்கும்போது பால் குடித்து வளரும் நாம் வயது கூடும்போது பழம், சோறு, மரக்கறி, மாமிசம், மது என்று உணவுகளை மாற்றிக் கொள்கின்றோம். ஒருவன் மாமிசமும், சோறும், மதுவும் உண்ணும் நிலையில் இருக்கும் போது பால், பழத்தைக் கொடுத்தால் அது அவனால் ருசி கண்டு ஒதுக்கப்படும் பொருளாகத்தான் தெரியும். அதை குழந்தைக்குக் கொடு என்று கூறுவான்.

ஒரு வாலிபனைப் பார்த்தால் வாழ வேண்டும், உலகில் எல்லா இன்பங்களையும் அனுபவிக்க வேண்டும் என்ற துடிப்போடு இருப்பான். ஒரு வயதானவரைப் பார்த்து 'அழகாக உடுத்தலாமே, ஏன் இந்த உடையை உடுத்துகின்றீர்கள்?' என்று கேட்டால், 'வாழ்க்கையில் நான் உடுத்தாத உடையா? நான் அனுபவிக்காத வாழ்க்கையா!' என்பார். பழங்களை வேண்டி அவரிடம் கொடுத்தால் அவர் உண்ணாமல் பேரப் பிள்ளைகளுக்கு கொண்டு போய்க் கொடுப்பார். காரணம்

இவர் வாழ்க்கையில் எத்தனையோ முறைகள் இந்தப் பழங்களை உண்டவர். அவற்றின் சுவையைப் பற்றி முழுமையாக அறிந்தவர். அதில் ஆசை அவரிடம் இல்லை. ஆனால் பேரப் பிள்ளைகள் இந்தப் பழங்களைக் கண்டால் ஆசையோடு உண்பார்கள். அவரிடம் கேட்டால் அந்தக் காலத்தில் நான் உண்ணாத பழங்களா! என்பார். தனது தகுதிக்கும், திறமைக்கும், அறிவுக்கும் ஏற்றாற்போல் இவ்வுலகில் வாழ்ந்து முதுமையைப் பெற்றவர். இப்போது இவ்வுலகைப் புரிந்து கொண்ட நிலையில் இருப்பவர். தான் வாழ்ந்து கடந்து வந்த வாழ்க்கையைத்தான் மற்றவர்கள் இப்போது வாழ்ந்து கொண்டு இருக்கின்றனர் என்பதை உணர்ந்தவர். குழந்தைப் பருவத்தில் இருந்து வயோதிகப் பருவம் வரை பாசம், அன்பு, காதல், உறவு, இன்ப, துன்பம், உயர்வு, தாழ்வு, பணம், ஏழ்மை, என்று எல்லாவற்றையுமே அனுபவபூர்வமாக உணர்ந்து உலகம் இவ்வளவுதான் என்று உணர்ந்து முழுமனிதனாக இருப்பவர். இவர் தன் முன் வினைப்படியும் ஸ்வதர்மத்தின்படியும் வாழ்ந்து தன்னை உயர்ந்த நிலைக்கு ஆக்கிக் கொண்டவர். உலக இயல்புகளோடு சேர்ந்தே வாழ்ந்து உயர்வடைந்தவர். மற்றவர்களை வாழ்த்தக்கூடிய தகுதிகளைப் பெற்ற ஞானி இவர்.

இப்படி உலக இயல்புகளோடு சேர்த்து ஸ்வதர்மத்தின்படி வாழ்ந்து, தனக்கு விருப்பமான ஒவ்வொன்றையும் அனுபவித்து, அந்த அனுபவத்தில் கிடைக்கும் அறிவுபூர்வமான தெளிவைப் பெற்று, ஆசைகளை மனதில் இருந்து ஒவ்வொன்றாக அகற்றி, அமைதியான நிலையை அடைந்து ஞானத்தைப் பெறுவதுதான் நாம் இவ்வுலகில் வாழ்ந்ததின் பயனாக இருக்கும். இதுதான் கர்ம யோகத்தின் வழியில் உலக பந்தங்களில் இருந்து விடுதலை பெறுவது.

உலக இயக்கங்களில் இருந்து ஒதுங்கி இருப்பதால் உலக இயக்கங்களில் இருந்து விடுதலை அடைந்துவிட

முடியாது. ஒருவனின் வினைப்பயன் அதாவது முற்பிறவியில் செய்த வினைப்பயனான மனப்பதிவுகள்தாம் இவ்வுலக வாழ்க்கை என்பதால் உலக வாழ்க்கையைப் பார்த்து பயந்து செயல்படாமல் இருப்பது உலக பந்தங்களில் இருந்து விடுதலை பெற்றதாகி விடாது. இவர்கள் செயற்பாடுகளில் இருந்து ஒதுங்கியிருந்தாலும் மனம் உலக இயக்கத்தைப் பற்றி சிந்தித்து, மனம் நிம்மதியில்லாமல் புலம்பிக்கொண்டே இருப்பார்கள். மனம் உலக இயக்கத்தில் சம்பந்தப்படவே தூண்டும்.

ஞானிகள் பரிசுத்தமான உள்ளம் கொண்டவர்கள். அழுக்கு, தடுமாற்றம், திரை என்ற மூன்று மலங்களையும் மனதில் இருந்து அகற்றியவர்கள். பரமாத்மாவையே சிந்தனை செய்வதால் இவர்களின் உள்ளத்தில் அஹங்காரம், மமகாரம், விருப்பு, வெறுப்புகள், மகிழ்ச்சி, துயரம், டம்பம், கபடம், காமம், குரோதம், பேராசை, மோஹம் முதலிய விகாரங்கள் உண்டாவதில்லை. இப்படிப்பட்ட ஞானிகளிடம் உள்ளத்தில் ஸம பாவனை, ஸந்தோஷம், தயை, பொறுமை, ஆவலின்மை, அமைதி முதலிய நற்பண்புகள் தாமாகவே மலர்கின்றன. உலகத்திற்கு வழிகாட்டியாக அவருடைய மனம், புலன்கள், உடல் ஆகியவை சாஸ்திரங்களில் விதிக்கப்பட்ட கடமைகளை தாமே ஆற்றுகின்றன. இவர்களும் முன்வினைப் பயன்படியே இயற்கைக்குக் கட்டுப்பட்டு நடக்கின்றனர். இவர்களின் இந்தச் செயல்கள் உலகத்திற்கு வழிகாட்டவேயல்லாமல் இவர்களை இச்செயல்கள் பாதிப்பதில்லை. ஆகவே முன்வினைப்பயன்களை யாரும் தடை செய்துவிட முடியாது. இயற்கையாகவே கடலை நோக்கிச் செல்லும் நதிகளைப் போல் எல்லா உயிர் இனங்களும் தத்தம் வினைப் பயன் போலவே நடந்து கொள்கின்றன. ஆகவே மனிதர்கள் கடலை நோக்கிச் செல்லும் நதியை அணை கட்டி வேறு திசையில் திருப்புவதுபோல் மனிதன் தனது லட்சியத்தையும் தன் நடத்தைகளையும் மாற்றிக்கொண்டு விருப்பு வெறுப்புக்களைத் துறந்து ஸ்வதர்ம சாஸ்திரங்களின்படி வாழ்ந்து பரமாத்மாவை அடைய முயற்சி செய்ய வேண்டும்.

## ஓம் - 34

*இந்த்ரியஸ் யேந்த்ரியஸ் யார்த்தே ராகத்வேஷௌ*
*வ்யவஸ்திதௌ*
*த்யோர்ந வசமாகத் சேத்தௌ ஹ்யஸ்ய பரிபந்திநௌ*

*இந்திரியம் விருப்பு வெறுப்புக் கொண்டதாகவே இருக்கும் இவற்றிற்கு அடிமையாகி விட்டால் இவையே ஒருவனுக்கு எதிரியாகிவிடும்.*

''விருப்பு வெறுப்புக் கொண்டதுவே
எவ்விடமும் இந்திரீயம்!
அவையே சத்துருவாய்
அவனுக்கு அமைந்துவிடும்!
அவற்றிற்கென்றும் நீ
அடிமையாகலாகாதே!''

கண், காது போன்ற எல்லாப் புலன்களும், சொல் முதலிய செயற் புலன்கள் மனதோடு கூடிய எல்லாப் புலன்களுக்கும் எவ்வளவு போகப் பொருட்கள் உள்ளனவோ அவை எல்லா வற்றிலும் தனித்தனியாக விருப்பு வெறுப்புக்கள் மறைந்து இருக்கின்றன. நாம் ஒரு பொருளையோ, நிலத்தையோ பெற்றுக் கொள்வதற்கு முயற்சி செய்யும்போது அதை மற்றொருவர் பெற்று விடுகின்றார். என்ன செய்வது?

ஒரு பெண்ணை ஒருவன் காதலிக்கின்றான். ஆனால் மற்றொருவன் திருமணம் செய்து கொள்கின்றான். என்ன செய்வது? இப்படி பல சம்பவங்கள் நமது வாழ்க்கையில் சம்பவிக்கலாம். இதற்காக அழுது புலம்பியோ, மற்றவர்களை பழிவாங்கியோ, தற்கொலை செய்து கொள்ள முயல்வதாலோ

எதுவுமே நடந்துவிடப் போவதில்லை. முடிந்தது முடிந்து விட்டது அவ்வளவே!

ஒருவர் ஒரு நிகழ்ச்சியை விரும்பிப் பார்த்து மகிழ்வார். மற்றொருவர் அதே நிகழ்ச்சியை வெறுப்பார். ஒருவனை மற்றொருவன் நல்லவன் என்பான், அவனையே வேறொருவன் கெட்டவன் என்பான். ஒருவர் ஒரு பொருளை விருப்பத்துடன் வாங்கி வருவார். அதையே மற்றொருவர் ஏன் வாங்கினாய்? அழகாக இல்லையே என்பார்.

தாயிடம் பாசமாக இருக்கும் அதே மனிதன்தான் மனைவியிடம் கொடூரமாகவும் நடந்து கொள்கின்றான். உனக்காக என் உயிரையும் தியாகம் செய்வேன் என்று கூறும் காதலன்தான், காதலை எதிர்க்கும் உறவினரை கொலை செய்யும் கொடூர மனம் படைத்தவனாகவும் மாறுகின்றான். மென்மையான பனித் துளியையும், பூவின் இதழ்களையும், பூங்காற்றையும், இனிமையான இசையையும் ரசித்து காதலனுடன் கொஞ்சிக் குலாவும் காதலிதான் மனைவியானதும் கணவனிடம் கொடூரமாக நடந்து கொள்கின்றாள்.

இதற்கெல்லாம் காரணம் இவ்வுலகில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொன்றின் மீதும் இருக்கும் ஆசைதான். ஒவ்வொன்றையும் நாம் அறிந்து வைத்திருப்பதற்கேற்ப ஆசைகளையோ, வெறுப்பையோ ஒவ்வொன்றின் மீதும் ஏற்படுத்திக் கொண்டு வாழ்கின்றோம். நாம் வளர்த்துக் கொண்ட ஆசைகளும் வெறுப்புகளுமே நம்மை ஆட்டிப் படைக்கின்றன.

நாம் தினப் பத்திரிகைகள் படிக்கும்போது உலகில் நடக்கும் பல சம்பவங்களைப் பற்றிப் படிக்கின்றோம். அதில் விமானங்கள் வெடித்து சிதறியதும், பூகம்பம் ஏற்பட்டு பல பேர் மரணம் என்பதும், வெளிநாடுகளில் நடக்கும் களியாட்டங்கள் பற்றியும் படிக்கின்றோம். இவற்றைப்பற்றி சிலரிடம் விவாதிப்பதோடு முடிந்து விடுகிறது. மனதை ஆழமாகப் பாதிப்பதில்லை.

இதே சம்பவங்கள் நம் நாட்டிலோ நம்மைச் சுற்றியுள்ள இடங்களிலோ நடக்கும்போது மனது அதிகமாகவே பாதிக்கப் பட்டு விடுகின்றது. இதற்கு என்ன காரணம்? ஆசைதான் காரணம். நமது நாடு, நமது மக்கள், நமது உறவினர்கள் என்று சுயநலத்தோடு ஏற்பட்ட ஆசை மனதை அதிகமாகப் பாதித்து விடுகின்றது. நாம் ஒவ்வொன்றின் மீதும் வைத்திருக்கும் ஆசையின் அளவைப் பொறுத்து மனதில் பாதிப்புகள் கூடி குறைகின்றன.

ஒரு யானை ஒரு மரத்தை முட்டி மோதி வீழ்த்துவதைப் பார்த்து நாம் மற்றொரு மரத்தை முட்டி மோதி வீழ்த்த முயற்சி செய்து தோல்வியடைந்து வேதனைப்படக்கூடாது. யானையின் சக்திக்கும் நமது சக்திக்கும் உள்ள வித்தியாசத்தை நாம் உணர வேண்டும். நமது தகுதிக்கும், திறமைக்கும், அறிவுக்கும் ஏற்பதான் எதையும் செய்ய வேண்டும். அப்போதுதான் நமது வெற்றிகளும் உறுதியாக இருக்கும். இவ்வுலகில் ஏற்படும் இன்பத் துன்பங்கள் அனுபவரீதியாக உலகைப் பற்றிய தெளிவை நமக்கு ஏற்படுத்துகின்றன.

நாம் மற்றொன்றையும் சிந்திக்க வேண்டும். நமக்கு மட்டுமல்ல இன்பத்துன்பங்கள் ஏற்படுவது; உலகில் உள்ள அத்தனை உயிர்களுக்கும் ஏற்படுகின்றது. அப்படியானால் இதன் ரகசியம்தான் என்ன? அனுபவரீதியாக உலகில் வாழ்ந்து வாழ்க்கையின் ரகசியத்தைப் புரிந்துகொள்ள வேண்டும் என்பதே! வாழ்க்கையில் மகிழ்ச்சியாக வாழ்வதற்கு மிகவும் இலகுவான வழியுண்டு. இதில் எந்தவித மந்திர தந்திரங்களும் கிடையாது. நாம் ஸ்வதர்மத்திற்கு உட்பட்டு எல்லா முயற்சிகளையும் செய்து உலக வாழ்க்கையில் முன்னேறலாம். ஆனால் ஆசையென்ற ஒன்றை மனதில் இருந்து அப்புறப்படுத்த வேண்டும். ஆசைதான் நமது மகிழ்ச்சிக்கு எதிரி. விருப்பு வெறுப்பை உண்டாக்கும் ஆசையை அழித்துவிட்டால் மகிழ்ச்சியென்ற ஒன்று மட்டுமே நம்மிடம் இருக்கும்.

# ஓம் - 35

*ச்ரேயான் ஸ்வதர்மோ விகுண: பரதர்மாத் ஸ்வநுஷ்டிதாத்*
*ஸ்வதர்மே நிதனம் ச்ரேயஹ பரதர்மோ பயாவஹம்*

*மற்றவர்களால் பின்பற்றப்பட்ட நல்ல தர்மத்தைவிட தானே பின்பற்றும் தர்மம் குறையிருந்தாலும் மேலானதாகும். தன்னுடைய தர்ம வழியில் சென்று இறப்பதே மேலானது. பிறரின் வழியில் சென்றால் மனதில் பயமென்ற வேதனை உண்டாகும்.*

''நன்கே இயற்றிய
பிற பரதர்மம்!
நல்கிடும் நன்மைக்கும் மேலாகும்;
குணமேயில்லாத தன்தர்மம்!
தானே இயற்றிய தர்மத்தில்
இறப்பதுமிங்கு மேலாமே!
பிறரின் தர்மத்தின் வழிசென்றால்
பயமெனும் வேதனை தந்திடுமே!''

ஷத்ரியர்களுடைய ஸ்வதர்மம் யுத்தம் செய்வது, துஷ்டர்களைத் தண்டிப்பது. இதில் அஹிம்சை, அமைதி போன்ற பண்புகள் குறைவு. வைசிய தர்மம் வேளாண்மை செய்வது. இதில் ஹிம்சை முதலிய குறைகள் காணப்படுகின்றன. பிராமணருடைய தர்மத்தில் விசேஷமாக அஹிம்சை போன்ற நற்பண்புகள் அதிகம் உள்ளன. ஸந்யாச தர்மத்தில் நற்பண்புகள் அதிகமாகக் காணப்படுகின்றன.

யுத்த தந்திரங்கள் அறிந்து பயிற்சி பெற்றவர்கள்தாம் யுத்தம் செய்ய வேண்டும். அப்போதுதான் நாட்டைப் பாதுகாக்க முடியும். யுத்தம் செய்வது பாவம் என்று கருதி

யுத்தம் செய்ய தகுதியும் திறமைகளும் உடையவர்கள் பின்வாங்கி வேறு தொழில்கள் செய்தால் நாடு எதிரிக்கு அடிமையாகிவிடும். தனக்கு அடிப்படை அறிவே இல்லாத வேறு தொழில் தேடிச் செல்வதால் அதுவும் தோல்வியில் முடியும்.

விவசாயத்தில் தெளிவான அறிவுள்ளவன் விவசாயத் தைத்தான் செய்ய வேண்டும். நாட்டுக்கும் அவனுக்கும் அதுதான் நல்லது. விவசாயத்தைப் பற்றி அறிந்தவன் விவசாயம் செய்யும்போது அதிகமான அறுவடை செய்து அநேகரின் பசியைப் போக்க முடியும். அவனுக்கும் திருப்தியும் மகிழ்ச்சியும் கிடைக்கும். இவன் தனக்கு என்னவென்றே தெரியாத வியாபாரமோ வேறு தொழில்களோ செய்ய முயன்றால் அதைப்பற்றிய அறிவு இல்லாததால் தோல்விகளும் வேதனையும் அடைவான். எப்போதுமே நமக்கு அறிவும் திறமையும் ஆர்வமும் எதில் இருக்கின்றதோ அதைத்தான் செய்ய வேண்டும். நமக்கு திறமையும் அடிப்படை அறிவும் இல்லாத ஒன்றைச் செய்ய முயற்சி செய்யக்கூடாது. நமக்கு எதைப்பற்றிய அறிவு இருக்கின்றதோ அந்தத் தொழிலைச் செய்யும்போது வெற்றி உறுதியானதாக இருக்கும். இதில் குறைகள் இருந்தால்கூட மனது பாதிப்படையாது. தெளிவாகச் செயல்பட்ட மனஅமைதி கிடைக்கும்.

யுத்த வீரன் போர்க்களத்தில் கொலைகள் செய்யும்போது மனதில் விரக்தியும் வெறுப்பும் ஏற்படுவதில்லை. ஏனென்றால் நீதியையும் நியாயத்தையும் நிலைநிறுத்தவும் தனது நாட்டையும் நாட்டுமக்களையும் காப்பாற்றவுமே யுத்தம் செய்கின்றோம் என்ற தெளிவை அவன் பெற்றிருப்பான். அவன் யுத்தக் களத்தில் மரணமடைவதுகூட தனது தொழில் தர்மம் என்பதை உணர்ந்திருப்பான்.

விவசாயி விவசாயம் செய்யும்போது நிலத்தில் உள்ள பூச்சிப் புழுக்களை கொல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்படும்.

தன்னைத் தீண்ட வரும் விஷப்பூச்சிகளை கொல்ல வேண்டிய கட்டாயம் ஏற்படும். மரம், செடி, கொடிகளை வெட்டி வீழ்த்த வேண்டிய நிலை ஏற்படும். இதற்காக விவசாயி தன் தொழிலை விட்டு விலகிவிடக் கூடாது. அவனுடைய முழு அறிவும் திறமையும் விவசாயத்தில் மட்டுமே இருப்பதால் அவன் அதைச் செய்தேயாக வேண்டும்.

நமக்குத் தெரிந்த தொழிலில் ஏதோ குறைகள் இருப்பதால் அதை வேண்டாம் என்று முடிவு செய்து நமக்கு அடிப்படை அறிவே இல்லாத தொழிலை செய்யத் தொடங்கினால் மனதில் நிம்மதி இருக்காது. நாம் செய்வது சரியா! பிழையா! என்ற சந்தேகமும், வெற்றி பெறுமா, வெற்றி பெறாதா என்ற பயமும் எப்போதும் மனதைக் குழப்பி நிம்மதியைக் கெடுத்து விடும். மற்றவர்களின் தொழிலை நாம் செய்வதால் தொழில் ரீதியில் அந்தத் தொழிலை நம்பியிருப்பவர்கள் பாதிக்கப் படுவார்கள். அவர்கள் பாதிக்கப்படுவார்களே என்ற வேதனையும் நம் மனதைப் பாதிக்கும்.

நமக்கென்று இவ்வுலகில் கடமைகள் உள்ளன. அவற்றை நாம் செய்ய வேண்டும். கடவுள் பக்தி, உண்மை பேசுதல், பெற்றோருக்கு பணிவிடை செய்தல், மனம், புலன் கட்டுப்பாடு, பிரம்மச்சரியம், அஹிம்சை, திருடாமை, திருப்தி கொள்ளுதல், கருணை, தானம், பொறுமை, தூய்மை போன்ற ஸ்வதர்மத்தை நம் வாழ்க்கையில் பின்பற்ற வேண்டும். பொய், கபடம், திருட்டு, ஹிம்சை, ஏமாற்றுதல், விபசாரம் முதலிய தீயசெயல்கள் நம் தொழிலோடு சம்பந்தப்படக் கூடாது. இவற்றை அடியோடு விலக்கிக் கொள்ள வேண்டும்.

நமது அறிவு, திறமையின் அடிப்படையில் ஆர்வத்தோடு ஸ்வதர்மத்தின்படி வாழ்ந்தால் மகிழ்ச்சியோடு வாழலாம். அதிகப்பொருள், பணம் தேவையென்று நமது திறமைக்கும் அறிவுக்கும் அப்பாற்பட்ட ஒன்றைச் செய்ய முயலும்போது பயம், வேதனை, நிம்மதியற்ற வாழ்க்கை இவைதான் ஏற்படும்.

# ஓம் - 36

*அது கேன ப்ரயுக்தோயம் பாபம் சரதி பூருஷ:*
*அனிச்சன்னமி வார்ஷ்ணேய பலாதிவ நியோஜித:*

*விருஷ்ணி வம்சத்துதித்தவரே! அப்படியானால் விருப்பம் இல்லாதிருந்தாலும், பலாத்காரமாய் ஏவப்பட்டவனைப் போல் எதனால் தூண்டப்பட்டவனாக பாபத்தை செய்கின்றான்?*

''இச்சிக்காதிருந்தும் கூட
இப்புருஷன்
பாபம் செய்கின்றான்
பலவந்தமாய்!
ஏவப்பட்டவனாய்த்
தள்ளுண்டு;
விருஷ்ணி குலத்தோய்
எதனாலோ!''

மனிதர்கள் தனது அடிப்படை அறிவுக்கும், திறமைக்கும், அனுபவத்திற்கும், கற்றுத் தேர்ந்த அறிவுக்கும் ஏற்றாற்போல் வாழ்க்கையை அமைத்துக் கொண்டும், கடவுள் பக்தி, உண்மை பேசுதல், பெற்றோருக்கு பணிவிடை செய்தல், மனம், புலன் கட்டுப்பாடு, பிரம்மச்சரியம், அஹிம்சை, திருடாமை, திருப்திக் கொள்ளுதல், கருணை, தானம், பொறுமை, தூய்மை போன்ற வற்றைப் பின்பற்றி வாழ்வோரும் பாபம் செய்து விடுகின்றனரே இது ஏன்?

கோவில் பிராமணர்களே கோவில் பணத்தைக் கொள்ளை அடிப்பது, தர்மகர்த்தாக்கள் பொது சொத்தை கொள்ளை அடிப்பது, துறவிகள் பெண்களைக் கற்பழிப்பது, தன்

கணவனையே மனைவி கொலை செய்வது, பிள்ளைகளே பெற்றோர்களை துன்புறுத்துவது, அவர்களையே கொலையும் செய்வது இப்படிப்பட்ட செயல்கள் நடந்துகொண்டே இருக்கின்றன. இதைவிடவும் நாட்டைக் காக்கும் காவல்துறையே கொள்ளை, கொலைகளில் ஈடுபடுவது, அரசியல்வாதிகள் அரசாங்க சொத்தையே கொள்ளையடிப்பது இப்படிப்பட்ட பாபத்தை செய்தேயாக வேண்டுமென்ற நிலைக்கு இவர்கள் தள்ளப்படுவதன் காரணம்தான் என்ன? இவர்கள் நன்மை, தீமைகளை நன்குணர்ந்து ஸ்வதர்மத்தின்படி வாழ்ந்தபோதும் இப்படிப்பட்ட கொடூரமான செயல்களைச் செய்து விடுகின்றனரே, அது ஏன்?

# ஓம் - 37

*காம ஏஷ க்ரோத ஏஷ ரஜோகுண ஸமுத்பவ:*
*மஹாசனோ மஹாபாப்மா வித்யேன மிஹவைரிணம்*

*ரஜோ குணத்தில் இருந்து காமமும், குரோதமும் உண்டாகின்றன. இது பல பிரச்சினைகளை உண்டுபண்ணக் கூடியது. காமமும் குரோதமும் பெரும் பாவங்கள். இந்த இரண்டையும் பெரும் எதிரியாய் அறிக நீ!*

''ரஜோ குணத்துதித்த
காமமும் குரோதமுமே;
எதையுமே உண்ணவல்லதால்
இதுபெரும் பாபமே!
என்றும் எதிரியாய்
இதையே அறிக நீ!''

மனிதனுக்கு எதிரி ஆசைதான். இதை தெளிவாக நாம் அறிய வேண்டும்.

குழந்தை பிறந்தவுடன் தாய் அந்தக் குழந்தையைக் கொஞ்சும்போது அவளது மூத்த குழந்தை பிறந்த குழந்தையைத் தாக்க முயற்சி செய்யும். அல்லது தாய் கொஞ்சுவதைத் தடுக்க முயற்சி செய்யும். இதன் காரணம் தன் தாயின் அன்பு தனக்கு மட்டுமே சொந்தமாக வேண்டுமென்ற ஆசை!

தந்தை தனது சொத்துக்களை பிள்ளைகளுக்குப் பங்கு வைக்கும்போது யாருக்காவது சிறிது கூடுதலாகக் கொடுத்து விட்டால் பிரச்சினைகள் ஏற்பட்டு, சகோதரப் பாசமே சிதைந்து விடும். இதற்குக் காரணம் ஆசை!

தன் காதலி மற்ற வாலிபனைப் பார்த்து சிரித்தாலே போதும். காதலனுக்கும் காதலிக்கும் ஒரு பிரச்சினை வந்து

விடும். அவள் முழுவதுமாக எனக்கே சொந்தம் என்று நினைக்கும் காதலன் அவள் சிரிப்பைக்கூட மற்றவர்கள் ரசிப்பதை அனுமதிக்க மனம் இடம்தராத அளவு அவள் மேல் ஆசை!

பண ஆசையில் ஓடி ஓடி தொழில் செய்யும்போது பல பிரச்சினைகள்!

பண ஆசையில் வியாபாரத்தில் போட்டிகள் ஏற்படும் போது கொலைகள்; பல அழிவுகள்!

பதவி ஆசை ஏற்படும்போது பலவிதமான அழிவுகள்; பயங்கரமான விளைவுகள்.

மனிதனுக்கு எல்லாப் பிரச்சினைகளும் ஆசையால்தான் உண்டாகின்றன. ஆசையிலிருந்து கோபம், ரகளை, மூர்க்கக் குணம், சண்டை, இரத்தம் சிந்துதல், கற்பழிப்பு போன்ற விரும்பப்படாதவை உண்டாகின்றன. மனிதனின் விவேகம், புத்திக்கூர்மை, திறமைகள் எல்லாவற்றையுமே செயற்படாமல் தடுப்பது ஆசைதான்.

ஆசை வளர்ந்துவிட்டால் நிம்மதியில்லாமல் மனிதன் வாழ்கின்றான். ஆயிரம் ரூபாய்க்கு சம்பாதிப்பவன் பத்தாயிரம் சம்பாதிக்க வேண்டுமென்று விரும்புகின்றான். பத்தாயிரம் கிடைத்து விட்டால் லட்சம் வேண்டுமென்கின்றான். லட்சம் கிடைத்து விட்டால் கோடி வேண்டும். இப்படி எவ்வளவோ வசதியான வாழ்க்கை வந்தாலும் மனம் அமைதியில்லாமல் அலைந்துகொண்டே இருக்கும். மனிதன் தனக்கு விருப்பம் இல்லாமலே பாபச் செயல்களில் ஈடுபடக்கூடிய சூழ்நிலையை இந்த ஆசை உண்டாக்கிவிடும்.

சிறு குழந்தைகள் தொடக்கம் முதியோர் வரை, சிறு நிர்வாகம் தொடக்கம் அரசியல் வரை, நாடுகள் தொடக்கம் உலக அரசியல் வரை, சிறு சண்டைகள் தொடக்கம் உலகப்

போர் வரை, புராணங்கள், இதிகாசங்கள் தொடக்கம் தற்காலம் வரை எல்லாப் பிரச்சினைகளுக்கும் காரணமாக இருப்பது ஆசைதான். ஆகவே ஆசைதான் நம் பகைவன். ஆசை மிகவும் சக்தி வாய்ந்தது. இது நம்மை உலக இன்பங்களில் சிக்கவைத்து பாபச் செயல்களில் இயங்க வைக்கின்றது. ஆகவே ஆசை நம் பகைவன் என்பதை எப்போதும் மனதில் வைத்து செயற்பட வேண்டும்.

நாம் முன்பிறவிப்பயனை இவ்வுலகில் அனுபவிக்கின்றோம். ஆனால் ஆசைக்கும் முன்பிறவிப்பயனுக்கும் எந்தத் தொடர்பும் கிடையாது. முன்வினைப்பயனை இப்பிறவியில் அனுபவிக்க வேண்டியுள்ளதே தவிர அது பாபம் செய்யத் தூண்டுவதில்லை.

## ஓம் - 38

*தூமேனாவ்ரியதே வஹ்னிர்யதா தர்சோ மலேன ச*
*யதோல்பே நாவ்ருதோ கர்பஸ்ததா தேனே தமாவ்ருதம்*

*நெருப்பு புகையால் மூடப்பட்டிருப்பது போலவும், கண்ணாடி அழுக்கால் மூடப்பட்டிருப்பது போலவும் கருப்பையால் சிசு மூடப்பட்டிருப்பது போலவும் ஆசையெனும் மூடிக்குள் ஞானம் மூடப்பட்டுள்ளது.*

''புகையால் மூடிய
நெருப்பைப் போல்!
அழுக்கால் மூடிய
கண்ணாடி போல்!
கருப்பையால் மூடிய
சிசுவைப் போல்!
ஆசையெனும் மூடிக்குள்
ஞானமே யாம்!''

இலங்காபுரியை ஆட்சிசெய்த இராவணன் சிறந்த வீரன், சிவபக்தன். பல திறமைகளையும் கொண்டவன். ஆனால் சீதை மேல் கொண்ட ஆசை அவனின் அறிவை செயல்பட விடவில்லை. ஆகவேதான் நாட்டையும் உறவுகளையும் இழந்து தானும் உயிர்விட வேண்டி வந்தது.

பல திறமைகளும் படைத்து உயர் பதவியில் இருந்த இந்திரன் ஒரு முனிவரின் மனைவிமேல் ஆசை கொண்டதால் அந்த முனிவரின் சாபத்திற்கு உள்ளானான்.

எந்தளவு அதிகமான திறமையும் அறிவும் ஒரு மனிதனிடம் இருந்தாலும், ஆசையை வளர்த்துக் கொண்டால் அந்த

ஆசையானது அவனின் அறிவை வெளிவர விடாமல் தடுத்து நிற்கும். ஆசைதான் மூன்று மலங்களாக பரிணமிக்கின்றது.

அவை : மலம் - குற்றம்

விஷேபம் - தடுமாற்றம்

ஆவரணம் - திரை

மனிதன் ஆசையை வளர்த்துக் கொள்ளும்போது ஞானம் வெளிவர முடியாமல் தடுமாறுகின்றான். ஆசைகளை நிறைவேற்றிக் கொள்ள முயற்சி செய்யும்போது தவறான வழிகளில் செயல்பட வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. அப்போது அவனின் ஞானமும் சிந்தனையும் மாறி, மாறி அவனுக்குத் தெரிவதால் தடுமாற்றமும் சஞ்சலமும் ஏற்படுகின்றன. மனம் ஒரு முனைப்போடு செயல்பட முடியாமல் அறிவு பிரகாசிக்காமல் மழுங்கி விடுகிறது.

மனிதன் ஆசையை நிறைவேற்றிக் கொள்ள முயற்சி செய்யும்போது பாவங்களைச் செய்கின்றான். அவன் செய்யும் பாவங்கள் கண்ணாடி மேல் படியும் அழுக்கு போல் அவன் ஞானத்தை மூடிக் கொள்கின்றன. கர்ப்பத்தை எப்பொழுதும் தசைத் திரை மூடிக் கொண்டிருக்கின்றது. அதில் கருப் பொருளைச் சிறிதுகூடக் காணமுடிவதில்லை. அதுபோல் அவரணம் என்ற திரை அறிவை மூடிவிடுகிறது.

பாவச் செயல்களால் ஞானம் மறைக்கப்படுவதால் சுகமான வாழ்க்கை என்னவென்பதை உணர முடியாமல் போய் விடுகின்றது. ஆகவே தூக்கம், சோம்பல், செயல் ஊக்கமின்மை இவையே சுகமான வாழ்க்கை என்ற தோற்றம் ஏற்பட்டு விவேகமற்ற மனிதனாக ஆகிவிட வேண்டியதாகிறது.

## ஓம் - 39

*ஆவ்ருதம் ஞானமேதேன ஞானினோ நித்யவைரிணா*
*காமரூபேண கௌந்தேய துஷ்பூரே ணானலேனச*

*நிரப்பிட முடியாமல் நிலைத்திருக்கும் ஆசையும் போதுமே என்று எண்ணாத ஆசையும் ஞானிக்கு சத்துருவாக இருந்துகொண்டு ஞானத்தை மூடிக்கொள்ளும்.*

*குந்தியின் மைந்தா:-*

''நிரப்பிட முடியாது
நிலைத்திருக்கும் காமமும்!
போதுமே யென்று
எண்ணாத ஆசையும்
ஞானத்தை மூடிடும்
ஞானிக்கு சத்துரு!''

நெருப்பில் நெய் ஊற்ற ஊற்ற அது எரிந்து கொண்டே இருக்கும். உலக இன்பங்களில் ஆசை வளரும்போது அது பேராசையாக வளர்ந்துகொண்டே போகும்.

ஒரு நாட்டின் மேல் யுத்தம் செய்து அந்த நாட்டை அடிமைப்படுத்தி விட்டால், மற்ற நாடுகளையும் கைப்பற்ற வேண்டுமென்று முயற்சி செய்வதும் கைப்பற்றுவதும் மன்னர்களின் பேராசையாக இருந்தது.

பணத்தின் மேல் ஆசையுள்ளவன் ஆயிரம், லட்சம், கோடியென்று தனது பணத்தைப் பெருக்கிக்கொண்டே இருக்கின்றான். இவனது பண ஆசை பேராசையாக வளர்ச்சி அடைகின்றது.

ஆசையென்பது திருப்தியை உண்டுபண்ணாது. அது விரிவடைந்து கொண்டே போகக்கூடியது. உண்மை ஞானத்தைப் பெறவேண்டுமென்று முயற்சி செய்யும் விவேகம் உள்ளவர்களுக்கும் ஆசையாகப்பட்டது வழிவிடுவதில்லை. உள்ளத்தில் விவேகம், வைராக்கியம், பற்றற்ற தன்மை இவற்றை ஆசையானது நிலைக்க விடுவதில்லை. ஆகவே இந்த ஆசையென்பது உண்மை அறிவைப் புரிந்துகொள்ள முயற்சி செய்பவர்களுக்கு பகையானது எப்படிப்பட்ட திறமைகள் உள்ளவர்களாக இருந்தாலும் ஆசையென்பது அவர்களை வீழ்த்தி விடும் சக்தி படைத்தது.

இந்திரியம் விருப்பு, வெறுப்புக் கொண்டதாகவே இருக்கும். இவை மூலமாக ஏற்படும் பேராசைதான் காமம் என்று பகவான் குறிப்பிடுகின்றார்.

பகவானை அடைய வேண்டும். நாம ஜபம் செய்ய வேண்டும், தியானம் செய்ய வேண்டும், ஸாத்வீகமான கர்மங்கள் அனுஷ்டிக்க வேண்டும் என்பன போன்ற மங்களமான நல்ல விருப்பங்கள் பேராசையல்ல. அவை மனிதனின் மேன்மைக்கு காரணமாகின்றன. விஷய போகங்களில் உள்ள ஆசைகளை அழிக்கின்றன.

ஒவ்வொரு ஆன்மாவிலும் ஞானம் என்ற தெய்வீக அறிவு இருக்கின்றது. இவ்வுலகில் நமக்கு ஏற்படும் ஆசைகளும் பேராசைகளும் நம்மிடமுள்ள ஞானத்தை வெளியே தெரியாமல் மூடிக் கொண்டிருக்கின்றன. உலக ஆசையில் நாம் மயங்கி இருப்பதால் இந்த ஞானம் பிரகாசிக்காமல் இருக்கின்றது. ஸாதுக்களின் தொடர்புகளாலும், சாஸ்திரங்களின் உபதேசத்தினாலும் பரமாத்மாவைப் பற்றிய ஞானம் ஏற்படும்போது அறிவானது ஆசைகளை அழித்துக் கொண்டு தானாகவே ஒளி வீசி நிற்கும்.

# ஓம் - 40

*இந்த்ரியாணி மனோபுத்தி ரஸ்யாதிஷ்டான முச்யதே*
*எதைர் விமோஹய த்யேஷ ஞானமாவ்ருத்ய தேஹினம்*

*மனம், புத்தி, இந்திரியம் இவை மூன்றும் ஆசைக்கு இருப்பிடமாய் இருக்கின்றன. இந்த மூன்றின் வழியாக ஆசையானது ஞானத்தை மறைத்து மனிதனை மயக்குகிறது.*

''மனம் புத்தி இந்திரியம்
இவை மூன்றும்;
ஆசைக்கு இருப்பிடமாய்
அமைந்த தனால்!
ஞானத்தை மறைத்திங்கு
மயக்கிடும் மனிதனையே!''

நாம் இவ்வுலகில் அழகான பெண்களைப் பார்க்கும் போதும், ருசியான உணவை உண்ணும்போதும், அழகிய பொருட்களைப் பார்க்கும்போதும், கவர்ச்சியான உடைகளைக் காணும்போதும் அவற்றால் நாம் கவரப்பட்டு ஆசை உண்டாகின்றது. இந்த ஆசையானது உடனே மறைந்து விடுவதில்லை. இவை நம்மிடம் தங்கி விடுகின்றன. புலன்கள், மனம், புத்தி இந்த மூன்றிலுமே ஆசையானது தங்குகின்றது.

புலன்கள், மனம், புத்தி இவற்றை மனிதன் தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரவேண்டும். தனக்கு ஏற்படும் ஆசைகளுக்கு விளக்கம் தேடிக் கொள்ள வேண்டும். தனது பொருளாதாரத்திற்கும், தனது தகுதிக்கும் உட்பட்டு ஆசைகள் ஏற்படும்போது அதை மனிதனால் நிவர்த்தி செய்து கொள்ள

முடியும். ஆனால் தனது தகுதிக்கும் சக்திக்கும் அப்பாற்பட்டு ஆசையை வளர்த்துக் கொள்ளும்போது ஸ்வதர்மத்திற்கு அப்பாற்பட்டு செயற்பட மனிதன் முயற்சிகள் செய்கின்றான். அப்போதுதான் மனநிம்மதியை இழந்து வேதனைப்படுகின்றான். மனதில் ஆசை குடிகொள்ளும்போது மனதை ஆசை ஆக்கிரமித்து அடிமைப்படுத்திக் கொள்கின்றது. அதன் பிறகு ஆசை அதன் வழியே மனதை இழுத்துச் செல்கின்றது.

ஒவ்வொரு விஷயத்தையும் முடிவு செய்வது புத்தி. ஆசை இங்கேயும் குடிகொள்ளும்போது ஆசைக்கு வேண்டியது போல்தான் புத்தி முடிவுகளை செய்கின்றது. ஆகவேதான் நாம் பல பிரச்சினைகளையும் வாழ்க்கையில் சந்திக்கின்றோம்.

இருவர் பேசும்போது அவர்களின் ரகசியங்களைக் கேட்க செவியைப் பயன்படுத்துகின்றோம். மற்றவர்களின் ரகசியங்களைக் கேட்க வேண்டும் என்ற ஆசை இங்கே செயல்படுகின்றது.

ஒரு பெண் பக்கத்தில் அமரும்போது உரசிப் பார்க்கத் தோன்றுகிறது. அப்போது சர்மம் செயல்படுகின்றது. அந்த மென்மையான உணர்வு ஆசையைத் தூண்டிவிடுகின்றது.

ஒரு கவர்ச்சியான பொருளைப் பார்க்கும்போது அதை வாங்க வேண்டும் என்ற ஆசை உண்டாகின்றது. கையில் பணம் இல்லையே என்ற கவலையும் ஏற்பட்டு விடுகின்றது.

எல்லாவிதமான உணவுகளையும் சுவைக்க வேண்டும் என்ற ஆசையில் உணவுகளை உண்பதால் நீரிழிவு, இரத்தக் கொதிப்பு போன்ற நோய்களும் புதிய புதிய நோய்களும் உண்டாகி வேதனை அளிக்கின்றது.

தவறான வார்த்தைகளைப் பேசும்போது ரகளை ஏற்படுகின்றது. மற்றவர்கள் பொருட்கள் மேல் ஆசைப்பட்டு பொருட்களைத் திருட கைகளை உபயோகிப்பதும், மற்றவர்களைத்

தாக்க கை கால்களை உபயோகிப்பதினாலும் பிரச்சினைகளும் வேதனைகளும் உண்டாகின்றன. இவை எல்லாவற்றிற்குமே ஆசைதான் காரணம்.

ஆசையானது ஒருவனை மயக்கி ஞானத்தை மறைத்து பரமாத்மாவை அடைவதில் இருந்து வஞ்சித்து தனக்கு அடிமை ஆக்கிவிடுகின்றது. மதிப்பிட முடியாத மனித வாழ்க்கையை பாழாக்கி விடுகிறது. ஆசை பேராசையாக மாறி நம்மிடம் குடிகொள்ளுவதால் நம் உள்ளேயே இருந்து கொண்டு நமக்கு எதிரியாக செயல்படுகின்றது.

## ஓம் - 41

*தஸ்மாத்வ மிந்த்ரியாண்யாதௌ நியம்ய பரதர்ஷப*
*பாப்மானம் ப்ரஜஹி ஹ்யேனம் ஞான விக்ஞான நாசனம்*

*முதலில் இந்திரியங்களை அடக்கி ஞான விஞ்ஞானத்தை அழிக்கின்ற பாப வடிவமான ஆசையை அறவே ஒழித்து விடு.*

''முற்றுகையிட்டு
முதலில் இந்திரியங்களை!
அழிக்கும் ஞான விஞ்ஞானத்தை
பாபவடிவமாம் ஆசையை!
அறவே ஒழித்து விடு
பரத வீரனே!''

பகவானுடைய நிர்க்குண, நிரரகாரமான தத்துவத்தின் பெருமை, மகிமை, ரகசியம் இவற்றை உள்ளபடி அறிவது ஞானம். குணங்களோடு கூடியதும், உருவமற்றதுமான பகவத் ஸ்ரூபம் அல்லது தெய்வத் திருமேனி பெற்ற பகவத் தத்துவத்தின் லீலை ரகசியம், கல்யாண குணங்கள், மகிமை, பெருமை இவற்றைப் பற்றிய உண்மையான அறிவு விஞ்ஞானம் எனப்படும்.

இந்த ஞானத்தையும் விஞ்ஞானத்தையும் உள்ளபடி நாம் பெற்றுவிட்டால் உலகம் என்றால் என்ன? பிரபஞ்சம் என்பதின் பொருள் என்ன? நாம் யார்? இறைவன் யார்? என்பதையெல்லாம் உணர்ந்து தெளிவடைய முடியும்.

இவ்வுலகில் மனிதர்கள் வேதனையான வாழ்க்கை ஏன் வாழ வேண்டும்? இன்பமான வாழ்க்கையை மனிதனால் வாழ

முடியும். அப்படியானால் அது எப்படி சாத்தியம்? இவ்வுலகில் எப்படிப்பட்ட பிரச்சினைகள் ஏற்பட்டாலும் தாமரை இலையில் தண்ணீர் இருப்பதைப் போல் பிரச்சினைகள் நம்மைப் பாதிக்காமல் அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ முடியும். அதற்கு இந்த ஞானத்தையும், விஞ்ஞானத்தையும் உள்ளபடி நாம் பெற வேண்டும்.

இந்த ஞானத்தையும் விஞ்ஞானத்தையும் பெற வேண்டும் என்ற ஆவல் நம்மிடம் உண்டு. ஆனால் ஆசையானது நம்மை மயக்கி நமது ஆவலை அமுத்தி வைத்து நம்மை திசைதிருப்பி விடுகின்றது.

ஆசை முதலில் புலன்களில் நுழைந்து அவற்றின் மூலம் மனதில் தங்கி புத்தியை மயக்கி ஜீவாத்மாவையும் மயக்குகிறது. ஆசை, மனம், புத்தி, புலன் ஆகியவற்றில் தங்கி விடுகிறது. ஆகவே உலக ஆசைகள் மட்டுமே நம்மை ஆக்கிரமித்துக் கொள்கின்றன.

ஆசைகள் முதலில் புலன்களில் நுழைவதால் புலன்களை நமது கட்டுப்பாட்டிற்குக் கீழ் கொண்டு வர வேண்டும். புலன்கள் நமது கட்டுப்பாட்டிற்குக் கீழ் வந்துவிட்டால் மனதுக்கு ஆசை செல்லும் வழி அடைக்கப்படும்.

ஞானத்தையும் விஞ்ஞானத்தையும் வேரோடு அழித்து விடும் சக்தி ஆசையிடம் இல்லை. ஏனெனில் அஞ்ஞானத்தில் இருந்துதான் ஆசை உண்டாகிறது. உள்ளத்தில் உள்ள ஞானம் ஒரு தடவை வெளிப்பட்டு விட்டால், அஞ்ஞானத்தால் ஏற்பட்ட ஆசை காற்றடித்த சருகுபோல் பறந்துவிடும். ஆசையென்பது மதிப்பற்ற ஒன்று என்ற உண்மை புரிந்துவிடும். அதன் பிறகு ஞானம், விஞ்ஞானம் என்ற ஒளி பிரகாசித்துக் கொண்டே இருக்கும். அழிந்து விடாது; அழியக்கூடியதுமில்லை.

அஞ்ஞானத்தில் இருந்து உண்டாகும் ஆசையிலிருந்து விடுபட பயப்படத் தேவையில்லை. இது மிகவும் இலகுவாக

செய்யக்கூடியது. கோவிலுக்குச் செல்வது, இறைவனைப் பற்றிய புத்தகங்களைப் படிப்பது, கோவில்களில் கதாகலாட்சேபம் கேட்பது, இறைவனைப் பற்றி சிந்திப்பது, கேட்பது, பாடுவது, நம்மைவிட பொருளாதார ரீதியிலோ, அறிவிலோ, இயற்கையாலோ பாதிக்கப்பட்டவர்களுக்கு நம்மால் முடிந்த உதவிகளைச் செய்வது, சாஸ்திர முறைகளின்படி வாழ்க்கையை அமைத்துக் கொள்வது, நமக்காக விதிக்கப்பட்ட கடமைகளில் ஈடுபட்டு மனம், புத்தி, புலன்களை அதில் ஈடுபட வைப்பது. இப்படிப்பட்ட வாழ்க்கையை அமைத்துக் கொண்டு இவற்றைச் செய்ய வேண்டும் என்ற வைராக்கியத்தையும் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இப்படி அமைத்துக் கொள்ளும் வாழ்க்கை முறையால் புலன்களையும் மனதையும் வசப்படுத்தி ஆசைகளில் சிக்கிக் கொள்ளாமல் வாழ முடியும்.

நம்மில் அதிகமானோர் வெள்ளி, செவ்வாய் கிழமைகளிலும் விசேஷ நாட்களிலும் கோவிலுக்குச் சென்று இறைவனை வணங்குவதை வைராக்கியத்தோடு தவறாமல் செய்கின்றனர். அதோடு பெற்றோர், குடும்பம் என்று அவர்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளையும் முறையாகச் செய்கின்றனர். காலையில் பக்திப் பாடல்கள் கேட்பதும், இறைவனை வணங்குவதும், இரவு படுக்கப் போகும் முன் இறைவனை வணங்குவதும் வழக்கமாகக் கொண்டுள்ளனர். இவர்கள் ஸ்வதர்மத்தைக் கடைப்பிடித்து சுயநலமில்லாமல் வாழப் பழகிக்கொண்டால் இலகுவாக ஞானத்தை வெளிக் கொணர்ந்து பிரகாசிக்கச் செய்ய முடியும். அதனால் இவர்கள் வாழ்க்கைத் தத்துவத்தையும், இறைவனையும் புரிந்து கொள்ள முடியும்.

# ஓம் - 42

*இந்த்ரியாணி பராண்யாஹு ரிந்ரியேப்ய: பரம்மந:*
*மனஸஸ்து பரபுத்திர்யோ புத்தே: பரதஸ்து ஸ:*

*உடலை விட உயர்ந்தது புலன் (இந்திரியம்). அதைவிட மேலானது மனம். மனத்தையும் விட மேலானது அறிவு. அறிவையும் விட மேலானது ஆத்மா.*

"உடலினும் உயர்ந்தது
புலனே!
புலனிலும் உயர்ந்தது
மனமே!
மனத்திலும் உயர்ந்தது
அறிவே!
அறிவிலும் உயர்ந்தது
ஆத்மாவே!"

உடல் நம் கண்ணால் பார்க்கக் கூடியது. அதன் செயற்பாடுகள் நமது கண்களுக்குத் தெரிகிறது. ஆனால் புலன்களின் இயக்கம் நமது கண்களுக்குத் தெரிவதில்லை. சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்பன கண்ணுக்குப் புலப்படுவதில்லை. ஆனாலும் இவை நம்மை இயக்குகின்றன. இவற்றின் விருப்பப்படி நம் உடலை இயக்குகின்றன. இவை மிகவும் நுண்ணியவை; பலம் மிகுந்தவை.

நுண்ணிய புலன்களைக் காட்டிலும் மனம் சக்தியுள்ளதாக இருக்கின்றது. மனம் சில நொடிகளில் பிரபஞ்சம் முழுவதையும் சுற்றிவரக்கூடியது. நம்மிடம் இருக்கும் மனம் இதே நொடியில்

சந்திர மண்டலம், சூரிய மண்டலம் எல்லாவற்றையும் சுற்றி விட்டு அதே நொடியில் நம்மிடம் வந்து விடும்.

புத்தி மிகவும் கூர்மையானது. நம்மை பல வழிகளில் திசைதிருப்பிவிடக்கூடியது. உலக இன்பங்களில் ஆசை வந்துவிட்டால் அங்கே புத்தி வேகமாக இயங்கி, பல வழிகளில் உலக போகத்தை அனுபவிக்க உதவி செய்கின்றது. பணம் சேர்ப்பது, கொலை, களவு, கற்பழிப்பு, குடித்து கூத்தாடுதல் என்று எல்லாவற்றிலுமே வேகமாக இயங்குகின்றது.

மனது ஆன்மீகத்தை நாடினால் உயர்வான சிந்தனைக்கு புத்தி துணை நிற்கின்றது. தத்துவங்களைப் படிக்கவும், இறைவனைப் பற்றி ஆராய்ச்சி செய்யவும், பொது சேவையில் ஈடுபட்டு மற்றவர்களுக்காக வாழவும், நல்லதைச் செய்யவும், நமது கடமைகளை இவ்வுலகில் ஆற்றவும் புத்தி மிகவும் பயன் உள்ள உதவிகளைச் செய்கின்றது. ஆகவே மனதைக் காட்டிலும் புத்தி உயர்வானது. புத்தி மனிதனை பரிசுத்தமாக்கக் கூடியது.

அறிவை விடவும் உயர்ந்தது ஆன்மா. ஆன்மா எல்லா வற்றிற்கும் ஆதாரம், இது பிரகாசப்படுத்துவது, தூண்டுவது, நுண்ணியது, எங்கும் நிறைந்தது, சிறந்தது, பலம் மிக்கது, தெய்வீகமானது. ஆகவே இதுவும் மிகவும் மேலானது.

ஆத்மா - தேருக்கு உடையவன்

புத்தி - தேரோட்டி

உடல் - ரதம்

மனம் - கடிவாளம்

புலன்கள் - குதிரைகள்

ஒலி முதலிய நுகர்பொருள் ஐந்தும் - குதிரைகள் போகும் வழி

தேரோட்டி கடிவாளத்தை முறையாக இழுத்துப் பிடிப்பதால்தான் நாலு பக்கமும் சிதறி ஓடக்கூடிய குதிரைகள்

வசப்பட்டு குறிப்பிட்ட இடத்தைச் சென்றடைய முடிகிறது. அதேபோல்தான் புத்தி விவேகத்துடன் ஸ்வதர்மத்தின்படி மனதை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தால் புலன்கள் வசப்படும். புலன்கள் வசப்பட்டால் ஆத்மாவை உணர்ந்து பரமபதத்தை அடைய முடியும்.

தேரில் அமர்ந்திருப்பவனை தேரோட்டி தனது கடிவாளத்தைப் பயன்படுத்தி மேடுபள்ளங்கள் நிறைந்த வழியில் குதிரைகளை வேகம் குறைத்தும், கூட்டியும் பாதுகாப்பாக குறிப்பிட்ட இடத்தில் இறக்கிவிடுவது போல், புத்தியானது விவேகத்துடன் செயல்பட்டு மனதை சரியான வழியில் ஸ்வதர்மத்தின்படி திசை திருப்பினால் புலன்கள் கட்டுப்பாட்டுக்குள் வந்து விடும். வாழ்க்கை புனிதமானதாகி ஆத்மா இறைவனை அடையும்.

## ஓம் - 43

*ஏவம் புத்தே: பரம் புத்வாஸம் ஸ்தப்யாத்மானமாத்மனா*
*ஜஹி சத்ரும் மஹாபாஹோ காமரூபம் துராஸதம்*

*நீண்ட புஜங்களை உடையவனே! இவ்விதம் புத்தியைக் காட்டிலும் ஆத்மா மிகவும் மேலானது. நுண்ணியது, பலம் உள்ளது என்று அறிந்து புத்தியினால் மனதை வசப்படுத்தி ஆசையென்ற வெற்றி கொள்ள முடியாத சத்ருவைக் கொன்று விடு.*

''அறிவிலும் உயர்ந்தது
ஆத்மாவென்றறிந்து
அறிவினால் மனதை
அடிமைப்படுத்தி நீ!
அழிக்கவே முடியாத எதிரியாம்
ஆசையை அழித்து விடு!''

மிகவும் பாசத்தோடு தன் மகனை வளர்க்கும் தந்தை அவனை டாக்டராகவோ, வக்கீலாகவோ, விஞ்ஞானியாகவோ ஏதோ ஒரு உயர்ந்த இடத்திற்கு வந்துவிட வேண்டும் என்ற நோக்கில் தன்னால் முடிந்த முழு முயற்சிகளும் செய்து வளர்த்து அவன் நினைத்ததைப் போல் வெற்றி பெறும் வேளையில் எதிர்பாராத விபத்தில் இறந்து விட்டால் தந்தை வேதனைப்படுகின்றான். ஆனால் காலப்போக்கில் அந்த வேதனை சிறிது சிறிதாகக் குறைந்து விடுகின்றது. காரணம் எவ்வளவு வேதனைப்பட்டாலும் மகன் திரும்பி வந்து தனது ஆசைகளை நிறைவு செய்யப் போவதில்லை என்பதை உறுதியாக நம்புகின்றான். மனிதனுக்கு உலக இயக்கத்தில்

தெளிவு ஏற்பட்டு விட்டால் வேதனைகள் மனிதனைத் தாக்குவதில்லை.

மனிதன் வேதனைப்படுவதெல்லாம் தனது சக்திக்கு அப்பாற்பட்டு ஆசைகளை வளர்த்துக் கொள்வதனாலேயே ஏற்படுகிறது. தன்னிடம் நூறு ரூபாய் இருந்தால் அதற்கு உட்பட்டே தனது செலவுகளை கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும். அதற்கு அப்பாற்பட்டு எதையாவது செய்ய முயலும்போதுதான் பிரச்சினைகள் தொடங்குகின்றன.

ஒருவன் வசதியான வீடு, கார், வேலைக்கு நான்கு ஆட்கள் என்று ஆடம்பரமான வாழ்க்கை வாழ்வதைப் பார்த்து ஒரு ஏழை கடன் வாங்கி அவனைப் போல் வசதிகளை ஏற்படுத்திக் கொள்ளும்போது, கடன் தொல்லையால் வேதனைப்பட்டு பிறகு வீட்டையும், சொத்துக்களையும் விற்று பழைய நிலைமைக்கே வந்து விடுகின்றான். இந்த இடைவெளிக்குள், மனஉளைச்சலும், அவன் படுகின்ற பாடும் நைந்துபோன மலரைப் போல் அவன் உள்ளத்தை ஆக்கி விடுகின்றது. இப்படிப்பட்ட சம்பவங்கள் வாழ்க்கையில் நடந்து முடியும்போது அவனுக்கு வயதாகியிருக்கும். ஒரு நாளாவது இவ்வுலகில் வாழ்ந்தோமா என்று அவனை அவனே கேட்டுக்கொள்ளும் நிலைக்கு வந்து விடுவான். இதற்கெல்லாம் தனது தகுதிக்கு அப்பாற்பட்ட பேராசைதான் காரணம்.

மனைவி, குழந்தைகள் என்று பாசமான குடும்பத்தை உடைய ஒருவன் மற்றொரு அழகியின் மேல் ஆசை கொண்டு அவள் பின்னால் சென்றால், தனது செல்வத்தையும், மனைவி, குழந்தைகளின் பாசத்தையும் இழந்து காலப்போக்கில் அமைதி இல்லாத வேதனையான நிலையை அடைகின்றான். எல்லாமே ஆசையால்தான் ஏற்படுகின்றது.

மனிதன் அறிவைப் பயன்படுத்த வேண்டும். பறவைகள் உயரே பறப்பதைப் பார்த்து விட்டு, அதுபோல் நாமும் மாடியில் இருந்து குதித்தால் முட்டாள்தனம். அறிவைப் பயன்படுத்தி விமானத்தைக் கண்டுபிடித்தது, தகுதியை ஏற்படுத்திக் கொண்டது அவன் பறப்பதற்கு.

நமக்கு ஆசைகள் ஏற்படும்போது அனுபவிக்கக்கூடிய அளவு பொருளாதாரத்திலோ, அறிவிலோ, அது சம்பந்தப்பட்ட வேறு தகுதிகளோ நம்மிடம் உண்டா என்பதை அறிவைப் பயன்படுத்தி சிந்தித்துப் பார்க்க வேண்டும். எல்லா வழிகளிலுமே பிரச்சினை இல்லாமல் அந்த ஆசையை அனுபவிக்க முடியும் என்றால் மட்டுமே முயற்சி செய்ய வேண்டும்.

ஆசைகளால் நமக்கு ஏற்படும் பாதிப்புகள் பற்றியும், வேதனைகள் பற்றியும் தெளிவான அறிவை நாம் பெற்று விட்டால் உலக வாழ்க்கை மகிழ்ச்சியாக இருக்கும். ஆகவே ஆசைகள் ஏற்படும்போது அறிவைப் பயன்படுத்தி அதன் கட்டுப்பாட்டிற்கு ஆசையைக் கொண்டு வரவேண்டும். ஆசையின் கட்டுப்பாட்டிற்குள் அறிவு சென்று விடக்கூடாது. குழந்தையாக இருக்கும்போதே நெருப்பைத் தொட்டால் சுடும் என்ற தெளிவு மனதில் பதிய வைத்திருப்பதைப் போல் ஆசை, சுயநலம் என்பனவற்றின் தெளிவான பதிவுகளையும் மனதில் வைத்துக் கொள்ள வேண்டும்.

உலகில் நாம் எதையாவது பெற்றுக் கொள்ள முயற்சி செய்யும்போதும், சமுதாயத்தில் உயர்ந்த இடத்திற்கு வர வேண்டும் என்று முயற்சி செய்யும்போதும், அதைப் பற்றிய அறிவை வளர்த்து தகுதியை உயர்த்தி ஸ்வதர்மத்தின் வழி நின்று வெற்றி கொள்ள வேண்டும்.

ஆத்ம தத்துவம் மிகவும் ரகசியமானது. மாமனிதர்களால் தெளிவாக்கப்பட்ட பின்னரும், யாரோ ஒரு நுண்ணறிவாளனான


மனிதனே இதை அறிந்துகொள்ள முடியும். இந்த ஆத்மா வெளிப்படையாகத் தெரியாது. நுண்ணிய, கூர்மையான புத்தியுடையவர்களாலேயே இதை அறிய முடியும் என்று சொல்லப்படுகிறது. ஆத்மா எல்லையற்ற பலமுடையது. மனம், புலன்கள், புத்தியின் ஊடாக ஏற்படுத்தும் ஆசையால் சூரியனை மேகங்கள் மூடிக் கொள்வதைப் போல் ஆத்மா மூடப்பட்டுள்ளது. மேகம் போன்ற ஆசைகளை அறிவைக் கொண்டு அகற்றி விட்டால் ஆத்மா என்ற சூரியன் பிரகாசிக்கும். அதன் ஒளியில் மேகங்கள் வண்ண வண்ணமாக பிரகாசிப்பதைப் போல் புத்தி, மனம், புலன்கள் எல்லாமே ஆன்மாவால் பிரகாசிக்கும்.

மனிதனுக்கு ஆசைகளை வெற்றி கொள்ள சக்தி இருக்கின்றது என்பது உறுதியானது என்று பகவான் கூறுகின்றார். 'ஆசை எவ்வளவுதான் வெற்றி கொள்ள முடியாத, அடக்க முடியாத சத்துருவாக இருக்கட்டுமே, நீ வெகு எளிதாக அதை அழித்து வெற்றி பெற முடியும்' என்று அர்ஜுனனிடம் பகவான் கூறுகின்றார்.

**ஓம்.**

# கர்மயோகம்

(விளக்கவுரை)



வே. குமாரவேல்

மணிமேகலைப் பிரசுரம்